# சாயி மார்க்கம்

ஆகஸ்ட் - டிசம்பர் 2019



## இளைஞர் மாநாடு விசேட மலர்

சத்திய சாயி சர்வதேச நிறுவனம் ~ ஸ்ரீலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சஞ்சிகை




விசேட அதிதியை அழைத்து வரல்





பிரசாந்திக் கொடியேற்றம்




கண்டிய நடன வரவேற்பும், மங்கல விளக்கேற்றலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 25
இதழ்: 61

ஆகஸ்ட்
டிசம்பர்
2018

## உள்ளே......


| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 02 |
| தேசிய இளைஞர் மாநாட்டு அறிக்கை | 03 |
| தேசிய இளைஞர் மாநாடு – முதலாம் நாள் | 05 |
| அனுபவ பகிர்வு | 07 |
| கருத்தரங்கம் | 11 |
| அனைவரிலும் அன்பாயிரு அனைவருக்கும் சேவை செய் | 13 |
| அனுபவங்கள் | 17 |
| தேசிய இளைஞர் மாநாடு – இரண்டாம் நாள் | 21 |
| சமநிலை ஆற்றல் வகுப்பு | 24 |
| காயத்ரீ மந்திரத்தின் மகிமை | 25 |
| கேள்வி – பதில் | 26 |
| சத்திய சாயி பாடசாலையில் கிருஸ்ணமூர்த்தி | 29 |
| யாழ் நிலையத்தில் கிருஸ்ணமூர்த்தி | 31 |
| ஆசிரியவாண்மையில்.ச.ச.ம.மே.கல்வி | 42 |
| பரமனின் குன்று | 45 |
| கஸ்தூரிக்கு புதுவருட பிரார்த்தனை | 48 |
| பிரசாந்தி வரலாற்று பதிவு | |
| பதிவு 1 – குடை பிழக்கும் பிள்ளையார் | 49 |
| பதிவு 2 – தபோவனம் | 50 |
| பதிவு 3 – கிண்டி | 51 |
| அன்புடமை | 53 |
| பதினாறு பேறுகள் | 54 |
| டாக்டர்.நரேந்திரநாத் ரெட்டியின் செவ்வி | 55 |


**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442

இலங்கையில் தனிப்பிரதி ரூபா 100.00
வருடச் சந்தா ரூபா 250.00 (2 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Sai Markam
Sathya Sai Seva Organisation (NZ)
A/C No: 016010004771
**SWIFT CODE: HBLILKLXXXX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.

**ஒரே ஒரு மதம் அது**
**அன்பென்னும் மதம்**

TRUTH
RIGHT CONDUCT
PEACE
LOVE
NON VIOLENCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலையங்கம்

# போதனையா? உருவமா?



ஒருமுறை இராமகிருஷ்ண மிஷன் சுவாமியை அமெரிக்காவிலுள்ள தேவாலயத்தில் உரை நிகழ்த்த அழைத்தார்கள். மிஷன் சுவாமி இயேசுபிரானைப் பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அன்று தேவாலயம் கிறிஸ்தவ மக்களால் நிரம்பியிருந்தது. அவர் குருவின் ஆசியை வேண்டி மக்களை வாழ்த்தித் தனது உரையைத் தொடங்கினார். "மக்களே இயேசு பிரானைக் கும்பிடாதீர்கள்" அங்கு கூடியிருந்த மக்கள் அதிருப்தியைத் தெரிவித்தார்கள். அவர் தொடர்ந்து "நான் எனது வசனத்தை முடிக்கவில்லை. எல்லோரும் இயேசு பிரானாக மாறவேண்டும்" என்று சொன்னதும் மக்கள் அமைதியானார்கள்.

மிஷன் சுவாமி கூறியதன் அர்த்தம் நாம் மகான்களையும் கடவுளையும் வணங்குகிறோம். ஆனால் அவர்களின் போதனையை மறந்து விடுகிறோம். பின்பற்றுவதுமில்லை. முரண்பாடு அடைகிறோம். இது வரலாற்றில் எல்லா மதங்களிலும் நிகழ்ந்துள்ளது. உதாரணமாக கிறிஸ்தவ வேத நூலாகிய விவிலியத்தில் சொன்ன கருத்தை ஒவ்வொரு விதமாக விளங்கி முரண்பாடடைந்து பல பிரிவுகளாக பிரிந்துள்ளனர். புத்த மதமும் இரண்டு பெரிய பிரிவுகளாக பிரிந்தது. இஸ்லாமிய மதமும் மூன்று பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. இந்து மதத்திலும் பலபிரிவுகள் உள்ளன. இப்படித்தான் போதித்ததைப் பிழையாக விளங்கி விமர்சிப்பதைத் தவிர்ப்பதற்காகவே சுவாமி சத்திய சாயி நிறுவனத்தை உண்டாக்கி அதற்கென கட்டுக்கோப்பையும் தந்துள்ளார். சுவாமியின் வாழ்க்கை, போதனை, நாமம், உருவம் இந்தக்கிரமத்திலே நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பகவானின் பெருமையும் செயற்பாடுகளும் பிரமாதமாகப் பரவி வெளிப்படுகின்றன. இதனால் முரண்பாடும் பிரிவினையும் வராமலிருக்க பகவானையே பிரார்த்திப்போமாக.

ஜெய் சாயிராம்

-ஆசிரியர்

உசாத்துணை தரவுகள் :
இராமகிருஷ்ண விஜயம், மார்ச் 2017.
புட்டபர்த்தியில் நிகழ்ந்த சத்சங்கங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இளைஞர் மாநாட்டு அறிக்கை

இம் முறை 2018 இற்குரிய தேசிய இளைஞர் மாநாடு ஹட்டன் பிரதேசத்தில் 'பத்தன' என்னும் இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீபாத ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 350 இளைஞர் யுவதி களுடன் 'ஆதிமூலமே என்னை இயக்கும் சக்தியாகட்டும்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்றது. ஆன்மீக சாதனைமூலம் சுவாமியுடனான தொடர்பை வலுப்படுத்தவும் இளைஞர்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் சவால்களை திறமை யாகவும் சமயோசித மாகவும் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தும் முகமாகவும் ஒழுங்கு படுத்தப் பட்டிருந்தது. புட்ட பர்த்தியில் நடக்க விருக்கும் மகா நாட்டின் தொனிப்பொருள் 'உள்ளிருந்து ஒரு அழைப்பு' என்பதேயாகும்.

இம் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக சுவாமியின் பழைய மாணவர்களில் ஒருவரான வெங்கட்ராமன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சென்னை யிலிருந்து வருகை தந்திருந்தார். நாட்டின் சகல பிராந்தியத் திலிருந்தும் ஆண், பெண் என இருபாலாரும் பலத்த ஆர்வத்துடனும் மகிழ்வுடனும் கலந்து கொண்டிருந்தனர். மாநாடு நடைபெற்ற இடத்தில் சீதோஷ்ண நிலை மிகவும் குளிராக இருந்தாலும் அதைப் பெரிதாக பொருட்படுத்தாமல் நிகழ்வுகளில் உற்சாகமாக கலந்துகொண்டிருந்தனர். அத்துடன் இயற்கை வனப்புநிறைந்த அந்தப் பகுதி அவர்களின் மனதிற்கு மிகவும் ரம்மியத்தை கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

முதல்நாள் நிகழ்வுகளில் காலைப் பிரார்த்தனை, 5.30 மணியளவில் ஓம்காரம், சுப்ரபாதம், வேதபாராயணம் மற்றும் பஜனையுடன் ஆரம்பமானது. 8.00 மணியளவில் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினைரை வேத கோஷத்துடனும் கண்டிய பாரம்பரிய மேள வாத்தியத் துடனும் வரவேற்று பிரசாந்திக் கொடி இலங்கைத் தேசியக் கொடி மற்றும் மாநாட்டுக்கொடி என்பன சங்கு நாதத்துடன் ஏற்றப்பட்டன.




சிறப்பு விருந்தினர் சகோ. வெங்கட்ராமன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இலங்கை மத்திய இணைப்பாளர் சகோ. விக்னராஜா மனோகரன், தேசிய இளைஞர் இணைப்பாளர் டாக்டர் ஜெகதீஸ்வரன் தனேஷ்குமார் மற்றும் தேசிய சபை அங்கத்தவர்கள் சுவாமியை நமஸ்கரித்த பின் மங்கள விளக்கேற்றினர்.

வரவேற்புரையை தேசிய இளைஞர் இணைப்பாளர் நிகழ்த்த தலைமையுரையை சகோ. விக்னராஜா மனோகரன் அவர்கள் நிகழ்த்தினார். அதன் பின்னர் சிறப்பு விருந்தினரின் உரையுடன் நிகழ்வுகள் களைகட்ட ஆரம்பித்தன. சபையோரின் எள்ளளவு கவனத்தையும் தன்பால் ஈர்ப்பதில் சகோ. வெங்கட்ராமன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஹாஸ்யமான நகைச்சுவை கலந்த உரை பெரும்பங்காற்றியிருந்தது. சுவாமியுடனான தனது அனுபவங்களை அவர் விவரித்த விதம் சபையோரை பிரசாந்தி நிலையச் சூழலுக்கு அழைத்துச் சென்றது. சிறு வயதிலிருந்தே சாயி குடும்பமாக இருந்தாலும் அவரது தந்தையார் கால மாகியவுடன் அவர் எதிர்கொண்ட சவால்களை சத்தியசாயி சேவா நிறுவனத்தில் இணைந்திருந்ததன் மூலம் எவ்வாறு வெற்றிகொண்டார், அதன்பின் புட்டபர்த்தியில் பல்கலைக் கழகத்தில் இணைந்ததன்பின் சுவாமியின் அன்பையும் அருளையும் எவ்வாறு அண்மையாகப் பெற்றிருந்தார் எனவும் மிகவும் உருக்கமாக விவரித்தார். பல இளைஞர், யுவதிகளுக்கு இது சிறந்த தொரு படிப்பினையாகவும் அனுபவமாகவும் அமைந்தது.

அதன்பின் இளைஞர் களுக்கான முதலாவது செயல மர்வில் அனைவரையும் "நேசி, அனைவருக்கும் சேவை செய்" என்பதை போதிப் பதிலும் பார்க்க நடைமுறைப் படுத்துவதிலுள்ள சவால்கள் எவை என்பதை குழுக்களாகப் பிரிந்து கல்வி வட்டத்தில் ஈடுபட்டனர். இம்முறை இளைஞர் மாநாட்டில் புட்டபர்த்தியில் நடை பெறுவதைப் போன்று இளைஞர் யுவதிகள் மற்றும் துறைசார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்கள் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். ஒவ்வொருவரும் தங்களது கருத்தை முன்வைத்த விதம் சபையோரின் பெருத்த வரவேற்பை பெற்றிருந்தது.

மாலை நிகழ்வுகள் இளைஞர்களுக்கான பஜனைப் பயிற்சி தொழினுட்ப பயிற்சி புகைப்படப் பயிற்சி, திட்ட அமுலாக்கல் பயிற்சி மற்றும் முதலுதவிப்பயிற்சி என்பவற்றுடன் ஆரம்பித்தன. இளைஞர் யுவதிகள் தங்களுக்கு விரும்பிய பயிற்சி நெறிகளில் குழுக்களாக கலந்துகொண்டனர். இத்தோடு இளைஞர்கள் பிராந்திய அளவில் தாங்கள் தயார்படுத்தி வந்த கலை நிகழ்வுகளையும் அரங்கேற்றினர். முதல்நாள் நிகழ்வுகள் 'பஜன் அந்தாக்ஷரி', நாம சங்கீர்த்தன, சகோ. எவன் மடுகல்ல (ஏற்பாட்டுக்குழு இணைப்பாளர்) அவர்களின் ஏற்பாட்டுரை என்பன மங்களாராத்தியுடன் பிற்பகல் 7.30 மணியளவில் நிறைவுக்கு வந்தன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலை 5.30 மணியளவில் காலைப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகின. சிறப்பு விருந்தினர் அவர்கள் குடும்பம் மற்றும் ஆன்மீக வாழ்க்கை என்பவற்றிற்கிடையிலான சமநிலையை இந்த அவசரமான உலகில் எவ்வாறு பேணுவது என்பது பற்றி உரையாற்றினார். அதைத் தொடர்ந்து இளைஞர் குழுக்களாகப் பிரிந்து அவரது உரையிலிருந்தும் தாம் தயார்படுத்தி வந்திருந்த குறிப்புகளை வைத்தும் கல்வி வட்டம் நடத்தினர். இரண்டாம் நாள் 'Panel discussion' சுவாமியின் போதனைகள் எவ்வாறு நாளாந்த வாழ்வில் கடைப்பிடிப்பது என்பது பற்றி அமைந்தது. மதியம் 'காயத்திரி மந்திரத்தின் சக்தி' மற்றும் சிறப்புகள் பற்றி சிறப்பு விருந்தினர் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அதனைத் தொடர்ந்து பிராந்திய இளைஞர் இணைப்பாளர்கள் தாங்கள் இப்பொழுது செய்து கொண்டிருக்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்திட்டங்கள் பற்றியும் விளக்கவுரை தந்தனர். இரண்டாம் நாள் நிகழ்வுகள் சிறப்பு விருந்தினரிடம் சபை யோரின் ஐய வினாக்கள், இலங்கை சத்திய சேவா நிறுவனத்தின் வேலைத்திட்ட வீடியோ படக்காட்சி மற்றும் மங்களாராத்தியுடன் நிறைவுக்கு வந்தது.




ஜெய் சாயிராம்

Dr. J. தனேஷ்குமார்.

தேசிய இளைஞர் இணைப்பாளர்.



சிறப்பு விருந்தினர் தமிழ் நாட்டிலிருந்து எங்கள் அழைப்பை ஏற்று வந்த அன்பன் வெ.கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பற்றிய குறுகிய தகவல்களாவன:

**B.A. - Madras University - 1988**

**MBA SSIHL 1990**

**MA Madras University - 1995**

சத்திய சாயி நிறுவனத்தில் பாலவிகாஷ் வகுப்புகளிலிருந்து இப்பொழுதும் மிகவும் துரிதமாக செயற்படுகின்றார். இதற்காக அவருக்கு வாழ்நாள் மேன்மையடைந்த பழைய பாலவிகாஷ் மாணவன் விருதைப் பெற்றார். சுவாமியின் செய்தியை பல நிலையங்களுக்குச் சென்று சொல்லுகின்றார். பெற்றோரியல், மேடைப்பேச்சு, பாலவிகாஷ் திட்டம் முதலியவற்றில் அநேக பயிற்சிப் பட்டறைகள் நடத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இளைஞர் மாநாடு - 15.12.2018

சுவாமியின் 18.11.1999 அருளுரையிலிருந்து "நன்நெறிகள், நற்செயல்கள், வாய்மை இவற்றைக் கடைப்பிடித்தும் போதித்தும் வாழ்பவரே இளைஞர். உண்மையில் அவர்களே உங்களுக்கும் எனக்கும் சிறந்த நண்பர்கள்.'

அடுத்ததாக இளைஞர் இணைப்பாளர் வரவேற்புரையை வழங்கினார். (சாராம்சம்)



குரு பிரம்மா குரு விஷ்ணு
குரு தேவோ மகேஸ்வரா
குரு சாக்ஷாத் பரப்பிரஹ்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நம:

சுவாமியின் பாதங்களை வணங்கி அனைவருக்கும் இனிய காலை வணக்கம், எங்கள் மத்தியில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கும் திரு கிரு. வெங்கட்ராமன் கிருஸ்ணமூர்த்தி அவர்களையும் ஸ்ரீலங்கா மத்திய சபைத் தலைவரையும், மத்திய சபை அங்கத்தவர் களையும், ஏனைய பிராந்திய இணைப்புக் குழு அங்கத்தினர்களையும் கதா நாயகர்களாக விளங்கும் இளைஞர், யுவதி களையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

இலங்கை மத்திய பிரதேசத்தில் அடைக்கப்படடிருக்கும் சீதா தேவியாரை இராமபிரான் மீட்டது போல், புலன்களால் கட்டுண்டு கிடக்கும் எம்மையும் சுவாமி விடுவிப்பார் என்பதே எமது பிரார்த்தனையாகும்.


இளைஞர்களுக்காகப் பல பயிற்சி முகாம்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. எமது மகாநாடு ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடக்கின்றது. இங்கே எமது நடத்தையைக் கொண்டே சுவாமியையும் எமது நிறுவனத்தையும் ஏனையோர் மதிப்பிடுவார்கள். ஆகவே நாம் நல்லமாதரியாக நடந்து கொள்ள வேண்டும். மண்டபத்திலிருந்து அவசர தேவைக்காக வெளியே போக இரு இடத்தில் கதவுகள் உள்ளன. நாம் நேரமேலாண்மை, உணவு விரயம் செய்யாமை, சுத்தம் பேணுதல் ஆகியவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.

இம்மாகாநாட்டிலிருந்து நாம் மிகவும் கவனமாக, பயனுள்ளவற்றை உள்வாங்க வேண்டும். எமது வாழ்க்கையில் இரு நாள்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக எமது மத்திய சபைத் தலைவர் **திரு. வி. மனோகரன்** அவர்கள் நிகழ்த்திய உரையின் சாராம்சம்



அனைவருக்கும் சாயிராம். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நாம் எல்லோரும் சுவாமியின் அழைப்பினால்தான் இங்கு கூடியுள்ளோம். நாம் எஎல்லோரும் மிகவும் பாக்கியசாலிகள். சுவாமி மனிதனுக்கு அகங்காரம், கோபம், ஆசைகள் என மூன்று எதிரிகள் உள்ளன என்று கூறியுள்ளார். கடவுளின் அவதாரம் காலத்திற்குக் காலம் நிகழ் கின்றது. ஆனால் சுவாமியின் அவதாரம் தனித்துவமானது. எங்களுடன் நெருக்கமாகச் செயற்பட்டார். அவரது போதனைகள் இலகுவானவை. போதனைகளின் சாரம் அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை செய். (Love All, Serve All) என்பதே யாகும். எப்போதும் இதைக் கடைப் பிடிக்க சாயி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத்தைத் தந்துள்ளார்.

எனது அனுபவத்தைப் பகிர்கின்றேன். எனது பெற்றோர்கள் சாயி பக்தர்களாவர். ஆகையினால் சிறு வயதிலேயே பாலவிகாஸ் வகுப்பில் சேர்ந்தேன். நான் பாலவிகாஸில் சேர்ந்திருக்காவிட்டால் ஆறு உள் எதிரிகளும் என்னை ஆட்கொண்டிருப்பார்கள். மேலும் நிறுவனம் ஊடாக நாம் ஒன்று சேர்ந்தால் சாதனைகள் இலகுவாக செய்யலாம். உதாரணமாக வட பிராந்தியத்தில் மாத முடிவில் 36 மணித்தியாலங்கள் ருத்திர சாதனை (Lahu Rudra) நடக்கப்போகின்றது. இதைத் தனியாகச் செய்வது மிகவும் கஷ்டம். சேர்ந்து செய்தால் களைப்பிருக்காது. மேலும், எதிர்பார்ப்பின்றி சேவை செய்யும்போது, எமது ஆசைகள் குறைந்துவிடும். அத்துடன் அகங்காரமும் அழிந்துவிடும். பலருடன் சேர்ந்து செயற்படும் பொழுது பலவிதமான சிந்தனைகள், முரண்பாடுகள் திறன்கள் தெரிய வரும். இதனால் பொறுமை விருத்தியடை கின்றது. நிறுவனத்தில் இளமையிலேயே சேர்ந்தபடியால் ஓரளவு உன்னத மாற்றம் அடைந்துள்ளேன். ஆன்மீக சாதனையை முதிர்ந்த வயதில் செய்யலாம் என்று சிலர் நினைப்பார்கள். நாம் எவ்வளவுகாலம் வாழ்வோம் என்பது நிச்சயமற்றது. ஆகவே ஆன்மீகம் சிறுவயதில் தொடங்க வேண்டும். சுவாமியும் பிள்ளைகளுடன் தான் கூடிய நேரத் தைக் கழிக்கிறார். மாணவப் பருவத்திலேயே தொடங்க வேண்டும். நிறுவனத்தில் சேர்ந்து தளராது தொடர்ந்து செயற்படவேண்டும். சுவாமியே 100 மீ 400 மீ ஓட்டமாக இல்லாமல் மரதன் ஓட்டமாகச் செயற்படவேண்டும் என்று சொல்லியுள்ளார். எனக்கு சுவாமியின் தரிசனம் 7 வயதில் கிடைத்தது. இந் நாட்டில் 1983ஆம் ஆண்டு நிகழ்ந்த கலவரத்தால் பாதிக்கப் பட்டோம். இச் சோகத்தில் நல்லதும் ஏற்பட்டது. நாங்கள் புட்டபர்த்திக்கு உடனே சென்று தரிசனம் பெற்றோம். அப்போதே சேவையில் ஆர்வம் ஏற்பட்டது. நான் காலணிகளை அடுக்கும் சேவையில்தான் முதலில் ஈடுபட்டேன் சேவையில் நாங்களும் உந்தப்பட்டு மற்றையவர்களையும் உந்துதல் அடையச் செய்யவேண்டும். இங்கு நிகழும் சொற் பொழிவுகளை மிகவும் உன்னிப்பாகக் கேட்டு வீடு திரும்பியதும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன்.

ஜெய்சாயிராம்.




## தேசிய மாநாட்டின் போது சுவாமியின் பிரசன்னம்

சுவாமியின் கருணையினால் ஹற்றனில் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற தேசிய இளைஞர் மாநாட்டிற்கு எனது 4 ½ வயது மகனுடன் பங்கு பற்றும் அரிய வா ய்ப்பு எனக்குக் கிடைத்தது. சுவாமியின் சங்கற்பமேயன்றி வேறில்லை.

மாநாட்டின் முதல்நாள் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை எனக்கு wash Room க்கு போக வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே எனது மகன் ஏனையவர்களோடு நிற்க மாட்டான் என்பதால் நான் அவரையும் அழைத்துக் கொண்டு நாங்கள் தங்கியிருந்த Dometry க்கு சென்றேன். அங்கு எல்லோருமே மாநாடு நடைபெறும் மண்டபத்தில் இருந்தமையால் மகன் தனியே நிற்கப் பயப்படுவான் என்றறிந்து, அவனுக்கு தைரியம் வரும் வகையில் "சுவாமி உன்னுடன் இருப்பார், உனக்கு அவர் சொக்லேட்டும் தருவார்" என்று கூறி மானசீகமாக சுவாமியிடம் பிரார்த்தித்தபடி Wash Room சென்றேன்.

திரும்பி வந்ததும் அவனிடம் "சுவாமி வந்தாரா? என்று கேட்க.. அதற்கு அவனும் எந்தவித தயக்கமு மில்லாமல் "சுவாமி வந்தார் , சொக்லேட்டும் தந்தார்" என்று பதில் கூறினான்.

"அப்போது அந்த கவர் எங்கே?" என்று கேட்டேன். "பாபா அந்த குப்பைக்கூடைக்குக் கூட்டிச் சென்று அதனுள் போடுமாறு கூறிவிட்டு, அந்த படத்தினுள் சென்று மறைந்து விட்டார்" என்று சாதாரணமாக கூறினான்.

"ஓம் ஸ்ரீ சர்வபய நிவாரிணே நமஹ" ஸ்வாமியின் அஸ்டோத்திர மந்திரமே என் நினைவிற்கு வந்தது.

தாயாகி எம்மைக் காக்கும் காவலனாம் அபயப் பிரதாயியை கண்களில் கண்ணீர் பெருக என்னை நான் ஒப்படைப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்.


தர்சா கோகுலன்
யாழ் மத்திய சாயி நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவப்பகிர்வு

அடுத்ததாக சிறப்பு விருந்தினராக வந்துள்ள திரு.கிருஷ்ணமூர்த்தி வெங்கட்ராமன் அவர்கள் நிகழ்த்திய உரையின் சாராம்சம் :



ஓம் ஸ்ரீ சாயிராம்! ஓம் ஸ்ரீ சாயிராம்!
ஓம் ஸ்ரீ சாயிராம்!

சுவாமியின் பொற்கமலப் பாதங்களுக்குப் பணிவான நமஸ்காரம். சுவாமியுடன் ஏற்பட்ட அனுபவங்களை உங்களுடன் பகிர முயற்சிக்கிறேன். ஆனால் முதலில் என் தமிழைப் பொறுத்துக்கொள்ளவும். உயிரினங்கள் ஒன்றை ஒன்று வாழ்த்தும் போது அதை உள்ளிருந்து வாழ்த்துவது நீயன்றோ! சாயிராம்! சாயிராம்! உங்கள்முன் நிற்பதே பெரும் பாக்கியம். முதலில் இளைஞர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கின்றேன். அருமையான அலங்காரம். சுவாமியின் கதிரையைச் சுற்றி மலர்த்தோட்டமே அமைத்துள்ளார்கள். அவர்களுக்கு கை தட்டுங்கள்.

எங்கள் கம்பனியில் ஒருநாள் ஏதோ ஒரு வைபவத்திற்கு குத்துவிளக்கை ஆயத்தம் செய்யும்படி சொன்னேன். அவர் மனேஜர். திரி, எண்ணை ஒன்றும் வைக்கவில்லை. ஏன் என்று கேட்டதற்கு, 'நீங்கள் குத்துவிளக்கைத்தானே வைக்கச் சொன்னீர்கள்' என்று சொன்னார். ஆனால் இங்கே விளக்கு, திரி, எண்ணை, தீபம் ஏற்றுவதை இலகுவாக்க சிறு கற்பூரத் துண்டும் வைத்திருந்தார்கள். இதைப் பெரியவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். சுவாமி கொடுத்ததை, பெரியோர்கள் கற்றுக்கொடுத்ததை நாம் சமுதாயத்திற்கு கொண்டு செல்லவேண்டும். 'ஆயிரம் குதிரைகள் சேர்ந்தாலும் உங்களை சாயி நிறுவனத் திற்குள் கொண்டுவர முடியாது. எனது அருள் ஒன்றே கொண்டுவர முடியும்' என்று சுவாமி சொல்லியுள்ளார்.

முருகன் அரியது எது என்று கேட்க ஔவையார், அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்று சொல்லித் தானமும் தவமும் செய்தல் அரிது என்று சொன்னார்.


ஔவையார் இக் காலத்தில் இருந்தால் அந்த மறுமொழியை மேலும் மூன்றினால் நீட்டியிருப்பார். அவையாவன :

- அவதார காலத்தில் பிறப்பது அரிது
- சாயி நிறுவனத்தில் சேருவது அரிது
- எல்லாவற்றிற்கும் மேலாக இளைஞர் அணியில் சேருவதே அரிது அரிது.

சிறுவயதிலேயே சுவாமியின் அழைப்பு மிகவும் பாக்கியமானது. என்னை சிறு வயதி லேயே சுவாமி அழைத்ததை எனது பெரும் பாக்கியமென்று எனது சிநேகிதர்கள் கூறியுள் ளார்கள்.

'உள்ளிருந்து எழுந்த அழைப்பு' சுவாமியினால் எமக்குத் தரப்பட்டது. அதை நாம் சாயி நிறுவனத்தினுள் இருந்து வெளியிலுள்ள அனைவரையும் அழைக்கவேண்டும். இதனால் பிரபஞ்சத்தில் அமைதி ஏற்படும்.

ஏன் குத்துவிளக்கு என்பதற்கு எனது வியாக்கியானம் பின்வருமாறு, 'எண்ணெய், திரி, தீ என்ற மூன்றையும் விரைவாக தொடர்ச்சியாகச் சொன்னால் 'என்னைத் திருத்தி' என்று ஒலிக்கும். நான் முதலில் என்னைத் திருத்தினால் உலகத்தையே அனுபவிக்கலாம்.




வீடியோ விளையாட்டு களில் ஒவ்வொரு படிமேலே ஏற சில யுக்தி களைக் கையாளவேண்டும். இல்லாவிடில் செல்ல முடியாது. எங்களின் வாழ்க்கை என்னும் வீடியோ விடையாட்டில் வெல்வதற்கு சுவாமியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வாதம் வேண்டும். உள்ளிருந்து அழைப்பை வரச் செய்ய வேண்டும். சிறு வயதிலேயே பாலவிகாஷ் வகுப்பில் சேர்ந்தேன். 1975 ஆம் ஆண்டளவில் நாம் 10 பிள்ளைகள் மிகவும் துடியாட்ட மானவர்கள். பூர்வஜன்ம வாசனையால் சில பிள்ளைகளுக்கு சக்தி மேலோங்கியிருக்கும் சிறு பிள்ளைக் கூட்டத்தில் விளையாட்டு முடிவில் ஒரு பையன் எங்கேயோ போக ஆயத்தமானான். எங்கே என்று கேட்க ஜெயசிறி அன்ரியின் வகுப்புக்கு போகின்றேன் என்ற சொல்லி என்னையும் அழைத்துச் சென்றான். அந்த குருவின் வழிகாட்டலினால் நான் முன்னேறியுள்ளேன். **எனது இன்றைய நிலைக்கு அந்தக்குருவுக்கும் சுவாமிக்கும் நன்றியுடையவனாயிருக்கிறேன்.**

சுவாமி சென்னைக்கு வரும்போது பாலவிகாஷ் மாணவர்கள் அவர் முன்னிலையில் நாடகம் செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். 1975/76 ஆம் ஆண்டளவில் சௌந்தரி அன்ரி எமக்கு நாடகம் பயிற்று வித்தார். அன்று சுவாமி பிள்ளைகளுடன் கதைத்து பாதநமஸ்காரமும் கொடுப்பார். அன்று மேடைக்கு வருகின்றார். எங்களில் 4பேரை ஒரு மூலையில் இருத்தி மிகவும் உன்னிப்பாக குழப்படி செய்யாமல் பார்த்துக் கொண்டார்கள். சுவாமி மேடைக்கு வந்து எங்கள் முன்னே நின்று 'மிகவும் நல்ல பிள்ளைகள் பாத நமஸ்காரம் எடுங்கள்' என்று சொல்ல நாம் 4பேரும் முந்தியடித்து பாதங்களைப் பிடித்தோம். சுவாமியும் அங்கியை உயர்த்தி நமஸ்காரம் செய்ய உதவினார். அப்போது எனது பென்சில் கீழே விழுந்தது. இந்தப் பென்சிலைப் பாதத்தில் உருட்டினால் நமக்கு படிப்பு வந்து நல்ல புள்ளிகள் கிடைக்கும் என்று நினைத்து பாதங்களில் பென்சிலை உருட்டினோம். பாலவிகாஷ் அனுபவங்கள் பல உண்டு.

நான் பிரிவு இரண்டு அல்லது மூன்றாம் ஆண்டளவில் ஒருநாள் காலை எனது தந்தையார் நெஞ்சுவலியால் அவஸத்தைப்பட்டார். உடம்பெல்லாம் வியர்த்து குளிர்ந்து போனது. அன்று ஜூன்மாதம் 12ஆம் திகதி 1975ஆம் ஆண்டாகும். எனது தந்தையார் மரணமானார். அவர் ஒரு பிரத்தியேக சட்டத்தரணி. அம்மா, இரு தங்கைகள், ஒரு தம்பி. நான் எல்லோரும் வறுமைக்குள் தள்ளப்பட்டோம். எனக்கு அப்போது 15 வயது முழுக் குடும்ப பொறுப்பும் என் தோள்மேல் பதிந்தது. நாம் வசித்த வீட்டில் அரைவாசியை வாடகைக்கு கொடுத்தோம். ஒரு அறையில் நாம் எல்லோரும் வாழ்ந்தோம். எமக்கு உணவாக மோர், நீர், சாதம் தான். மரக்கறி கிடைத்தால் அம்மா எங்களுக்கு பகிர்ந்து தந்துவிட்டு பசியுடன் இருப்பார். இந் நிலையில் பாலவிகாஷ் வகுப்பிற்குப் போகாமல் வேலைசெய்ய ஆரம்பித்தேன். ஒருநாள் வேலை செய்தால் ஒரு ரூபாவும் இரு தேநீரும் கிடைக்கும். பகவான் எம்மைக் கைவிட்டுவிட்டாரே என்று அம்மா அதிருப்தியடைந்தார்.

நான் அந்த இளவயதிலேயே வாழ்க்கையில் வெல்வதற்கு சில யுக்திகளை பயின்று கொண்டேன்.

உயர் அதிகாரிகளுக்குத் திறமையான உதவியாளராக இருக்க வேண்டும்.

எப்போது சேவை செய்ய வாய்ப்புக் கிடைத்தால் உடனே எடுத்திடவேண்டும். 'பரோபகாரம் இதம் சரீரம்' என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

எல்லாமே சுவாமியின் ஆசீர்வாதம். எவ்வளவோ வறுமையில் இருந்த நாம் இன்று எவ்வளவோ உயர்நிலைக்கு வந்துள்ளோம். சுவாமியிடம் பரிபூரணமாக சரணடைந்து நல்ல **எடுபிடியாகச் செயற்படவேண்டும்.** அதாவது எடு என்று சொன்னால் எடுக்கவேண்டும். பிடியென்று சொன்னால் பிடிக்கவேண்டும். நாம் எப்போதும் எம்மைத் தயாரான நிலையில் வைத்திருக்க வேண்டும். உதாரணமாக குசினியில் பல கத்திகள் இருந்தாலும் கூர்மையான கத்தியைத் தான் பயன்படுத்துவோம். அதேபோல நமக்கு ஆளுமையும் ஆற்றலும் இருக்கவேண்டும். ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதான் வளர்ச்சி' என்ற சினிமா பாடலைப் பாடினார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வாழ்க்கையில் ஒரு முக்கிய நிகழ்வு. அது 22.05.2002 அன்று நிகழ்ந்தது. அன்று சென்னையில் கடும்வெப்பம். நான் முகாமையாளரின் அலுவலகத்தில் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுதே மயங்கி விழுந்தேன். கண்முழித்ததும். எனது வலது கையும் காலும் இயங்கமாட்டாமல் இருந்தன. பல பரிசோதனைகள் (MRI) செய்து மூளையில் ஒரு பகுதிக்கு இரத்தம் போகவில்லை என்று கண்டு பிடித்தார்கள். எனது Cerebellum மூளையின் ஒரு பகுதி செயலிழந்து விட்டது. ஏதோ மீதியுள்ள மூளையுடன் எவ்வளவு செயற்படக்கூடியதாக இருக்கிறது. முன்னைய காலத்து சினிமாப் பாடல்கள் தத்துவம் நிறைந்ததாக இருக்கும். உதாரணமாக 'மனிதனும் தெய்வமாகலாம்' என்ற பாட்டு. இப்போதைய பாட்டுக்களில் கருத்தும் இராது. உதாரணமாக 'அரியகல்லு தெருக்கல்லு குத்துக்கல்லு கலக்கல்லு' என்ற பாட்டு. ஆனால் இதற்கும் நாம் தத்துவம் கொடுக்கலாம். அரிய கல்லு வைரம் போன்ற இரத்தினக் கற்களையும் தெருக்கல்லை சிற்பி குத்தினால் அழகான சிலையும் செதுக்கலாம் என்று எடுத்துக் கொள்ளலாம். பாலவிகாஷ் ஆசிரியர் குத்திச் சிலையாக ஆக்குவார்.
நான் பாரிசவாதத்தால் அதி தீவிர சிகிச்சை அறையில் இருந்தபொழுது எனது வாழ்க்கை முழுவதுமாக ஒரு திரைப்படம் போல ஓடியது. அதிலே சுவாமியின் சேவையைச் செய்த பகுதிவரும்பொழுது மிக்க மகிழ்ச்சியைத் தந்தது.

- சுவாமிக்காக செய்த வேலை
- சுவாமிக்கு சந்தோசத்தைக் கொடுத்தேன்.
- மக்கள் சந்தோசமானால் சுவாமியும் சந்தோசமாவார்.
- ஜென்மத்தின் நோக்கமே சேவையேயாகும்.

நீங்கள் சுவாமியை நேசிக்கிறீர்கள். நான் சுவாமியை நேசிக்கிறேன். ஆகவே நாம் ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம்.

எனக்கு ஓரளவு சுகமாகி பேசும் ஆற்றல் வந்தது. வேலைக்குப் போகத் தொடங்கினேன். சமநிலையில் நடக்க முடியாது. சாயிகாயத்திரியை உரைத்த வண்ணமே இருந்தேன். நான் அர்ப்பணத்துடன் வேலை செய்ததால் கம்பனியும் என்னை பராமரித்தார்கள். இடது கையால் வேலைகளைச் செய்யப்பழகிக்கொண்டேன். நான் எப்போதும் சேவை செய்வேன். என்னைச் சுகமாக்கி விடவும் என்று சுவாமியிடம் பிரார்த்திப்பேன். கால், கை கொஞ்சம் கொஞ்சமாக இயங்கத் தொடங்கி மூன்று மாதத்தில் முழுமையாக இயங்கத் தொடங்கியது.

ஆகஸ்ட் மாதம் 2005 ஆம் ஆண்டு பிரசாந்தி நிலையத்தில் Reconnect Programme என்று சுவாமியின் நிறுவனத்தில் கல்வி கற்று வெளியேறியவர்கள் நடத்தினார்கள். வாழ்க்கையில் சுவாமியின் கல்வி எப்படி உதவியது என்று கூறப்பட்டது. நிகழ்வின் தொடக்கத்தில் சுவாமி ஏன் கல்லூரிகளை ஸ்தாபித்தார் என்று அருளிய அருளுரையைப் போட இருந்தது. நான் சுவாமி சொன்னபடியே (As told by Swami) என்று சொல்லிமுடிய உள்ளே இருந்து சமிக்ஞை. இறுவெட்டு வேலை செய்யவில்லை என்று காட்டப்பட்டது. சுவாமியும் ஏதோ காகிதம் வாசித்துக்கொண்டு எப்படி இந்தச் சவாலை எதிர் கொள்வோம் என்று புன்னகை புரிந்து கொண்டிருந்தார். தொழில்நுட்பம் சரிவர வில்லையாகையால் நான் சரணடைந்து சுவாமியிடமே பிரார்த்தித்தேன். பின்பு சுவாமி சொன்னமாதிரியே என்று தொடங்கி நாடகக் குழுவின் ஆள்களை தாங்கள் தாங்களே அறிமுகம் செய்யும்படி சொன்னேன். இந்த இடை வேளையில் நிகழ்வின் செயற்பாட்டை ஒழுங்கு பண்ணி நடத்தினோம். முடிவில் பார்த்திருந்தோரின் கைதட்டல் மேலோங்கியது. சுவாமியும் நன்றாயிருந்தது என்று சொல்லி எங்களுக்கு பழச்சாறு கொடுக்கச் சொன்னார். ஒரு சகோதரன் உடனேயே குடித்து விட்டார். மிகுதி 5பேரும் கையில் வைத்துக்கொண்டேயிருந்தோம். நாங்கள் சுவாமியின் முன்னால் குடிக்கமாட்டோம் என்பதைத் தெரிந்து எங்களை மண்டபத்தினுள்ளே போகச் சொன்னார். அங்கே பழச் சாற்றை எல்லோரும் குடித்தோம். சுவாமி மெதுவாக







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தினுள்ளே வந்தார். மிகவும் சந்தோசம்! என்று சொல்லி அடுத்தநாள் விசேட நேர்காணல் தருவதாகச் சொன்னார். ஒரு சகோதரன் தான் அடுத்தநாள் புதிய கம்பனியில் சேர இருப்பதால் போவதற்கு சுவாமியிடம் அனுமதி கேட்டார். சுவாமி 'நல்லது சுவாமியின் கல்லூரியில் படித்ததால் தான் உனக்கு வேலை கிடைத்துள்ளது. ஆகவே உடனே போய் வேலையில் சேர். வாழ்க்கையில் சமநிலையைப் பேண வேண்டும்' என்று சொல்லிப் பிரசாதமும் கொடுத்தனுப் பினார். அடுத்தநாள் நேர் காணலில் நாம் ஆறுபேரும் சுவாமியும் இருந்தோம். ஒவ்வொருவராக சுவாமி கதைத்த பின்பு என்னை நோக்கி 'ஏன் கதையாமல் இருக்கிறாய்? என்று ஹிந்தி மொழியில் கேட்டார். நான் சென்னையிலிருந்து வந்துள்ளேன் என்று சொல்ல தமிழிலும் ஆங்கிலத்திலும் கதைத்தார். ஏதாவது கேட்கலாமே என்றார். நானே நீண்ட குறிப்புத் தயாரித்துக் கொண்டு போனேன். ஒன்றும் கேட்க முடியவில்லை. சுவாமி நீங்களே சொல்லுங்கள் என்றேன். அப்போது உனக்கு வந்த பாரிசவாதத்தைப் பற்றிக் கேட்கலாமே என்றார். சொல்லுங்கள் என்றேன். சுவாமியின் பாதத்தை அழுத்திக் கொண்டே இருந்தேன்.

'உன்னுடைய பிராரப்த கர்மாவின்படி உனக்கு வந்த பாரிசவாதம் நிரந்தரமாய் இருந்திருக்கவேண்டும். நீ பாலவிகாஷிலும் நிறுவனத்திலும் சேர்ந்து ஆர்வமாய்ச் சேவை செய்த சஞ்சித கர்மாவினாலும் என்னையே தாயும் தந்தையுமாய் ஏற்றுக் கொண்டதாலும் அந்தப் பாரிசவாதம் மாறியது. மேலும் இடது பக்கத்தில் வந்திருந்திருக்க வேண்டும். இடது பக்கத்தில் வந்திருந் தால் இதயத்தை தாக்கியிருக்கும். நான் வலது பக்கத்திற்கு மாற்றினேன். நீ எனது பிள்ளை. நான் உன்னை எப்போதும் பராமரிப்பேன் என்று கூறி என்னைப் பரவ சத்தில் ஆழ்த்தினார். எனது பாதங்களை இறுகப் பிடித்துக் கொள் என்றும் சொன்னார். உனக்கு வலியாய் இருக்கவில்லையா? என்றார். கைகால் விறைத்துப் போயிருந்தால் வலி தெரிய வில்லை என்றேன். இல்லை இல்லை. நானே உனது வலி எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டேன் என்று சொன்னார். மேலும் நீ பறப்பாய், ஓட்டுவாய், நீந்துவாய் (You will Fly, You will drive and you will swim) என்றும் ஆசீர்வதித்தார். நாம் நிறுவனத்தில் இருந்து சேவையைச் செய்ய வேண்டும். எமது புத்தியைத் தீட்டி திறனை மேலோங்கச் செய்ய வேண்டும். வெளியில் இருக்கும் அனைவரையும் உள்ளிழுக்க வேண்டும். அந்த அரிய பாக்கியத்தைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் எல்லோருக்கும் நன்றி.

ஜெய் சாயிராம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தரங்கம் 1 (Panel Discussion)

## அவதாரத்தின் நோக்கம் என்ன?



சுவாமியின் போதனையை ஒரு வீடியோ மூலம் காட்டப்பட்டது. அதில் சுவாமி கூறியதாவது:

- நான் எனது பக்தர்களை ஒருபோதும் கைவிடமாட்டேன்.
- நான் எனது அவதார நோக்கையும் ஒருபோதும் கை விடமாட்டேன்.

**கேள்வி:**
சுவாமி சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தை ஏன் ஆரம்பித்தார்? இதனால் என்ன பயன்?

**பதில் :**
சுவாமியின் கூற்று 'நீயும் கடவுள்: நானும் கடவுள். நான் கடவுளென்று எனக்கு தெரியும். நீ கடவுள் என்று உனக்கு தெரியாது' என்பதாகும். எங்களில் உள்ளே இருக்கும் தெய்வீகத்தை வெளிக் கொணரவே நிறுவனத்தை தந்தார். இளைஞர்களைத் தீவிரமாகச் செயற்படவும் ஒழுக்கத்தை நிலை நாட்டவும் பல சந்தர்ப்பங்களை கொடுப்பதற்குமே நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

**கேள்வி :**
இளைஞர்கள் ஏன் நிறுவனத்தில் சேரவேண்டும்?

**பதில் :**
15 - 30 வயதிற்கு இடையிலேயே எமது ஒழுக்கம் பலப்படுகிறது. பல திறன்கள் விருத்தியடைகின்றன. மனிதனில் மிருகம் பாதி தெய்வம் பாதி உண்டு. மிருகம் தெய்வீகத்தை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். சிறுவயதிலேயே பாலவிகாஷில் சேர்ந்தால் உயர்ந்த பயனடையலாம். நாம் நடந்து கொள்ளும் விதம் தெய்வீகத்தை பிரதி பலிக்க வேண்டும். வாழ்க்கையைப் பக்குவப்படுத்த முடியும். இளவயதில் சக்தி, வல்லமை அதிகம் உண்டு. நிறுவனத்தில் சேர்ந்தால் படிப்புக் கெட்டுப்போகும் என்ற தப்பபிப்பிராயம் உண்டு. நாங்கள் எத்தனைபேர் நிறுவனத்தில் சேர்ந்ததனால் உன்னத நிலையை அடைந்துள்ளோம்.

'எனது பணியைச் செய் உனது பணியை நான் செய்வேன்' என்று சுவாமி கூறியுள்ளார். எமது கடமையைச் சரிவர செய்தால் சுவாமி எங்களைப் பாதுகாப்பார்.




**கேள்வி :**
ஆன்மீக நிறுவனத்திற்கு விதிகள் கட்டுக்கோப்புகள் தேவையா? இளைஞர் அநேகமாக கேட்கும் கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்:**
சாயி நிறுவனத்தில் கட்டுப்பாடு மிகவும் முக்கியம். கட்டுப்கோப்பினால் நிறுவனம் அதீத வளர்ச்சியடைந்துள்ளது. கட்டுப்போக்கு உள்ளே இருக்கும் இளைஞர்களுக்கு பிரச்சினையில்லை. வெளியில் உள்ள இளைஞர்களுக்குத்தான் பிரச்சினை போல் தெரியும். நான் முன்வரியில் பஜனை பாட முற்பட்டபோது அப்போதைய தலைவர் வெள்ளை உடுப்புடன் வரவேண்டும் என்று சொன்னர். ஒருமரம் சின்னச் செடியாய் இருக்கும் போது எவ்வளவு பவித்திரமாகவும் வேலியும் போட்டுப் பாதுகாக்கவேண்டும். அது பெரிய மரமாய் வளர்ந்ததும் இது ஒன்றும் தேவையில்லை. விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் கடைப்பிடிக்கவேண்டும்.

**கேள்வி:**
எங்களில் என்ன மாதிரியான நடத்தையை சுவாமி எதிர்பார்க்கிறார்?

**பதில்:**
பண்பு குணம் இழந்தால் எல்லாம் இழந்துவிடும். சேவை செய்யப் போகும்போது எப்படிப் போகவேண்டும் என்று சுவாமி சொல்லி யிருக்கிறார். அன்பும் புன்சிரிப்புடன் செய்ய வேண்டும். ஆனால் பலமாகச் சிரிக்கக்கூடாது. ஒரு ஆள் பிழைவிட்டால் நிறுவனத்தின் நல்லபெயர் கெட்டுவிடும். எனது பிள்ளைகள் நல்ல பெயர் எடுக்கவேண்டும். எண்ணம், சொல், செயலில் தூய்மையும் ஒருமையும் இருக்க வேண்டும். நேரமேலாண்மை, சகாக்களுடன் அன்பு, மேல் அதிகாரிகளுடன் பணிவு இவற்றைப் பின்பற்றினால் உயர்வு தானாகவே கிடைக்கும். சுவாமியின் அன்பும் அருளும் கிடைக்கும்.

**கேள்வி:**
நிறுவனத்திலோ அல்லது சுவாமியின் வேலை செய்யும்போது கருத்துவேறுபாடுகள் எழும். இதற்கு இளைஞர்கள் எவ்வாறு முகம் கொடுக்கவேண்டும்?

**பதில்:**
கருத்து வேறுபாடுகள் எழத்தான் செய்யும். பெரியவர்களிடம் அனுபவம் உண்டு. தான் நினைப்பது சரியானதென்று நினைத்தால் முதலில் சுவாமியுடன் இணைப்பை ஏற்படுத்தவேண்டும். எதிர்த்து செயற்படக்கூடாது. பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதனால் நல்ல இணக்கம் ஏற்படும். எதிர்க் கருத்தை சந்தர்ப்பம் பார்த்து அன்புடனும் இனிமையுடனும் சொல்லவேண்டும். ஒரு குடும்பத்திலேயே பிள்ளைகள் மத்தியில் முரண்பாடு ஏற்படும். குடும்பங்களிடையே முரண்பாடு ஏற்படும். வித்தியாசத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். பழையதுடன் புதியதையும் கலந்து கொள்ளவேண்டும்.




**கேள்வி:**
தொழிலில் பதவி உயர்விற்காக ஓடிஓடிக் கொண்டு ஆன்மீக சாதனைக்கு எப்படி முக்கியத்துவம் கொடுப்பது?

**பதில்:**
உயர் பதவிக்காக உழைப்பதில் பிழையில்லை. உயர் பதவி கிடைத்து பணவருவாய் பெருகியபின் என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியம். நிறையச்சம்பாதித்து திரும்பவும் நிறுவனத்தில் நிறையச் சேவை செய்வதே நல்லது. சுவாமியின் கைதனில் திறமை யான சாதனமாகச் செயற்பட வேண்டும். பணம் சம்பாதித்தவர்கள் ஒவ்வொரு வறுமைப்பிள்ளையை ஆதரித்தால் வறுமை ஒழிந்துவிடும். சுவாமி தப்பான வழியில் செல்பவர்களை திருத்தியும் இலவசக் கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகளைக் கொடுத்துக் கொண்டே யிருக்கிறார். நாமும் அவ்வழியிலிலேயே செயற்படவேண்டும். ஒருவருக்கு ஒருவர் நல்வழியில் செல்வதற்கு உந்துதலாக இருக்க வேண்டும்.

ஜெய் சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரிலும் அன்பாயிரு அனைவருக்கும் சேவை செய்
# சொல்வது இலகு, கடைப்பிடிப்பது கடினமா?

**அன்பர் வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நிகழ்த்திய உரையின் சாரம்:**

சுவாமியின் பொற்கமலப் பாதங்களில் நமஸ்காரம். உங்களின் எதிர்பார்ப்பை ஓரளவு திருப்திப்படுத்த முயலுவேன். பகவான் மேற்கூறிய மகா வாக்கியத்துடன் எப்போதும் உதவிசெய் ஒருபோதும் தீங்கு செய்யாதே என்ற மகா வாக்கியத்தையும் சேர்த்துள்ளார். இதைச் சொல்வது இலகு. செய்வது கடினம். செய்வது முடியாததல்ல. ஓரளவு கடினம்தான். எம்மைத் தகுதியாக்காமல் தயார் படுத்தாமலிருந்தால் கடினமாகத் தானிருக்கும்.

1994ஆம் ஆண்டு சுவாமியின் ஆசீர்வதாத்தில் எனது விவாகம் நடந்தது. மாமனார் (மனைவியின் தந்தையார்) சிறந்த முருகபக்தர். சேவைகள் தாராளமாகச் செய்வார். ஆனால் ஒரு மனிதனைக் கடவுள் என்று ஏற்றுக் கொள்ளமுடியாது என்று சொல்லிக் கொள்வார். இதற்காக நான் அவரின்மேல் கோபப்படவுமில்லை. நான் செய்ய வேண்டிய கடமைகளை அன்புடன் செய்தேன். ஆத்திரப்பட்ட ஆளும் ஒரேநாளில் ஒருவனை மாற்றிவிடலாம் என்ற ஆளும் முட்டாள்கள்தான். கொஞ்ச வருடங்கள் போக, மாமனார் சுவாமியின் படத்திற்கு மிகவும்பக்தியுடன் பூவைக்கதொடங்கினார். ஏன் சுவாமியின் படத்திற்கு பூவைக்கிறீர்களெனக் கேட்டேன். தனக்கு ஒரே ஒரு பிள்ளை. அதையும் கன்னியாதானம் செய்துவிட்டால் எங்கேயோ எல்லாம் போய்விடுவார்கள். ஆனால் நீங்களும் மகளும் இந் நாட்டிலேயே இருந்து எங்கள் இருவரையும் எவ்வளவு அன்புடன் பராமரிக்கிறீர்கள். இதை ஒரு மகானாலும் யோகியாலும் செய்யமுடியாது. இப்படியான ஒரு மனப்பாங்கைக் கடவுள்தான் ஏற்படுத்தமுடியும். ஆகையால் நான் சாயிபாபாவைக் கடவுளாக ஏற்றுக் கொண்டுள்ளேன். இது முரண் பாட்டை எப்படி அன்பினால் வெல்ல முடிந்தது என்பதைக் காட்டுகிறது.

இன்னொரு நிகழ்வை குறிப்பிட விரும்புகிறேன். ஒருமுறை தமிழ்நாடு மாநிலத் தலைவரையும் சேவை இணைப்பாளரையும் பிரசாந்தி நிலையத்திலுள்ள மேற்கு நாட்டு உணவகத்தில் சந்தித்தோம். மாநிலத் தலைவர் 3 மாதங்களில் தமிழ்நாட்டிலுள்ள நிலையத் தலைவர்களெல்லாம். சுந்தரத்திற்கு வருவார்கள். ஒரு சிறப்பான நிகழ்வாக பட்டிமன்றம் நடத்த தீர்மானித்துள்ளோம். அதன் தலைப்பு 'மிக முக்கியமானது, சாயி நிறுவனத்தின் வேலையா? குடும்ப, தொழில் நிலைய வேலையா?' என்று சொன்னார்கள். சாயி நிறுவனத்தின் வேலைதான் முக்கியம் என்பதை உரைக்க பலர் முன்வருவார்கள். குடும்ப வேலைதான் மிகமுக்கியம் என்று வாதாட யார் முன்வருவார்கள் என்று நான் சொல்ல என்னையே அந்த கடின உரையை நிகழ்த்தச் சொன்னார்கள். நான் கட்டாயமாகப் பங்குபற்றவேண்டுமென்றும் சொன்னார்கள். நான் இக்கட்டான நிலையில் சுவாமியைச் சரணடைந்தேன். சுவாமியுடன் இணைப்பை ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியாக முடிந்த வேளைகளில்எல்லாம் காயத்திரி மந்திரம், சாயி காயத்திரி சொல்லத் தொடங்கினேன். உள்ளிருந்து சுவாமி எவ்வளவோ சந்தர்ப்பங்களில் உதவி செய்துள்ளார். இப்பவும் உதவி செய்வார் என்பதில் முழு நம்பிக்கை எனக்கு இருந்தது. நிகழ்வுக்கு 15 நாள்களுக்கு முன்பு சுவாமி கனவில் தோன்றினார். சுவாமி கிருஷ்ணமூர்த்தி என்ன விசேசம்? என்று கேட்டார். எங்களுடைய பட்டிமன்றத்தைப் பற்றியும் அதில் என்னை குடும்ப வேலைதான் அதிமுக்கியம் என்று பேசச் சொல்லியுள்ளார்கள் என்றேன். சுவாமி 'குடும்பம் என்றால் என்ன? என்று கேட்க. நான் மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள் என்று சொன்னேன். சுவாமி, 'உலகில் உள்ள சகல ஜீவராசிகளுமே குடும்பம். ஆகவே சாயி குடும்பம்தான் முக்கியம். கிருஷ்ணமூர்த்தியின் குடும்பம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமல்ல. ஆகவே சாயி குடும்ப வேலைக்கு முக்கியம் வழங்க வேண்டும். நீ ஒரு பாலவிகாஷ் மாணவரையும் இளைஞன் ஒருவரையும் உன் பக்கத்துக்கு பேசவிடு. அவர்கள் எல்லோரும் உள்ளிருந்து எழும் அழைப்புக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். என்று பேசச்சொல்லு' என்று சொன்னார். நான் உடனே எழும்பி எல்லாவற்றையும் குறித்துவைத்தேன். சாயி குடும்ப வேலைக்கே முதல் முக்கியம் கொடுக்கவேண்டு மென்று பட்டிமன்றத்தில் கூறி முடித்தேன். இக் கூற்றிற்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.

மகா வாக்கியத்தைச் சொல்வது இலகு கடைப்பிடிப்பது கடினமா என்பதைப் பற்றிச் சிந்திப்போம். உதாரணமாக சைக்கிள் ஓடுவதை எடுப்போம். சமநிலையைக் கற்றுக் கொண்டால் கையை விட்டும் ஓடலாம். எங்களுக்குள் சமநிலை இருந்தால் ஒரு கடினமும் இருக்காது. எதிர்பார்ப்புடன் செய்தால் கடினமாகத் தென்படும். நம் கடமையை சுவாமியில் நம்பிக்கை வைத்து அவரின் ஆசீர்வாதத்துடன் செய்தால் ஒரு கடினமும் இராது. பரந்த சாயி குடும்ப வேலைக்கே முதலிடம் கொடுக்வேண்டும். உள்ளே இருந்து அழைப்பை வெளிவரச் செய்ய சுவாமியுடன் இணைப்பை ஏற்படுத்தினால் சமநிலை ஏற்படும். இது இருந்தால் ஒன்றும் கடினமாயிருக்காது.

ஜெய் சாயிராம்

### அனைவரிலும் அன்பாயிரு அனைவருக்கும் சேவைசெய்

இதைச் சொல்வது இலகு, கடைப்பிடிப்பது கடினமா?

நாம் கற்கவேண்டியதைத் தெளிவாகக் கற்று அதைப் பின்பற்றவேண்டும்.

மேற்கூறிய தலைப்பில் தொடர்ந்து கற்கை வகுப்புகள் (கல்வி வட்டங்கள்) நடத்தப் பட்டன. இதற்காக இளைஞர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மேற்கூறிய மகா வாக்கியத்தை தனிமனிதன், குடும்பம், வேலைத்தளம், சாயி நிலையம் சூழல் மட்டங்களில் செயற்படுத்தவும் ஏற்படும் தடைகள் பற்றியும் ஆராய்ந்து தொகுப்புரை வழங்கினார்கள். அதன் சாராம்சம் :

**தனிமனித மட்டத்தில் :** தனி மனிதன் உடல், உளம், ஆன்மா என்ற மூன்று கூறு களைக் கொண்டவன் ஆவான். உடலில் அன்பைச் செலுத்துவதற்கு உடம்பின் வினோத மான அமைப்பு பெறுமதி ஆகியவற்றை விளங்கிக்கொள்ளவேண்டும். எமக்கு கிடைத்த உடலைப் பற்றிய திருப்தி இருக்கவேண்டும். இது இறைவன் வாழும் ஆலயம் என்ற நினைப்பு இருக்க வேண்டும். உடலுக்கு ஆரோக்கியமான சாத்வீக உணவு, பயிற்சி (யோகா) அளிக்கவேண்டும்.

மனதின் மட்டத்தில் அன்பு செலுத்து மனது வரையறை இல்லாதது. அது உடலுடன் சேர்ந்தால் வரையறை ஏற்படுகிறது என்பதை விளங்கவேண்டும். ஆன்மாவுடன் சேர்ந்து மனித இனத்திற்குப் பயனுள்ளதாக செயற்பட வேண்டும். எதிர் மறையான சிந்தனைகளை நீக்க வேண்டும். தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். அன்பு பெருகுவதற்கு நல்லோர் சேர்க்கை, நூல்களை வாசிப்பது, வழிபாடு ஆன்மீக சாதனைகள் தேவையானவை யாகும்.

ஆன்மாதான் ஆதிமூலம். சகலதையும் இயக்குவது. அதுவேயாகும் நாம் பாரபட்ச மின்றி செயற்படவேண்டும். எங்கள் மீது அன்பு செலுத்தினால் ஏனைய மனிதருக்கும் அன்பு செலுத்தலாம்.

**குடும்ப மட்டத்தில் :** குடும்பம் என்றால் கணவன், மனைவி, பாட்டன், பாட்டி பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள் சேர்ந்ததேயாகும். விருப்பு வெறுப்பைக் கடந்து தூய சேவை செய்யவேண்டும். தேவையை அறிந்து அன்புடன் சேவை செய்தால் முரண்பாடு ஏற்படாது. பகைமையும் அழிந்து விடும். விட்டுக் கொடுத்தல் வேண்டும். சகிப்புத் தன்மை வேண்டும். தடைகள் ஏற்பட்டால் சுவாமியில் நம்பிக்கை வைக்கவும். நாங்கள் 50% முயற்சியுடன் சுவாமியை இறுகப் பிடித்தால் மிகுதி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(50%) வீதத்தை சுவாமி அளிப்பார். இதனால் சமநிலை விருத்தியடைந்து ஆன்மீக ஈடேற்றமும் ஏற்படும்.

சமூக மட்டத்தில் :
தனிமனிதன், குடும்பம் எல்லாம் உள்ளடக்கப்படுகின்றன. தான் செய்யாததை உபதேசிக்க கூடாது. இராமகிருஷ்ண பரமஹம்சர் தான் சீனி தின்பதை நிறுத்திய பின்பே ஒரு சிறுவனுக்கு சீனி சாப்பிட வேண்டாம் என்று அறிவுரை சொன்னார். அன்பு மூன்று வகைப்படும்.

- தாழ்வானது குடும்பம் மட்டிற்குமே
- நடுத்தரமானது நாட்டிற்கும் இனத்திற்கும் மட்டுமே
- உயர்தரமானது எல்லோருக்கு மானது.

நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் வறுமைப் பட்டவருக்கும் அன்பு காட்டவேண்டும். பிறர் பிள்ளையைப் பராமரித்தால் தன் பிள்ளை தானாகவே வளரும். பிறருக்கு செய்யும் நன்மையோ தீமையோ எம்மிடம் வந்தடைகிறது.

வேலைத்தளத்தில்:
முரண்பாடு இல்லாதிருத்தல் அவசியம். இதற்கு திறமையான தலைமைத்துவம் தேவை. அங்கே சகோதரத்துவம் பாரபட்சமின்மை நிலவவேண்டும்.

சாயி நிலையத்தில் : பெரியோர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஏன் அப்படிச் சொல்லுகிறார்கள். தவறாகச் செய்யச் சொல்ல மாட்டார்களே என்று சிந்திக்க வேண்டும். பெரியவர்கள் சுவாமியின் பிரதிநிதிகள் என்று நினைக்கவேண்டும். நாங்கள் இப்போது பெரியவர்களை மதித்து நடந்தால்தான் வளர்நது வரும் பிள்ளைகள் பிற்காலத்தில் எங்களை மதிப்பார்கள். எமக்கு ஒரு வேலையும் தரவில்லையெனக் கவலைப்படவேண்டாம். நிலையத்தில் எப்போதுமே நிறைய வேலைகள் இருக்கம். உதாரணமாக இக் கட்டடத்தை அலங்கரிப்பதற்கு பலர் கூடினார்கள். நிகழ்வு முடிந்ததும் எல்லோரும் போய்விடுவார்கள். சிலரே நின்று வேலையை முடிப்பார்கள். எடுபிடியாக செய்யத் தயாராக இருக்கவேண்டும். அன்பு கொடுத்தால் தான் திரும்பி வரும்.

சூழல் மட்டத்தில் :
மானிடத்தை தவிர்ந்த ஏனைய தெல்லாம் சூழலில் வரும். சூழலை உயிருள்ளவை உயிரற்றவையென இரண்டாக பிரிக்கலாம்.
உயிருள்ளவை தாவரம், விலங்குகள்
உயிரற்றவை ஐம்பூதங்கள், கனிப் பொருள்கள் உயிர்களைக் கொல்லக் கூடாது. மறைமுகமாகக் கொல்லப் படுவதற்கும் உடந்தையாக இருக்கக்கூடாது. இதற்காக நாம் மாமிசம் புசிப்பதை நிறுத்தவேண்டும். எமது கேளிக்கைகளுக்காக மிருகங்களை துன் புறுத்தக் கூடாது. அவற்றின் சுதந்திரத்தை பறித்து நாம் மகிழக்கூடாது. செல்லப் பிராணிகளுக்கு உணவு முதலில் கொடுத்தே நாம் உண்ணவேண்டும். ஏனைய பிராணி களுக்கும் உணவு கொடுக்க வேண்டும்.

தாவரங்களை அழிக்காது பாதுகாக்க வேண்டும். மரங்களை உண்டாக்க வேண்டும். வளர்க்கவேண்டும். ஐம்பூதங்களைப் பொறுத்தவரை எல்லாவற்றிலும் வீண்விரயம் செய்வதையும் மாசு படுத்துவதையம் நிறுத்த வேண்டும்.

**இளைஞர்கள் சமர்ப்பித்தபின்பு Dr. சிவசங்கர் தொகுப்புரை வழங்கினார்.**



சொல்வது இலகு, செய்வது கடினமானது. ஏன்? செய்ய வேண்டிய நல்லதைச் செய்யாததும் செய்யக் கூடாததைத் தொடர்ந்தும் செய்வதே எமது இயல்பாக இருக்கிறது.

A Call from Within



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்'. (திருக்குறள்: 948)


மூல காரணம் அறியவேண்டும். மனச் சாந்தம் அவசியம். ஆணவம், ஆசை, கோபம் ஆகிய மூன்றுமே பிரச்சினைகளுக்கும் காரணங்களாகின்றன. ஆசை, பேராசையே சூழலை மாசுபடுத்துகின்றன. சுய கோபம் அன்பைத் தடை செய்கிறது. சுய கோபம் சிறு வயதிலேயே மற்றவர்களால் விருத்தி செய்யப் படுகின்றது. ஆசைகள் நிரந்தரமற்றவை. தன்னலமானவையாதென தெரிந்து கொள்ள வேண்டும். ஆசையை அடக்கத் தியானம், தன்னலமற்ற சேவை யினால் தான் முடியும். எனக்குத்தான் தெரியும் என்ற அகங்காரம் இருக்கக் கூடாது. ஏனையோரின் தகுதி தெரியாமலிருக்கலாம். ஏனையோரின் உரிமையை மதிக்க வேண்டும். தற் பெருமையை அழிக்கவேண்டும். தர்மத்தைக் கடைப் பிடித்தால் தான் முடியும் இன்னொரு வரின் வேலையில் ஈடுபடக்கூடாது. எல்லாம் இறை சித்தம். கட்டளைகளை நிர்வாக உத்தியோகத்தர்கள் மூலம் சுவாமி தருகிறார் என்ற மனப்பக்குவம் இருக்க வேண்டும். தர்மத்தை நிலைநாட்டினால் முரண்பாடு எழாது.

அடுத்ததாக வடபிராந்திய **இளைஞர் களின் வில்லிசை** நிகழ்வு நடைபெற்றது.

மகா நாட்டின் தொனிப்பொருளாகிய 'ஆதிமூலமே என்னை இயக்கும் சக்தியாகட்டும்' என்ற வாக்கியத்தை மையமாக வைத்து இசைத்தார்கள். ஆதிமூலத்தை மறைக்கும் 6 உள் எதிரிகளை அழிப்பதற்கு ஆன்மீக சாதனை தேவை. சாதனையால் என்ன பயன்?

கர்ம நிவாரணம்
ரோக நிவாரணம்
சமநிலை ஏற்படுத்தல்
ஆகியவையாகும்.

சைக்கிள் ஓடப் பழகிவிட்டால் அதாவது அந்தச் சமநிலையை பிடித்து விட்டால் சைக்கிள் முன்னோக்கிச் செல்லும். சம நிலையை விருத்தி செய்ய பகவான் ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகளை தந்துள்ளார். நாம் சுவாமியிடம்






சரணாகதியடைவதே மிகச் சிறந்தது.

.............................................

மாகாணங்களின் இளைஞர் அணித் தலை வர்கள் தங்கள் பிரதேசத்திலுள்ள சேவைகளைப் பற்றி அறிவித்தார்கள். தாங்கள் பங்குபற்றிய தலைமைத்துவப் பயிற்சியின் பயனையும் சொன்னார்கள்.

கிழக்கு மாகாணம் :

- களிமடு பாதை செப்பமிடல்
- வடமுனை ஊத்துச்சேனை கிராமிய சேவை
  அன்புப் பொதி வழங்கல்
- கரண்டியன்குளம் - ம.மே.வகுப்புகள்
- கடற்கரை துப்புரவு செய்தல்
- நாராயண சேவை
- வீடு கட்டிக்கொடுக்கப்பட்டது.

வடமாகாணம் :

- வீடியோ படம் மூலம் காட்டப்பட்டது.
- தலைத்துவப் பயிற்சி
- கடற்கரைச் சுத்திகரிப்பு
- ம. மே. கல்வி கிராமப் பிள்ளைகளுக்கு வறுமையான மாணவர்களுக்கு உதவி

வடமத்திய மாகாணம் :

- கிராம சேவை
- அறநெறி வகுப்புகள்
- அன்புப்பொதி வழங்கல்

எப்படி திட்டமிட்டு செய்ய வேண்டும் என்பவை திரையில் காட்டப் பட்டது.

ஜெய்சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அன்பன் கிருக்ஷ்ணமூர்த்தி அவரது அனுபவங்கள்......

சிறுவயதில் பாலவிகாஷில் இருக்கும் பொழுது சுவாமியின் பாதத்ததில் பென்சிலை உருட்டிய நிகழ்வு முன்னேரே கூறினேன். 1975ஆம் ஆண்டு தந்தையார் சுவாமியின் படத்தைக் கொண்டுவந்து சுவரில் மாட்டினார். அப்பாவும் நாங்களும் பஜனை பாடுவோம். அப்பா பக்தியுடன் சங்கீதக் கோட்பாடு ஒன்றையும் பின்பற்றாமல் பாடுவார். படத்திலிருந்து விபூதி சொரிந்தது. கடதாசியில் சேர்த்து வந்தவர்களுக்கு கொடுத்தார். இதை அறிந்த மக்கள் பலர் வந்து பார்த்தார்கள். பஜனை வழக்கமாக 6.30 மணிக்குத் தான் செய்வோம். ஒருத்தர் இந்த அற்புதத்தைச் சோதிப்பதற்காக 4.30 மணிக்கே வந்து முன்னுக்கே உட்கார்ந்துவிட்டார். வழக்கம்போல 6.30 மணிக்கு பஜனை பாட ஆரம்பித்தோம். 8.00 மணிக்கும் விபூதி சொரியவில்லை. 8.15 மணிக்கு ஆரத்தி காட்டத் தொடங்கியதும் கொதிக்கும் பால் படத்தில் இருந்து வடிந்தது. அப்பா படத்தை ஒரு மாதிரிச் சரித்து பாலைக் குவளையில் சேர்த்தார். வந்தவர் என்ன அதிசயம்! இன்று பாற்பண்ணையையே பார்த்து விட்டேன் என்று மகிழ்ச்சியுடன் திரும்பினார். எங்கள் வீட்டில் இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. 12.06.1981 அன்று காலை தந்தையாருக்கு நெஞ்சுவலியும் கடுமையாக வியர்வையும் ஏற்பட்டது. ஒரு மணித்தியாலத்தினுள் நிலமை மோசமாகி மரணித்துவிட்டார். வீட்டுக்கு வருபவர்கள் எல்லோரும் சுவாமி அப்பாவைக் காப்பாற்றவில்லையே என்று சுவாமிமேல் குற்றம் சுமத்துவார்கள். எங்களின் குடும்ப பொருளாதார நிலமையும் மோசமாகியது. அம்மா விரக்கதியடைந்து சுவாமியின் படத்தை குப்பைத் தொட்டியில் எறியச் சொன்னார். எப்படி எறிவது? நான் சாயி நிலையத் தலைவரிடம் கொடுக்கச் சென்றேன். அவரின் கண்களில் நீர் வழிந்தது. சுவாமி தன் வீட்டிற்கே வந்துவிட்டார் என்ற மனப்பாங்கு எழுந்தது. கிருஷ்ண மூர்த்தி, சுவாமி உன்னைக் கண்டிப்பாக காப் பாற்றுவார் என்று சொன்னார். பாலவிகாஷ் வகுப்பை நிறுத்திவிட்டு கடையில் போய் வேலை செய்தேன். ஒருநாள் வேலை



செய்தால் ஒரு ரூபாயும் இரண்டு தேநீரும் கிடைக்கும். பாலவிகாஷ் வகுப்பிற்கு இரண்டு கிழமை போகாததால் குரு ஜெயசிறி வீட்டிற்கே வந்துவிட்டார். கிருஷ்ணமூர்த்தி சடுதியாக நிற்பாட்டாதே நிலையத் தலைவரிடம் சொல்லும்படி வற்புறுத்தினார். என்னதான் சொன்னாலும் நான் பாலவிகாஷ் போவதில்லை என்ற தீர்மானத்துடன் சென்றேன். தலைவர் நீ நிறையக் கஷ்டப்படுகிறாய். முதலில் தேநீர் தந்து குடிக்கவைத்தார். வகுப்புக்கு வரமாட்டேன் என்று சொல்ல நான் சொன்னது சரியென்று ஆசீர்வதித்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சுவாமியை ஏன் சும்மா விடுகிறாய். அவரிடம் ஏன் அப்பாவைக் காப்பாற்றவில்லையென்று கேள் என்றார். சுவாமி புட்டபர்த்தியில் நான் சென்னையில் எப்படிச் சந்தித்து கேட்கமுடியும்? என்றேன்.

கிருஷ்ணமூர்த்தி, சுவாமி தை மாதம் சுந்தரம் வருவார். வந்தால் பாலவிகாஷ் மாணவர்களுக்கு பாத நமஸ்காரம் கொடுப்பார். அப்போது சுவாமியிடம் கேட்கலாம் என்றார். நானும் அதை ஏற்றுக்கொண்டு பாலவிகாஷ் வகுப்புக்கு போனேன். செயற்பாடுகளில் ஆர்வமாக ஈடுபட்டேன். குரு ஜெயசிறி அன்ரியின் கரிசனையே என்னை உயர்த்தியது. சுவாமி சுந்தரம் வந்தார். எங்களுக்கு பாதநமஸ்காரம் தந்தார். எனது கண்களைத் திறந்து பார்க்கும் போது சுவாமி தூரம் போய்விட்டார். இனி அடுத்த வருடம் தான் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நினைத்தேன். சாயி நிலையத்தில் நல்ல எடுபிடியாக செயற்பட்டோம். தபேலா வாசிக்க ஊக்கப்படுத்தி னார்கள். அடுத்த வருட






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகைக்காக நாம் தயாராகினோம். நாடகம் தயாரித்து மேடையேற்றினோம். மேடைக்கு வரும் பாதையில் ரோஜாப்பூவுடன் நின்றேன். சுவாமி பூவை வாங்கி பாத நமஸ்காரம் எடுக்கச் சொன்னார். முடிவில் அப்பாவை ஏற் காப்பாற்றவில்லையென்று கேட்கமுன்னரே அசைந்து தூரப்போய்விட்டார்கள். ஆராத்தியும் எடுத்து முடிந்தது.

சுந்தரத்தில் சுவாமியின் அறையில் சேவாதாள் வேலை (RoomBoy) கிடைத்தது. இது ஓர் அரிய சந்தர்ப்பம். சுவாமியின் அறையிலேயே தங்கவேண்டும். அதே மாடியில் சின்ன பிரார்த்தனை அறையுண்டு. அங்கே சுவாமி நிர்வாக உத்தியோகத்தர்களுடன் கதைத்தபின்பு தனது அறைக்கு வருவார். அங்கிருக்கும் படத்திற்கு கண்ணாடி போடவில்லை. நான் அதன் அருகில் நின்றேன். கிருஷ்ணமூர்த்தி சுவாமியைப் படத்தில் கண்டாயா? இவன் எப்வோவோ சுவாமியை படத்தில் கண்டான் என்று எல்லோர் முன்னிலையில் சொன்னார். (விபூதி சொரிந்தபடம்)

"கிருஷ்ணமூர்த்தி, அப்பாவுக்கு என்ன நடந்தது?" நான் கேட்கவிருந்ததை சுவாமியே கேட்டுவிட்டார். கண்ணீர் மல்க தந்தையார் இறந்ததைச் சொன்னேன். சுவாமி நீ கவலைப் படாதே. நான்தான் இனிமேல் உன் அப்பா" என்று சொன்னார். மேலும், "நீ புட்டபர்த்தியல் MBA படிக்கவேண்டும்" என்றும் சொன்னார். நான் அப்போது ஆங்கிலப் பட்டதாரிப் படிப்பு முதலாம் ஆண்டை முடித்திருந்தேன். சுவாமி குடும்பநிலை மிகவும் மோசம். எப்படி வருவது? என்று சுவாமியிடம் சொன்னேன். சுவாமி ஒருபடத்தை எடுத்து தனது கையெழுத்தையும் திகதியையும் (31.01.1986) எழுதி நீ கட்டாயம் 1988 ஆம் ஆண்டும் MBA படிக்க புட்டபர்த்தி வருவாய் என்று சொன்னார்.

அறையில் செய்யும் கடமை சுவாமியின் அங்கியைத் தோய்ப்பது, உணவு பரிமாறுவது, சுவாமியுடனே விழிப்புடன் இருப்பது ஆகியவை யாகும். ஒரு முறை குளியலறைப் பக்கம் போனபோது சுவாமியின் அங்கி தோய்த்து பிழிந்து வைக்கப்பட்டது. இது என்ன எங்களைப் பேசப் போகிறார் களேயென்று நினைக்க, சுவாமி மலசலகூட அறையின் கதவைத் திறந்து வெளியே வந்தார். என்ன சுவாமி எங்கள் கடமையை நீங்கள் செய்கிறீர்கள் எனக் கேட்க, சுவாமி 'அவரவர் கடமையை அவரவர் செய்யவேண்டும்' என்று சொன்னார்.

சுவாமிக்கு உணவு பரிமாறினால் அவர் விடும் மிச்சத்தை உண்பதற்கு மிகவும் ஆவலாக இருப்போம். ஒருமுறை சாம்பார் விடும்பொழுது 5 முருங்கைக்காய் துண்டுகளைப் போட்டோம். சுவாமி எப்போதும் ஒன்றை எடுத்துவிட்டு மிகுதியை எங்களுக்கு விடுவார் என்பது எமது கணக்காகும். சுவாமி அன்று தனது மாணவர் களைக் கூப்பிட்டு எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து முருக்கங்காய்த் துண்டுகளை எல்லாம் சப்பி சக்கையை மட்டும் விட்டார். நாம் தட்டைக் கொண்டு போய் மேசையில் வைத்து யோசிக்கும் பொழுது மெதுவாகப் பின்னாலே வந்து எங்களை இரண்டு தட்டுகள் எடுக்கும்படி சொன்னார். நாம் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. நாம் இரண்டு தட்டை எடுத்துவைத்ததும் "எனக்கு எத்தனை நாள் உணவு பரிமாறியிருக்கிறீர்கள். இன்று நான் தாயானவள் உங்களுக்கு உணவு பரிமாறப் போகிறேன்" என்றார். சுவாமி சோறு பரிமாறும்பொழுது அந்தச் சோற்றுக்கு நோகாமல் அள்ளிப் போடுவதே ஒரு நுண்கலை. அவர் குழம்பு விடும் பொழுது 'ஏ! கிருஷ்ணமூர்த்தி குழம்புக்கும் ரசத்திற்கும் என்ன வித்தியாசம்?' என்று கேட்டார். நாம் குழம்பு தடிப்பாயிருக்கும் ரசம் நீராயிருக்கும் என்று சொன்னோம். 'குழம்பில் போடுவது எல்லாவற்றையும் 'தான்' (அணியம்) என்று சொல்லி, இந்தத் தான் என்ற அகங்காரம் இல்லாவிட்டால் வாழ்க்கை ரசமாக இருக்கும்' என்றார். மேலும் 'எத்தனைவிதமான ரசம் தெரியும்?' என்று கேட்டார். மெல்ல சில வகை ரசங்களை சொன்னோம். சுவாமி "எல்லா ரசத்திலும் 'சமரசமே முக்கியம்" என்று சொன்னார். மேலும் "சமரசம் வந்துவிட்டால் வாழ்க்கையே 'அதிரசமாகி' விடும்" என்று பெரிய தத்துவத்தைச் சொன்னார். (இச் சமயத்தில் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எங்களின் விருந்தோம்பலை மிகவும் மெச்சினார்.)




சுவாமி வரச் சொல்கிறார், ஏன் போகமாட்டாய் என்கிறாய்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நிலைய உயர்நிர்வாகிகள் கேட்டார்கள். சுவாமிக்கு எமது கஷ்டத்தைச் சொன்னால் கேட்கிறார் இல்லை. சுவாமி சுந்தரத்திற்கு வந்து மும்பாயிற்குப் போய் திரும்பவும் சுந்தரத்திற்கு வந்து புட்டபர்த்திக்கு செல்வார். சுவாமி மும்பாய்க்கு கிளம்பியதும், என்னை சுவாமி யுடன் ஏற்பட்ட அனுபவங்களை நிலையத்தில் சொல்லும்படி கேட்டார்கள். சொன்னேன். சுவாமி G.Mac என்ற புத்தகத்தைப் படிக்கும்படி சொன்னார். புத்தகமும் கையில் கிடைத்தது. சுவாமி வழக்கம்போல 9.00 மணிக்கும் கடிதங்கள் வாசிப்பார். என்னை உட்காரச் சொன்னார். காலை 2.00 மணிவரை கடிதங்கள் படித்தார். 'கிருஷ்ணமூர்த்தி என்ன தூக்கம் வரவில்லையா?' என்று சுவாமி கேட்டார். இல்லை என்று சொன்னேன். ஒரு குவளைத் தண்ணீரில் விரலைவிட்டுக் கலக்கிக் குடிக்கச் சொன்னார். என்ன அதிசயம்! உடலுக்கு எங்கிருந்தோ சக்தி வந்தது. எப்போ காலை உணவு சாப்பிடுவீர்கள்? சுவாமியும் மாணவர்களும் சாப்பிட்டபின்பே சாப்பிடுவோம் என்று சொன்னோம். அடுத்தநாள் காலை 6.00 மணிக்கே பொங்கலும் சாம்பாறும் எமக்கு வைக்கப்பட்டன. என்னே சுவாமியின் அன்பு?


MBA பத்திரம் வந்தது. அதை நிரப்பி அனுப்பினேன். பரீட்சைகள் முடிவுற்றன. நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன் என்று கடிதமும் வந்தது. வீட்டிலோ சோகம். சுவாமி கட்டாயம் வந்திடு என்று முன்னரே வலியுறுத்தியிருந்தார். சித்தப்பா எங்களைப் பார்க்கவந்தார். என்ன சோகம் என்றார்? எனக்கு MBA இடம் கிடைத்து விட்டது. ஆனால் விடுதிக்காசு கட்ட முடியாது இருக்கிறோம் என்று சொல்ல, அவரே கட்டுவதாகச் சொன்னார்.

நிலையத்திலுள்ளவர்கள் தேவையான உடுப்புகள், பொருள்கள், பை முதலியன வாங்கித் தந்தார்கள். நான் பயணம் வெளிக்கிட்ட அன்று நிலைய அன்பர்கள் முழுக்க வழியனுப்ப பஸ் நிலையத்திற்கே வந்திருந்தார்கள். புட்டபர்த்தி சென்றேன். விடுதி யிலும் அனுமதி கிடைத்தது. MBA மாணவனாக முதலாவது தரிசனத்திற்குப் போனோம். நான், சுவாமி எவ்வளவோ பெரியவர். சொன்னதெல்லாம் நடக்கிறது. நன்றியும் கூறி



கடிதம் கொண்டு போனேன். அவர் தனது கண்ணால் உற்றுப் பார்த்து கடிதத்தை வாங்கிக் கொண்டார். அதை உரத்துப் படித்தார்.

மாணவர்கள் தரிசனத்தின்போது யார் யார் முன்வரிசையிலிருக்க வேண்டும் என்று சீட்டுப் போட்டே விடப்படுவார்கள். எனக்கு ஆறு தடவைகள் முதல்வரிசை கிடைத்தது. MBA படிக்கும்பொழுது முதல் வருட மாணவர்கள் நாடகம் தயாரித்து சுவாமியின் முன்னிலையில் அரங்கேற்றுவது வழக்கம். நாடகத்தில் யார்யார் என்ன என்ன பாத்திரங்கள் ஏற்க வேண்டுமென்று சீட்டுப் போட்டுத்தான் தெரிவு செய்யப்படுவார்கள். எங்களின் நாடகத்தில் எனக்கு வேலைக்காரப் பாத்திரம்தான் கிடைத்தது. முதலில் எழுதியபடி நான் ஒருக்கா மேடைக்கு வந்து போவதாகத் தானிருந்தது. நான் வேலைக்காரன் மேடையில் நின்று நிலம் தளபாடங்களைத் துடைப்பதாக நீட்டிக்கொண்டேன். சுவாமி நன்றாக ரசித்தார். சுவாமி என்னைக் கூப்பிட்டு 'என்ன வேண்டும்?' என்று கேள் என்றார். சுவாமியின் ஆசீர்வாதத்தையே கேட்டேன். சுவாமியுடன் சேர்ந்து படம் எடுக்கவும் வேண்டும் என்றேன். இரண்டாவது வருடமும் நாடகம் தயாரிக்கப் பட்டது. அதில் 10 பேர்தான் நடிக்கலாம். சுவாமியே ஒத்திகைகள் எல்லாம் பார்த்தார். எனக்குத் தரப்படவில்லை. இதில் சாயி மாணவன் பட்டம்பெற்ற பின்பு ஒரு பாடசாலைக்குப் போய் அங்கே மனித விழுமியங்களுடன் கற்பித்து அந்தப் பாடசாலையை உயர்தரத்திற்கு எழுப்பினார். இதுதான் நாடகத்தின் மையம். ஒருநாள் சுவாமியிடம் இருந்து அழைப்பு வந்தது. ஓடிச் சென்று சுவாமியின் முன் நின்றேன். போய் நடி என்றார். எந்தப் பாகம்? சம்பாஷணை எல்லாம் மற்றச் சகோதரர் சொல்லுவார் என்று சுவாமி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார். எனக்கு பியோன் (Peon) பாத்திரம் இருக்கிறது. நீயே சமாளித்துக்கொள் என்றும் சொன்னார். எனது பாத்திரத்தை நானே விஸ்தரித்துக்கொண்டேன். முடிவில் நாடகம் நன்றாயிருந்தது. சுவாமியும் சந்தோசப்பட்டார். முடிவில் சுவாமி மேடைக்கு வந்தார் ஒரு மஞ்சள் றோசாப் பூவை பொக்கற்றுள் வைத்தார். எனது இடது தோளின்மீது கை வைத்து நின்று படம் எடுக்கச் சொன்னார். நீ படம் கேட்டாயே, இப்போது தருகிறேன் என்று சொல்லித்தந்தார். அறை சேவை தரும்படி கேட்டேன். அதையும் கொடுத்தார். மிகுதியைப் பின்பு சொல்லுவேன்.

ஜெய் சாயிராம்

முதல்நாள் முடிவில் - நன்றிகூறல்



சகோதரன் எவன் (Avon) மடுகல்ல, மகாநாடு இணைப்பாளர் நன்றியுரை நிகழ்த்தினார். அவர் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேசினார். அன்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது எழும்பிய சிரிப்பொலியைக் கேட்ட போதெல்லாம் என்னிடம் பொறாமையே எழுந்தது. முதல்நாள் நிகழ்வுகள் முடிவுக்கு வந்துள்ளன. இந்தப் பெரிய நிகழ்வில் பலரின் ஒத்துழைப்புக் கிடைத்தது. சகலருக்கும் நன்றி. சுவாமிக்கு எனது அன்பான ஜெய் சாயிராம். என்று கூறி முடித்தார்.

இதைத் தொடர்ந்து சத்திய சாயி பாடசாலை, மானிப்பாய் பற்றிய சிறு வீடியோபடம் காட்டப்பட்டது.

ஓம் ஸ்ரீ சாயிராம்

## நல்ல செயல் நல்ல விளைவு

வறுமையான 6 வயதுப் பையனும் அவனது தங்கையும் தாம் வாழும் பட்டினத்தின் சந்தையைச் சுற்றிப் பார்த்தார்கள். சிறிது நேரத்தில் தங்கை ஒரு கடையில் தங்கிநிற்பதை அண்ணன் கண்டான். அங்கு சென்று பார்த்தபொழுது தங்கையின் கண்கள் ஒரு அழகான பாவைப் பிள்ளை மீது படிந்திருந்தது. உனக்கு வேண்டுமா? என்று கேட்க, தங்கை ஆம் என்று பதிலளித்தாள். அப்பாவையை எடுத்துக்கொண்டு பணம் கட்டும் மேசைக்குச் சென்றார். இதையெல்லாம் கடைக்காரன் அவதானித்துக் கொண்டிருந்தார். கடைக்காரனிடம் எவ்வளவு காசு? என்று கேட்டான். கடைக்காரன் உம்மிடம் எவ்வளவு பணம் இருக்கிறதென அன்புடன் கேட்டான். பையன் தனது காற்சட்டைப் பைக்குள் கையைவிட்டு இருந்த கடற்சிப்பிகளை மேசையில் வைத்தான். கடைக்காரனும் கொஞ்சத்தை காசு எண்ணுவதுபோல எண்ணி மிகுதிச் சிப்பிகளைப் பையனிடம் கொடுத்தார். பையனும் மிகுதியைப் பைக்குள் போட்டுவிட்டு தங்கையுடன் மிகவும் மகிழ்வுடன் கடையைவிட்டுச் சென்றான்.

இந் நிகழ்வை அவதானித்த கடைத் தொழிலாளி முதலாளியிடம் ""என்ன ஐயா அந்த விலையுயர்ந்த பாவையை நான்கு சிப்பிகளுக்கு கொடுத்துவிட்டீர்களே"" என்று கேட்டான். முதலாளி புன்னகையுடன் எங்களுக்கு அந்தச் சிப்பிகள் மிகவும் சாதாரணமானவைதான். ஆனால் அந்தப் பையனுக்கோ அவை மிகவும் பெறுமதி வாய்ந்தவை. இப்போது அவனுக்குக் காசு என்றால் என்னவென்று தெரியாது. வளர்ந்தபின்பு அந்தப் பாவையின் பெறுமதியைத் தெரிந்து அந்தப் பாவையை நான்கு சிப்பிக்குக் கொடுத்ததை நினைவு கொள்வான். உலகத்தில் நல்லவர்களும் உள்ளார்கள் என்பதில் நம்பிக்கை கொள்வான். அவனிடம் ஒரு நேரான சிந்தனையைத் தூண்டி அவனை நல்லவனாக வாழ உந்துதலாக இருக்கும்" என்றான்.

நாம் எண்ணும் சிந்தனை, செய்யும் செயல், நமது உணர்வுகள் யாவும் பிரபஞ்சத்தில் பரவிச் செல்லும். இப்படியான சக்தி எம்மில் உண்டு என்பதில் நம்பிக்கை கொள்ளவேண்டும். எம்மில் இருந்து வெளிப்பட்டது பன்மடங்கு மேலாக எமக்குத் திரும்பிவரும். ஆனால் எப்போது வரும் என்னமாதிரி வரும் என்பது எமக்குத் தெரியாது. ஆனால் எமக்குத் திரும்பி வரும் என்பது நிச்சயம் என்ற படிப்பினை இக் கதைமூலம் வெளிப்படுகின்றது.

நன்றி : நவசாரதி நவம்பர் 2016
கேரள மாநிலம், இந்தியா..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இளைஞர் மாநாடு 2018.12.16 (இரண்டாம் நாள்)


16.12.2018 - இரண்டாம்நாள் நிகழ்வு காலை 5.30 மணிக்கு ஓம்காரம், சுப்ரபாதத்துடன் காயத்திரி மந்திர ஜெபத்துடன் ஆரம்பமாகியது. ஜோதி தியானம் நடைபெற்ற பின்பு வேதம் ஓதப்பட்டு பஜனை பாடப்பட்டது. ஆராத்தி காட்டியபின்பு காலை உணவு வழங்கப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் மண்டபத்தில் வெளியே குழுவாகப் படம் எடுக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர் அன்பர் **வெ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 'எமது வாழ்வில் சமநிலையைப் பேணுவோம்'** என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.



ஓம் ஸ்ரீ சாயிராம்

வாழ்வில் எத்தனையோ விதமான பலன்ஸ் (Balance) உண்டு. வாழ்க்கையில் சமநிலை முக்கியம். இங்கே நடந்த வில்லுப் பாட்டில் தம்பியவர்கள் சைக்கிள் பலன்ஸ் பற்றிச் சொன்னார்கள். பலன்ஸ் கற்றதும் சைக்கிள் முன்னேறிப் போகும். இல்லாதுவிடில் பிரண்டு கொட்டிவிடும். சுவாமி ஒன்று, அவரை முன்னே வைத்து ஏனைய செயல்களில் ஈடுபட்டால் பெறுமதி அதிகமாகும். இல்லாவிடில் சூனிய மாகவே இருக்கும். வாழ்க்கையில் வெற்றி யடைவதற்கு நிதானம், பொறுமை, பகவானின் கிருபை ஆகியவை வேண்டும். சின்ன விளையாட்டு ஒன்றை ஏழு இளைஞர்களை மேடைக்கு அழைத்து செய்து காட்டினார். ஒன்று, இரண்டு என்று அடுக்காகச் சொல்லவே தடுமாறி னார்கள். மூன்றாவதைச் சொல் லாது கைதட்டிக் காட்ட வேண்டு மென்பதைச் செய்யும்பொழுது தடுமாறினார்கள். வாழ்க்கை யில் படபடத்தால் நிதானமாகச் செய்ய முடியாது. கஷ்டப்பட வேண்டும். சுவாமியில் நம்பிக்கை வைத்தால் படபடப்பு ஏற்படாது சமநிலையில் இருக்கமுடியும்.





சுவாமியிடம் சரணடைந்தால் எவ்வாறு சங்கடமான நிலையிலிருந்து மீட்பாரென ஒரு நிகழ்வைக் கூறுகிறேன். ஊட்டியில் சாயி கைலாஷ் என்ற கோவில் திறப்பு விழாவிற்கு நெறியாளராகச் செயற்பட வருமாறு தமிழ்நாட்டுத் தலைவர் அழைத்தார். மூன்று நாள்களில் தீர்மானத்தைச் சொல்லும்படி கேட்க நான் வருவதாகச் சொன்னேன். ஆனால் அப்போது எனது கம்பனி தீர்மானித்த அடைவு மட்டத்தில் (Target) 20 வீதத்தையே எட்டியிருந்தோம். இப்படியாகச் சிறு சஞ்சலமடைய, தஞ்சா வூரிலிருந்து தொலைபேசியில் எமது முழு மட்டத்தையும் அடைந்து விட்டோம் என்ற மகிழ்ச்சியான செய்தி வந்தது. ஊட்டிக்குப் போய் நிகழ்வில் பங்குபற்றினேன். அப்போது பல படங்கள் எடுத்து அல்பத்தில் போட்டு வைத்தார்கள். இரண்டோ மூன்று வருடங் களுக்குப் பின்பு சென்னையில் ஒரு நிலையத்தில் பாலவிகாஷ் நிகழ்வில் உரை நிகழ்த்தினேன். (ஜூன் 8ஆம் திகதி 2011) ஊட்டியிலிருந்து தொலைபேசியில் கிருஷ்ணமூர்த்தி நீங்கள் இன்று காலை ஊட்டிக்கு வந்திருந்தீர்களா? என்று கேட்க, நான் சென்னையைவிட்டு ஒரு இடமும் போகவில்லையேயென்று சொன்னேன். என்ன அதிசயம். இங்கே இப்போது ஒரு லொறி சாரதி தான் நிலத்தில் பதிக்க டைல்ஸ் (Tiles) கொண்டுவந்ததாகவும் நீங்கள் வந்து கைலாஷ் நிலையத்தைத் திறந்து டைல்ஸ் எல்லாம் இறக்கி வைத்துள்ளீர்களென சாரதி இங்கே சொல்கிறார். அவர் வந்தவரின் பெயர் கிருஷ்ணமூர்த்தி, சென்னையிலிருந்து வந்தவ ரென்றும் சுவாமியின் பழைய மாணவனென்றும் சொன்னதாகச் சொன்னார். நாங்கள் அல்பம் காட்டியபோது உன்னையே படத்தில் காட்டினார்.' என்று ஊட்டியிலிருந்து சொன்னார்கள். நானோ அந்தப் பக்கம் போகவில்லை. அங்கே நான் சாவியைச் சாரதியிடம் கொடுத்து நிலையத்திற்குப் பொறுப்பான அம்மாவிடம் கொடுக்கச் சொல்லியுள்ளேன் என்றும் சொன்னார்கள். **சுவாமியே என் உருவமெடுத்துப்** போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையைச் செய்துள்ளார். இந்த அனுபவத்தை அந்த நிலையத்தில் சொன்னேன்.


இந்த அதிசயத்தை சுந்தரத்தில் பாவிகாஷ் குருமாருக்குச் சொல்லுமாறு அழைத்தார்கள். நான் சுந்தரம் சென்றபொழுது பிரார்த்தனை மண்டபத்தில் ஒரு சேவாதாள் இருந்தார். அவரே சொன்னார், 'என்ன நீங்கள் தானே ஒரு மணித்தியாலத்திற்கு முன்பு வந்து சுவாமியின் அறைத் திறப்பைக் கேட்டீர்கள். இன்னொரு நிர்வாகி சில நிமிடங்களில் வருவார். அவரிடம் திறப்பை பெற்றுக் கொள்ளலாம்' என்று தான் சொன்னதாக அந்த சேவாதாள் சொன்னார். ஊட்டியில் நடந்ததைத்தானே இங்கே சொல்ல வந்தேன். அதற்கு நிரூபணமாக இந்த திருவிளையாடல். **அன்று அங்கு வந்தவரும் இன்று இங்கு வந்தவரும் சுவாமியே.** சுவாமி எங்களின் பக்தியைச் சோதித்துப்பார்ப்பார். சுவரில் ஆணியடித்து அது இறுகியிருக்கிறதா என்று பார்க்க நாம் ஆட்டிப் பார்ப்போமல்லவா? அது மாதிரி சுவாமியும் ஆட்டிப் பார்ப்பார். சோதனையின் போது சுவாமியை இறுகப் பிடித்தால் சமநிலையிலிருந்து விலகமாட்டோம். சோதனையும் அருளும் எவ்வாறு மாறி மாறிக் கிடைக்குமென இன்னொரு நிகழ்வைப் பற்றிச் சொல்கிறேன். 2011 ஆகஸ்ட் மாதம் பாலவிகாஷ் இணைப்பாளரிடமிருந்து E - mail வந்தது. இந்தியா முழுவதிலுமிருந்து பழைய பா. வி. மாணவர்களைத் தேர்ந்தெடுத்து குல்வந்த் மண்டபத்தில் உரை நிகழ்த்த ஓர் சந்தர்ப்பம் கிடைக்கும். இதற்காக உங்கள் பா.வி. தரவுகள், தொழில்சார் தரவுகள், நிறுவனச் செயல்களில் பங்குபற்றிய தரவுகள் சகலதும் அனுப்புமாறு பா.வி. இணைப்பாளர் ரமாதேவி அம்மா கேட்டிருந்தார். அனுப்பினேன். ஒக்டோபர் மாதம் 2011ஆம் ஆண்டு. பழைய பா.வி. மாணவர்களை பேசச் சொல்லி தெரிவு செய்யத் தயாரானார்கள். எனது பெயரைக் கண்டதும் பல முன்னைய மாணவர்கள் என்னுடன் போட்டி போட முடியாது. தயவு செய்து போட்டியிலிருந்து விலகும்படி கேட்டிருந்தார்கள். நானும் ஒத்துக் கொண்டேன். தேர்வுநாளன்று ஆண்களுக்கு மூன்று மதிப்பாளர்களும் பெண்களுக்கு மூன்று மதிப்பாளர்களும் நியமிக்கப் பட்டிருந்தார்கள். ஆண்கள்



பகுதியில் இரண்டு பேர்தான் வந்திருந்தார்கள். மதிப்பாளர் ஒருவரும் வரவில்லை. ரமாதேவி அம்மா என்னையே மதிப்பாளராகச் செயற்படும் படி சொன்னார். மதிப்பீடு செய்யும் பொழுது மூன்றைக் கவனிக்கச் சொன்னார். அவையாவன,

தலைப்புச் சம்பந்தமாகவுள்ளதா?
ஆத்மார்த்தமாக பேசப்பட்டதா?
நேரக்கட்டுப்பாடு பிடிக்கப்பட்டதா?

ஆண்கள் பகுதியில் பங்குபற்றிய இருவரும் சிறந்த பேச்சாளர்கள். ஆனால் மேற் குறிப்பிட்ட மதிப்பீட்டில் திறமையாகச் செயற்பட வில்லை. சுவாமியைப் பற்றியல்ல பாலவிகாஷ் மகிமையைப் பற்றியே பேச வேண்டு மென்று சொல்லப் பட்டது. தமிழ்நாடு, ஆண்களில் என்னையே தெரிவு செய்தார்கள்.




பிரசாந்தி நிலையம் சென்றோம். அங்கே ஏனைய மாநிலங் களிலிருந்தும் போட்டியாளர்கள் வந்திருந்தார்கள். எல்லோரையும் மதிப்பீடு செய்து நால்வரைத் தெரிவு செய்ய ஆயத்தமா யிருந்தார்கள். நிகழ்விற்கு முதல் நாள் இரவு தெரிவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது. அதை மதிப்புக்குரிய நிமேஷ் பாண்டியா அவர்கள் ஒழுங்கு செய்தார்கள். இரண்டு பிரிவாகப் பிரித்தார்கள். தெரிவு செய்யப்பட்டோர் தெரிவு செய்யப்படாதோர் என்பதே இரு பிரிவுகளும் நான் எங்கே என்று திரு. நிமேஷ்பாண்டியா அவரிடம் கேட்டேன். அவர் என்னை நெறிப்படுத்துபவராகத் தெரிவு செய்துள்ளேன் என்று சொன்னார். இது இரண்டு நாள்கள் நடக்கும்.

எனது தெரிவைக் கேள்விப்பட்டு மும்பாயிலிருந்து இதற்கென வந்தவரின் முகம் வாடியது. விடயம் அறிந்து திரு. பாண்டியா அவரிடம் மும்பாய் நண்பரை விரக்தியடைய விடாமல் அவருக்கு ஒருநாளும் எனக்கு ஒரு நாளுமாகப் பிரித்துச் செய்வோம் என்று கூறினேன். மிகவும் திறமான யோசனை. எப்படி பேச்சாளர்களை அறிமுகம் செய்வதென அவருக்கு வழிகாட்டு. மற்றச் சகோதரன் முதல்நாள் அறிமுகம் செய்தார். இரண்டாம் நாளும் செய்வதற்கு ஆயத்தம் செய்கிறார். நான் பாண்டியா அன்பரிடம் என்ன சேர் ஒரு நாளைக்குச் செய்யவிட்டால் இரண்டு நாளைக்கும் செய்யச் சொல்லியுள்ளீர்களே? உன்னையே நாம் பரிசுபெறத் தெரிவு செய்துள்ளோம். நீ உன்னை அறிமுகம் செய்ய முடியாதே என்றார். நாங்கள் முதலில் தெரிவு செய்த பையன் வரவில்லை. என்னுடைய கல்வி, தொழில் தரவுகளை எப்படி அறிந்தார்கள்? நான் முதலில் ராமதேவி அம்மாவிற்கு அனுப்பியதை E - mail மூலம் பெற்றுக் கொண்டார்கள். எனக்கே முன்னாள் பாலவிகாஷ் மாணவனின் வாழ்நாள் சிறப்புத் திறமைப் பரிசை (EX B.V. Student Best Lifetime achievement award) கொடுத்தார்கள். 5 நிமிடம் பேசச் சொன்னார்கள்.

**நான் எனது பாலவிகாஷ் கல்வியே எனது அகண்ட ஜோதி** என்ற மையத்தில் பேசினேன். சுவாமி என்னை எப்படி எப்படியெல்லாம் தள்ளித்தள்ளி இழுத்து இழுத்துப் பார்த்தார். கடைசியில் வெற்றிக் கிண்ணத்தையே தந்தார். உங்கள் எல்லோருக்கும் சுவாமி யின் அன்பும் அருளும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

ஜெய் சாயிராம்




## பயத்தினால் வெகுண்ட குதிரை



அலெக்சாண்டர் சக்கரவர்த்தி (கி.மு. 356 323) ஒரு வியக்கத்தக்க அழகான குதிரை மீது எப்போதும் பயணிப்பார். இதன்மீதிருந்தே பல நகரங்களைக் கைப்பற்றினார். குதிரையின் பெயர் புகேபாலஸ் (Bucephalus). இதனை எப்படி தனக்குப் படியவைத்தார் என்பது ஒரு கதை.

அலெக்சாண்டர் 12 வயதாயிருந்த பொழுது, அவரின் தகப்பனாருக்கு அடக்கமுடியாத காட்டுக் குதிரையை விற்று விட்டான். அலெக்சாண்டர் குதிரையின் நடத்தையை மிகவும் உன்னிப்பாக அவதானித்தார். அக் குதிரை தனது நிழலைக் கண்டே பயப்படுவதை அறிந்தார். அவர் குதிரையைச் சூரியன் இருக்கும் பக்கம் தலையைப் பிடித்துவைத்து மென்மையாக தடவத்தடவ அது அடங்கியது. அதிலேயே கடைசிவரைக்கும் அலெக்சாண்டர் பயணித்தார்.

நாமும் ஒளியின் எதிர்ப்பக்கமே எமது நிழலைப் பார்க்கமுடியும். தூரம் கூடக்கூட நிழலில் நீளமும் அதிகரிக்கும். நாம் தெய்வத்தின் பக்கத்திலிருந்து எதிர்த்திசை நோக்கினால் எமது பாபச் செயல்களின் நிழலும் நீண்டு கொண்டேயிருக்கும் நான் தெய்வத்தின்பால் மனதைத் திருப்பினால் பாபமான நிழல் சுருங்கி இல்லாமற் போய்விடும். கருணையுள்ள கடவுள் எம்மை மன்னித்து அருளுவார். இதற்காகத்தான் ரிசிகள் பின்வரும் வேதப் பிரார்த்தனையைத் தந்துள் ளார்கள்.

"அஸதோமா சத் கமய
தமசோமா ஜோதிர் கமய
மருத்யோர்மா அம்ருதம் கமய"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலை கற்றல் வகுப்பு - 2

சமர்ப்பணங்களின் சாரம்

**உணவு சமநிலை :**

சாத்வீக உணவு,
சரியான அளவு,சைவ உணவாக இருக்கவேண்டும்.

இளைஞர்களுக்கு வீட்டிலுள்ளவர்கள் அசைவ உணவைச் சாப்பிடும்படி வற்புறுத் துவார்கள். நாங்கள் எமது கோட்பாட்டை அன்புடன் சொல்லிச் சொல்லி மனஉறுதியுடன் சுவாமியிடம் பிராத்தித்தால் இத் தடை நாளடைவில் மறைந்துவிடும்.

**நேர சமநிலை :**
நேரத்தை சமமாகப் பங்கிடவேண்டும். கல்வி, தொழில், குடும்ப வேலைகளில் முன்னுரிமை கொடுத்து திட்டமிட்டுச் செய்யவேண்டும்.
நேரத்தை வீணாக்கக்கூடாது. சுவாமி உள்ளே இருக்கும் சக்தி எனபதை சதா நினைவில் கொள்ளவேண்டும்.

**தொடர்பாடலில் சமநிலை :**
எமது பேச்சு அன்பாகவும் இனிமையாகவும் மென்மையாவும் உண்மையானதாகவும் கேட்பவருக்கு பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். ஏனையோரின் கருத்துக்கு மதிப்பளித்து உன்னிப்பாக கேட்கவேண்டும். எண்ணம், சொல், செயலில் தூய்மையும் ஒருமையும் இருக்கவேண்டும். எனக்கு மற்றையவர்கள் எதைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறாயோ அதையே மற்றவருக்கு செய்யவேண்டும்.

**பணத்தில் சமநிலை :**
தேவை. விருப்பம், கட்டுப்பாடு இவற்றுடன் பணம் சம்பாதித்து, செலவழிக்க வேண்டும். திறனிருந்தால், நன்றாகச் சம்பாதித்து நன்றாக நிறுவனத்தில் சேவைக்காகப் பகிரவேண்டும். பணம் காலணி போன்றது. சிறி தானால் கால் வலிக்கும். பெரிதாகினால் சௌகரியமாக நடக்கமுடியாது.


**சக்தி சமநிலை :**
வேலை செய்வதற்கு சக்திவேண்டும். சக்தி விரயம் எங்கள் புலன்களால் ஏற்படும். ஆகவே புலனடக்கம் மிகவும் தேவை. சக்திகள் பல வகையானவை. மின்சக்தியை விரயம் செய்யாது பாவிக்க வேண்டும். எமது பழக்கவழங்கங்களும் சமநிலையில் இருக்கவேண்டும். நேர்மறை எண்ணங்கள் சக்தியை விரயம் செய்யும். எமது ஆறு உள்ளதிரிகளும் சக்தியை விரயம் செய்வன வாகும். நித்திரைஅளவாகக் கொள்ளவேண்டும்.

**வடபிராந்திய இணைப்புக்குழுவின் தலைவர் K.V.சிவநேசன் அவர்களின் தொகுப்புரை :**



சமநிலை பேணுவதற்கு தடையாக இருப்பவற்றை மேலும் விவரித்திருக் கலாம். உணவைப் பொறுத்த வரையில் பாத்திர சுத்தி, பதார்த்த சுத்தி, பரிமாறுபவர் எண்ணம் எல்லாம் கலந்திருக்கும். பேச்சு இனிமையாகவும் சத்தியமாகவும் இருக்க வேண்டும். சுவாமியிடம் அன்பைக் கூட்டினால் அவரது சக்தி சமநிலையைப் பேண உதவி செய்யும்.

ஜெய் சாயிராம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காயத்திரி மந்திரத்தின் மகிமை"
## அன்பன் வெ.கிருகஷ்ணமூர்த்தி அவர்களின் உரை

சுவாமியின் பாதக்கமலங்களுக்கு நமஸ்காரம். இதைப்பற்றி ரேடியோ சாயி குழு Youtube இல் தொடர்ச்சியாக வெளியிட்டது. எத்தனைதரம் என்று எண்ணி இம் மந்திரத்தைச் சொல்வதிலும் பார்க்க கருத்தைத் தெரிந்து இதயபூர்வமாகச் சொல்வது சாலச் சிறந்தது. சுவாமியின் உச்சாடனம் செய்யும் வீடியோ போட்டு உன்னிப்பாகக் கேட்கச் சொன்னார். அவர் ஐந்து பாகங்களாகப் பிரித்து சரியாக உச்சரித்து சொல்லச் சொன்னார். 5 பாகங்களாவன :

"ஓம், பூர் புவ ஸ்வ:
தத் சவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தீயோ யோந: ப்ரசோதயாத்"

இதை எமது கைத் தொலைபேசிக்கு இறக்கி கிடைத்த நேர மெல்லாம் போட்டுவிடவேண்டும். பெரியோர்கள் மந்திரம் சொல்வதைப் பற்றித் தவறான அபிப்பிராயம் வைத் திருந்தார்கள். அவையாவன:


- ஒரு பிரிவினரைத்தான் இதை ஓதலாம். இது பிழையென்று சகலரும் ஓதலாம் என்று சுவாமி ஆசீர்வாதித்துள்ளார்.
- ஆண்கள் மட்டும்தான் சொல்லலாம். இதுவும் தவறு. இருபாலாரும் தடையின்றிச் சொல்லலாம் என்று சுவாமி கூறியுள்ளார்.
- கோவில்களில்தான் குறிக்கப்பட்ட நேரத்தில் மட்டும் தான் சொல்லலாம். இதுவும் தவறு. எங்கும் சொல்லலாம். எந்தநேரத்திலும் சொல்லலாம். ஆனால் பிரம்மமுகூர்த்தத்தில் சொல்வது மிகவும் விசேடம் என்று சுவாமி சொல்லியுள்ளார்கள்.

108 தடவைகள் கிரமமாகச் சொல்லிப்பாருங்கள். உங்களுக்கு அனுபவம் ஏற்படும். எனக்கு 2002ஆம் ஆண்டு பாரிசவாதம் வந்த பொழுது காயத்திரி மந்திரத்தை விடாது உச்சரித்தேன். சுவாமியுடன் காயத்திரி மந்திர ஜெபத்தின் மூலம் நேரடித் தொடர்பை ஏற்படுத்தலாம். இதனால் சுவாமி என்னைக் குணமாக்கினார்.



இன்னொரு நிகழ்வு, எனது மாமனாரின் சிநேகிதரின் மகன் லண்டனிலிருந்து மாமனாரைப் பார்க்கவந்தார். அப்போது என்ன உங்கட மாப்பிள்ளை வெளிநாடு போகவில்லையா என்று கேட்டுவிட்டார். இவரும் இவருடன் சேர்ந்து எனது மனைவியும் வெளிநாடு போகவில்லையே என்று கவலை கொண்டார்கள். நான் வேலை செய்யும் கம்பனி 'கிழக்குப் பதிப்பகம்' தமிழ் நூல்களை வெளியிடுவது தான் எமது தொழில். இதற்கு வெளிநாடு போகும் வாய்ப்புக் கிடையாது என்றாலும் மனைவி, மாமனார் கவலையைப் போக்க 'சுவாமி நினைத்தால் நடக்கும்' என்று சொல்லி காயத்திரி மந்திரத்தை ஜெபித்தேன். 2006ஆம் ஆண்டு ஜேர்மனி நாட்டில் Frankfort இல் புத்தகக் கண்காட்சிக்கு அழைத்தார்கள். அங்கிருந்து முனிச் (Munich) என்ற இடத்திலுள்ள சாயி நிலையத்தில் உரை நிகழ்த்தவும் அழைப்பு வந்தது. ஜேர்மனி, லண்டன், பிரேஞ்சு எல்லா இடங்களுக்கும் போய் வந்தேன். சுவாமியின் ஆசீர்வாதம் எப்படி என்று இப்போது தெரிந்ததா? காயத்திரி மந்திரத்தை கருத்துவிளங்கி, இதயபூர்வமாக ஜெபித்தால், பிரச்சனைகள் எல்லாம் தீர்ந்துவிடும். எல்லோருக்கும் நன்றி.

ஒவ்வொரு மாகாண இளைஞர் இணைப்பாளரும் தமது வருங்கால சேவைத் திட்டங்களைச் சொன்னார்கள். **Dr.** தனேஷ்குமார் தேசிய இளைஞர் இணைப்பாளர் குருபூர்ணிமாவுடன் இளைஞர் மகாநாடு பிரசாந்தியில் நடைபெறும் எனவும். அதன் மையக் கருத்து, 'உள்ளிருந்து ஒரு அழைப்பு' என்பதேயாகும். சகலரும் தயாராக வேண்டு மென்று சொன்னார். அத்துடன் வருங்காலத்தில் மத்திய சபையின் மேற்பார்வையில் ஒரு இளைஞர் சபையை உருவாக்க உத்தேசித் துள்ளதாகவும் சொன்னார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி - பதில்



இதையடுத்து கேள்விகள் கேட்கப்பட்டு பதில்களும் அன்பர் வெ.கிருஷ்ணமூர்த்தி அவர்களினால் கொடுக்கப்பட்டன. அவையாவன :

**கேள்வி:**
சாயி நிறுவனத்தில் மட்டும் தானா நாம் வேதம் சொல்லவேண்டும், வேறு இடங்களிலும் சொல்லலாமா?

**பதில்:**
வேதம் ஓதச் சொல்லக்கேட்டால் ஓதலாம். ஆத்ம திருப்தி, நேரம் இருந்தால் சொல்லலாம்.

**கேள்வி:**
மற்றவர்கள் சுவாமியைப் பற்றிக் கிண்டல் செய்தால் எப்படிச் சமாளிப்பது?

**பதில்:**
நான் விபூதி, குங்குமம் போட்டுக் கொள்வேன். இதனது மகிமையைப் பற்றிச் சொல்லத் தெரிய வேண்டும். கிண்டலுக்காக நாம் எமது பாதையிலிருந்து விலகக்கூடாது.

**கேள்வி:**
சாயி நாமம் உச்சரித்தால் மட்டும் போதாதா? வேறு சாதனைகளும் செய்ய வேண்டுமா?

**பதில்:**
நாங்கள் ஆன்மீகத்தில் வெவ்வேறு நிலைகளில் இருப்போம். முதல் நிலையில் படம், உருவம் பிரார்த்தனை தேவைப்படும். சுவாமி எங்கும் உள்ளார் என்ற நிலையை உணர்ந்தால், வேறு சாதனைகள் தேவைப்படாது.

**கேள்வி:**
வேதமோ பிரார்த்தனையோ ஏன் குறிக்கப்பட்ட நேரத்தில் செய்யவேண்டும்?

**பதில்:**
நேரத்தில் பிரம்மமுகூர்த்தமே சிறந்தது. இடங்களுக்கும் வெவ்வேறு அதிர்வுகள் உண்டு. உதாரணமாக கைத்தொலைப்பேசி சில இடங்களில் நன்றாக இயங்கும். சில இடங்களில் சமிக்ஞை இராது.

**கேள்வி:**
இப்போது அவதாரத்தின் உடல் இல்லை?


**பதில்:**
நாம் அவரின் போதனைகளுக்கும் நாமத்திற்குமே முக்கியம் கொடுக்க வேண்டும்.

**கேள்வி:**
சாதனை செய்யாத மாணவர்கள், சாதனை செய்யும் மாணாக்கர்களைவிட பரீட்சைகளில் மேன்மையான சித்தி பெறுகிறார்கள். ஏன்?

**பதில்:**
உதாரணமாக எனது தம்பி சாதனை செய்வதில்லை. ஆனால் மேலான உத்தியோகம், மேலான சம்பளம் பெறுகிறார். அவரே என்னிடம் உள்ள சாந்தி, ஆனந்தம், மனத்திருப்தி தன்னிடம் இல்லையென்று சொல்லி யுள்ளார். மாணவர் நன்றாக படிக்க வேண்டும் உயர் தொழிலை பார்க்க வேண்டும். கூடிய சம்பளம் பெற வேண்டும். ஆனால் நிறுவனத்தில் மும்முரமாக சேவையில் ஈடுபடவேண்டும்.

**கேள்வி:**
சுவாமியை பகிடி பண்ணிப் பேசும்போது என்ன செய்யலாம்?

**பதில்:**
எங்களின் நடத்தையைப் பார்த்தே அவர்கள் கேலி செய்வார்கள். கேலியால் நாங்கள் பதட்டமில்லாது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருந்தால் அவர்கள் நிறுத்திவிடுவார்கள். நாங்கள் மற்றவர்களையோ மற்றைய மதங்களையோ அவமதிக்கக்கூடாது. எல்லோருக்கும் தெய்வபிரீதி, பாபபீதி, சங்க நீதியைப் பற்றிச் சொல்லி நாமும் கடைப்பிடிக்க வேண்டும்.

கண்களில் அன்பு பெருகவேண்டும்.

வார்த்தையில் இனிமை இருக்க வேண்டும்.

சகலதிற்கும் ஆதாரம் சுவாமியே என்று இருக்க வேண்டும்.

**கேள்வி:**
சுவாமி மகா சமாதி அடைந்தபோது உங்களின் மனநிலை எப்படி இருந்தது?

**பதில்:**
இயேசுபிரான் மூன்று நாள்களில் உயிர்த்தெழுந்த மாதிரி சுவாமியும் மீள எழும்புவார் என்று நம்பினேன். அவரின் பூதவுடல் அடக்கத்தின் போது விபூதி மலர்கள் போடச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் உடல் இல்லாவிட்டாலும் ஆனந்தம் நிரம்பிய பரவசமான நினைப்புகள் உள்ளனவே. அவரின் போதனைகளைச் சிந்தித்துப் பின்பற்றுவதில் ஆனந்தம் எழுகின்றது.

**கேள்வி:**
உயர் மனமாற்றம் சடுதியாகக் கிடைக்குமா அல்லது படிப்படியாக கிடைக்குமா?

**பதில்:**
இதன் அளவுகோல், எப்படி யிருந்த நாம் இப்போது எப்படியிருக்கி றோம் என்பதேயாகும். எண்ணம், வாக்கு, செயலில் தூய்மை இருக்க வேண்டும். சுவாமி நினைத்தால் சடுதியாக ஏற்படும். நாம் முயற்சி செய்தால் காலப்போக்கில் சுவாமி ஏற்படுத்துவார்.

**கேள்வி:**
சுவாமி ஏன் ஆண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்?

**பதில்:**
வியாதி கூடிய ஆள்களுக்கு வைத்தியர் முக்கியத்துவம் கொடுப்பது போல சுவாமியும் கொடுக்கிறார்.

**கேள்வி:**
மகாநாட்டிற்கு வந்தவர்களுக்கு சுவாமியின் ஆசீர்வாதம் உண்டென்றால் வராதவர்களுக்கு ஆசீர்வாதம் இல்லையா?

**பதில்:**
சுவாமி எங்களின் முயற்சிக்கும் இடம் விட்டுள்ளார்கள். இதை நிரப்பினால், ஆசீர்வாதம் போதியளவு கிடைக்கும்.

**கேள்வி:**
சுவாமி ஏன் வியாதியைத் தன் உடம்பில் ஏற்றுக்கொண்டார்?


**பதில்:**
ஏனையோரின் துன்பங்களை ஏற்றுக்கொள்வது அவதாரங்களின் இயல்பு. தமது சக்தியைத் தனது நன்மைக்காக உபயோகிக்க மாட்டார்கள். பதில் நிச்சயமாகச் சொல்லமுடியாது.

**கேள்வி:**
பிறரிடம் இருக்கும் தெய்வீகத்தை எப்படி உணரலாம்?

**பதில்:**
இது தேவையா? எம்மில் இருக்கும் தெய்வீகத்தை உணரமுற்படுவோம்.

**கேள்வி:**
பாதநமஸ்காரத்தைப் பற்றிச் சொல்லவும்?

**பதில்:**
சுவாமி எடுக்கச் சொன்னால்தான் எடுக்கவேண்டும். பாவங்கள் நீங்கி விடும் உணர்வுடன் எடுக்க வேண்டும். எடுக்கும்போது அமைதி ஆனந்தம் ஏற்படும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:**
சாயி காயத்திரியா, காயத்திரி மந்திரமா? சூரிய காயத்திரியா? சிறந்தது இது?

**பதில்:**
எல்லா நதிகளும் சமுத்திரத்திலே சேருமாப் போல எல்லா காயத்திரிகளும் இறைவனுடன் இணைப்பை ஏற்படுத்தக்கூடியவை. எதில் நம்பிக்கை இருக்கிறதோ அதை உச்சரிக்கவும்.

**கேள்வி:**
எப்படிப் பிரம்மச்சாரியத்தைக் கடைப்பிடிப்பது?

**பதில்:**
ஆண், பெண் வித்தியாசம் உடம்பில் சுரக்கப் படும் ஹோர்மோன்களால் ஏற்பட்டது. எம்மில் விலங்குக் குணம் உண்டு. மிகுதியை பிரத்தி யேகமாகச் சொல்வேன்.

**கேள்வி:**
நீங்கள் எங்களுக்குத் தரும் செய்தி என்ன?

**பதில்:**
நான் இரண்டு நாள்களாகவே நிறையச் செய்திகள் கூறியிருக்கிறேன். நல்ல சாயி பக்தர்களாக இருக்க வேண்டும். எமது வாழ்க்கை அவரின் செய்தியாக இருக்க வேண்டும்.

இந்த இரண்டு நாள்களும் சுவாமியுடன் இருந்த உணர்வே இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த சுவாமிக்கும் சாயி நிறுவனத் தலைவருக்கும் உங்கள் எல்லோருக்கும் மனமார்ந்த நன்றி என கூறி முடித்தார்.

ஜெய் சாயிராம்.

குருபூர்ணிமாவின்போது **Zone 4 A, B** இளைஞர் மகாநாடு புட்டபர்த்தியில் நடைபெறும் என்றும் அதற்குரிய ஆயத்தங்களைச் செய்யுமாறு வீடியோபடம் மூலமும் அன்பன் ராகுலன் விளக்கமளித்தார்.

எமது மத்திய சபைத் தலைவர் அன்பன் வி.மனோகரன் எல்லோருக்கும் நன்றி கூறி இளைஞர்களை இம் மாநாட்டில் பெற்ற பயனை நிலையத்திற்குச் சென்று ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

**இளைஞர்களே! 18.11.1999 இலும் 21.11.1999 இலும் பகவான் ஆற்றிய அருளுரைகளை படித்து பயிலவேண்டும்.**



## தேசிய சேவைத் திட்டம்




**சத்திய சாயி பாடசாலை -மானிப்பாய் - யாழ்ப்பாணம்**

கல்வி சேவைத்திட்டத்தை நோக்காக கொண்டு இலங்கையின் முதலாவது சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆண்டு 1 தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 180 பிள்ளைகள் கல்வி பயில்கின்றார்கள்.
இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தெலைபேசி: +94 21 225 5086
E mail - info@ssiosrilanka.org
saischool@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சத்திய சாயி பாடசாலையில் 17.12.2018 அன்று நிகழ்த்திய உரை



நான் இன்று உங்களுக்கு Happy Parenting workshop and inspiring teachers workshop இரண்டையும் கலந்து எனக்கு தரப்பட்ட குறுகிய நேரத்தில் மிகச் சுருக்கமாக கூறலாம் என நினைக்கிறேன். சத்திய சாயி பாடசாலை ஆசிரியர்களை உள்ளடக்கியதாய் அவர்களுக்கு பிரயோசனமாக சில விடயங்களை கூறுகின்றேன்.

ஆசிரியர்கள் 3 வகையினர் உள்ளனர்.
Complaining Teachers (முறைப்பாடு கூறும் ஆசிரியர் :

எப்போதும் மாணவர்களைப் பற்றி குறை கூறிக்கொண்டு இருப்பார்கள்.

Explaining Teachers (விளங்கப்படுத்தும் ஆசிரியர்) : இவர்கள்எப்போதும் விடயத்தை விளக்கிச் சொல்வார்கள். ஆனால் மாணவர்களுக்குள் அது உள்வாங்கப்பட்டதா என்பதைப் பற்றி கவனம் எடுப்பதில்லை.

Inspiring Teachers (எழுச்சியூட்டும் ஆசிரியர்): இவர்கள் மாணவர்கள் யாவரையும் இணைத்து தான் கூறும் விடயங்களை மாணவர்கள் உள்வாங்கும் விதத்தில் கற்பிப்பார்கள். இவர்களே சிறந்த ஆசிரியர்களாவர்.

வகுப்பில் கற்பிக்கும் போது எல்லா மாணவர்களும் ஆசிரியர் கூறுவதை முழுவதுமாக உள்வாங்கும் முகமாக மாணவர்களுடன் தொடர்பு கொண்டு கற்பிக்கும் போது (கூறியதை திரும்பக் கேட்டல்), குறித்த மாணவனை குறித்து வினா கேட்டல் போன்ற முறைகளால் இணைப்பை ஏற்படுத்த வேண்டும்) மாணவர்களில் உள்வாங்கும் திறனை அதிகரிக்கலாம்.

மாணவர்களுக்கு நல்ல Marks (பாடங்களில்) எடுப்பதுடன் நல்ல Remarks (குறிப்புரைகளும்) எடுக்கவும் வேண்டும் என்பதை அறிவுறுத்தப் படவேண்டும்.

அடுத்து பெற்றோரியல் பற்றி பார்ப்போம்.

இக்காலத்தில் பெற்றோர் பிள்ளைகளை வளர்க்கும் போது நான்கு விதமான அணுகு முறைகளைப் பின்பற்றுகிறார்கள். அதில் முதல் மூன்று முறைகளும் தவறான அணுகு முறையாகும். நான்காவது முறையே சரியான அணுகு முறையாகும்.

- பிள்ளைகளின்மேல் அதிகமான பாசத்தை கொடுப்பதுடன் பிள்ளைகள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்து வளர்க்கிறார்கள். பிள்ளைகளுக்கு அந்தநேரம் அவசியமற்ற பொருள்களையும் பிள்ளை கேட்பதற்காக வாங்கிக் கொடுக்கிறார்கள். இந்தப் பிள்ளை தனக்கு எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் தோல்வியை ஏற்கமுடியாத பிள்ளையாகவும் வளர்கின்றது. இவ்வாறாக பெற்றோர் பிள்ளைகளை வளர்ப்பதற்கு காரணம் சிறுவயதில் தாங்கள் இருந்ததைவிட தங்கள் பிள்ளைகள் மிகவும் வசதியாக வாழவேண்டும் என்றும் தங்களை விட உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் என்றும் கருதி தாம் அணுகும் முறை தவறானது என்று தெரியாமல் தவறு செய்கிறார்கள்.




இங்கு தாயும் தந்தையும் தமக்குள்ளே முரண்பட்டுக் கொள்வார்கள். அவர்களுக்கிடையில் புரிந்துணர்வு காணப் படாமையால் பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பிலும் தமக்குள்ளே முரண்பட்டுக் கொண்டு இருப்பார்கள். இவர்களின் பிள்ளைகள் ஆசிரியர்களை மதிக்காமை பெரியோரை மதியாமை, ஆசிரியர் சொல்வதை ஏற்று நடக்காமை போன்ற குணங்கள் உடையவர்களாக இருப்பார்கள்.

இங்கு தாய், தந்தை, பிள்ளைகள் அனைவரும் ஒரு அணியாக (**Team work**) செயற்படுவார்கள் பெற்றோர் பிள்ளைகளில் அன்பு காட்டுவதுடன் அவர்களுக்கு தேவையானவற்றை மட்டும் வாங்கிக் கொடுத்து பெற்றோர் பிள்ளைகளுடன் ஒரு புரிந்துணர்வுடன் செயற்படுவார்கள் இந்தப் பிள்ளைகள் மிகவும் நல்ல மாணவர்களாக திறமையான மாணவர்களாக வளர்வார்கள் **இந்த முறையே சரியான அணுகுமுறையாகும்.**

முதல் மூன்று முறைகளிலும் வளர்க்கப்படும் பிள்ளைகள் பாடசாலைக்கு வரும்போது ஆசிரியர் அவர்களின் குடும்ப பின்னணியை புரிந்து புரிந்துகொண்டு புரிந்துணர்வுடன் பிள்ளைகளை அணுகி பெற்றோரையும் இணைத்து பிள்ளைகளை நல்வழிப் படுத்த முயலவேண்டும். இது Inspiring Teacher ஆல் மட்டுமே செயற்படுத்த முடியும்.

பிள்ளைகளுக்கு இறைவன்மேல் அன்பு, பாவம் செய்ய பயம், சமுதாயத்துக்கு நல்லவை செய்ய வேண்டும் என்ற பண்புகளை வளர்த்துவிடவேண்டும்.

சத்திய சாயி பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்கு சுவாமிமேல் விருப்பம் இல்லாத செயல்கள் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் உணரச் செய்யவேண்டும். ஒழுக்கமில்லாத கல்வி விரும்பத்தகாதது மட்டுமல்ல. இது மிகவும் ஆபத்தானது என சுவாமி கூறியுள்ளார். எனவே மாணவர்கள் ஒழுக்கத்தில் மிகக் கவனம் எடுக்கப்பட வேண்டும். குழந்தைகள் எவரும் கெட்ட வார்த்தை பயன்படுத்துவதில்லை. கேட்ட வார்த்தைகளையே பயன்படுத்துகிறார்கள். எனவே பெரியவர்கள் குழந்தைகளின் முன்னால் நல்ல வார்த்தைகளைப் பயன் படுத்த வேண்டும்.அவர்கள் **கேட்டதைச் சொல்வார்கள், பார்த்ததை செய்வார்கள்.**

ஜெய் சாயிராம்

தொகுப்பு : வி.யுகமலர்
சத்திய சாயி பாடசாலை.




# தேசிய சேவைத் திட்டம்




**புற்றுநோயாளர் காப்பகம்**
**ஹன்வல, மகரகம**

**வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புற்று நோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதில் வழங்கப் படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 715 678 332
E mail - info@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பன் வெ.கிருக்ஷ்ணமூர்த்தி அவர்கள் 17.12.2018 அன்று யாழ். சாயி நிலையத்தில் நிகழ்த்திய உரை



பகவானின் பொற்கமலப் பாதங்களை வணங்கி அன்பான சாயி சகோதர சகோதரிகளே! யாழ்ப்பாணத்தில் உங்களை சந்தித்து சுவாமியுடன் எனக்கு கிடைத்த அனுபவங் களையும், சாயி குடும்பத்தில் இருக்கும் பெரிய வர்களிட மிருந்து கற்றுக்கொண்ட சில விடயங்களையும், சுவாமியே எனக்கு கொடுத்த வரப்பிரசாதமான நகைச்சுவை உணர்வினை சேர்த்து இந்த மாலைப் பொழுதில் இரண்டு மணிநேரத்தினை உங்களுக்கும் எனக்கும் நல்ல பொழுதாக அமைக்க முயற்சிக்கிறேன்.

தமிழ்நாட்டிலே புதிதாக திரைப் படங்களை வெளியிடுவதற்கு சில மாதங் களுக்கு முன், படத்தின் 'Trailor' என அப் படத்தில் காட்டப்படும் சில பாடல் Punch Dialogue மற்றும் சண்டைக் காட்சிகளை 3 நிமிடங்களுக்கு படத்தொகுப்பு ஆக்கி வெளியிடுவர். அதனைப் பார்த்துவிட்டு முழுப்படமும் அப்படியே விறுவிறுப்பாக இருக்கும் என நினைத்து படம் வெளியானவுடன் தியேட்டருக்கு சென்றவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும். ஆனால் எதிர் பார்த்ததைவிட மேலாக யாழ்ப்பாணத் திலிருக்கும் சாயி சகோதரர்கள் மட்டுமல்ல யாழ்ப்பாண மக்களைப் பற்றியும் சென்னையில் கூறப்பட்டதைவிட இங்கு வந்து பார்த்தவுடன் எனக்கு மிகவும் பிரமிப்பாக இருந்தது. நான் இலங்கைக்கு பல தடவைகள் வந்து கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் கதிர்காமம் போன்ற இடங்களுக்கு சென்றிருந்தபோதும் யாழ்ப்பாணம் வருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை. ஆனால் இம்முறை யாழ்ப்பாணம் வருவதற்கான பெரும் பாக்கியம் கிடைத்துள்ளது.

நான் முன்னமே கூறியதுபோல் திரைப்படம் வெளியிடுவதற்கு முன் 'Trailor' என்ற படத்தொகுப்பு வெளி யிடுவது போல் இன்று ஒரு வீடியோ தொகுப்பு ஒன்றை எடுத்து வந்திருக்கிறேன். இங்கு நான் மட்டும் தனியாக வர வில்லை. என்னுடன் எப் போதுமே கூடவரும் சுவாமியும் மற்றும் ஔவையாரும் முருகனும் வந்துள்ளார்கள். இந்த இரண்டு மணிநேர மேடைப்பேச்சினுடைய முக்கிய பேச்சாளர்கள் முருகனும் ஔவையாருமே. நான் சில 'கொமெடி' காட்சிகளில் மட்டும் வருவேன். நான் இலங்கைக்கு வரும் தகவலை சென்னையிலுள்ள சில நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது, நான் சுவாமியின் ஆசீர் வாதத்துடன் ஒருநாள் யாழ்ப்பாணத்துக்கும் போகிறேன் என்று கூறியவுடன் அவர்கள் பிரமித்து, 'யாழ்ப்பாணத்துக்கு போகிறீர்களா' அங்குள்ள பெரும்பான்மையான மக்கள் பெரிய வர்களிடமிருந்து கற்றுக்கொண்ட நமது கலாசாரத்தை எவ்வளவு அழகாக பின்பற்று கிறார்கள் என்று பாருங்கள்' என்று கூறினார்கள். அதே போல் நான் இங்கு வந்து இன்று காலையிலிருந்து மாலைவரை சந்தித்த சாயி சகோதர சகோதரிகள் மட்டுமல்லாது நல்லூர் கோவிலுக்கு வந்திருந்த பக்தர்கள் மேலும் மானிப்பாய் சாயி பாடசாலையில் Happy Parenting & inspiring Teacher Workshop செய்தபோது சந்தித்தவர்கள் எல்லோரும் இந்த சமூகம் நல்ல ஒழுக்கத்தோடு நல்ல தலைமுறைகளை உருவாக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தையே கொண்டிருந்தார்கள். மேலும் உங்கள் விருந்தோம்பல் பண்பை சொல்லிக் கொண்டே போகலாம். காலையில் மானிப்பாய் பாடசாலையில் தயிர் வைத்திருந்தார்கள். எங்களைப் போன்றவர்களுக்கு உங்கள் 'கிரிபத்' மற்றும் ஏனைய உணவு களை உண்டாலும் தயிர்சாதம் உண்பதுபோல் திருப்தி ஏற்படாது. அதை அறிந்து அங்கிருந்த ஒரு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மணி எனக்கு தயிர் கொண்டுவந்து தந்தார்கள். இதுதான் உங்கள் விருந்தோம்பல் பண்பு. சுவாமியும் அப்படியே எங்களுக்கு தேவையானதை பார்த்துப் பார்த்து செய்வார். அப்படியே சுவாமியினுடைய நிறுவனத்தில் சுவாமி எது செய்தாலும் ஒரு நோக்கத் தோடுதான் செய்வார்.

நேற்று இரவு நாம் ஹட்டனிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது நாம் ஒரு வானிலும் மற்றைய இளைஞர்கள் பஸ்ஸிலும் வரும்போது 'பஸ்' சிறிது பின்தங்கிவிட்டது. அந்நேரம் எமது வாகனத்தில் ஓமகுண்டம் வளர்ப்பதுபோல் மெதுவாக புகை வர ஆரம்பித்தது. உடனே நாம் வாகனத்தைவிட்டு இறங்கி நிற்க பின்னே வந்த பஸ் அவ்விடத்துக்கு வர சரியாக இருந்தது. ஆகவே சுவாமி ஒரு காரணத்துக்காகத்தான் பஸ்ஸினை பின்தங்க வைத்திருக்கிறார். என்று புரிந்தது. அந்த பஸ் எமது வாகனத்துக்கு முன்பாக போயிருந்தால் இன்று நாம் சரியான நேரத்துக்கு காலையில் நடந்த பாடசாலை நிகழ்வுக்கு சென்றிருக்கமுடியாது. அப்படி ஆகியிருந்தால் அது பிழையான முன்னுதாரணமாக அமைந்திருக்கும். ஆகவே சுவாமி பஸ்ஸினை காலதாமதமாக புறப்படவைத்து எமக்கு உதவிசெய்துள்ளார். மேலும் பஸ்ஸில் ஏறி நாம் பயணித்துக் கொண்டிருந்தபோது அதிகாலையில் பஸ்ஸில் பிரயாணம் செய்தவாறே யுவதிகள் சுப்ரபாதம் பாடினார்கள். களைப்பு, பிரயாண சோர்வு என எதுவும் பார்க்காது அவர்கள் இறைசிந்தனையில் இருந்தது கண்டு என்னுள்ளே அப்பொழுதே யாழ். மக்களைப் பற்றிய உயர்வான எண்ணம் உருவானது. மற்றவர்கள் சென்னையில் கூறியதைவிட யாழ்ப்பாணம் கலாசாரம் எனக்கு பிரமாதமாக இருந்தது. இந்த என்னுடைய எண்ணத்தைக் கூறி நான் எனது பேச்சினுடைய முக்கிய கருத்துக்கு வருகிறேன்.

பகவானுடைய சங்கற்பத்தாலேயே நமக்கு சத்தியசாயி சேவை நிறுவனத்தில் இணையக்கூடிய ஒருபெரும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இப்போது முருகனுக்கும் ஔவை யாருக்கும் நடந்த உரையாடல் திரைப்படமாக வெளி வந்தது. எல்லோருக்குமே தெரிந்திருக்கும். இது மதுரைக்கு அருகில் பழமுதிர்ச் சோலை என்ற முருகனுடைய கோவிலிலே நடைபெற்றதாக வரலாறு. ஒரு தடைவ நான் இந்த திரைப் படக்காட்சியை பார்த்துக் கொண்டிருக்கும் போது முருகனின் கேள்விகளுக்கு ஔவையார் கூறிய பதில்கள் எமது சத்திய சாயி நிறுவனத்துக்கு பொருந்துவதாக எனக்குத் தோன்றியது. உடனே அதனை எமது சாயி சகோதரர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என முடிவெடுத்தேன். திரைப்படங்களில் பழைய பாடல்களை 'Remix' செய்வதைப் போல இங்கு ஔவையாரின் பாடலை Remix செய்ய முனைகிறேன். இந்த நிகழ்ச்சியில் பழமுதிர்ச்சோலைக்கு ஔவையார் களைப்பாக வந்தபோது அங்கு முருகன் ஒரு சிறுவனாக தோன்றி 'பாட்டி உனக்கு சுட்டபழம் வேண்டுமா', சுடாதபழம் வேண்டுமா' என கேட்க, ஔவையாரோ 'பழத்திலே சுட்டபழம் ஏது? என வினவுகிறார். உடனே முருகன் அருகிலிருந்த நாவல்மரத்தைப் பிடித்து உலுக்க பழுத்த பழங்கள் மண்ணில் விழுகின்றன. அவற்றை பொறுக்கி எடுத்த ஔவையார் பழத்தில் ஒட்டியிருந்த மணலை ஊதி அகற்றிவிட்டு உண்கிறார். உடனே முருகன், 'பாட்டி, பழம் சுடுகிறதா' என கேட்க ஔவையாருக்கு வந்திருப்பது சாதாரண சிறுவனல்ல என்பது புரிகிறது. உடனே முருகன் தன் சுய உருவைக் காட்டி தான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறுமாறு பணிக்கிறார். முருகனின் கேள்விகளுக்கு ஔவையார் பாடலா லேயே பதில் கூறுகிறார். உலகிலே அரியது என்ன? என முருகன் கேட்க அதற்கு ஔவையார்,


'அரியது கேட்கின் வரிவடிவேலாய், அரிது
அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது
மானிடராயினும் கூன், குருடு, செவிடு, பேடு
நீங்கிப் பிறத்தல் அரிது கூன், குருடு, செவிடு,
பேடு நீங்கிப் பிறந்த காலையும் ஞானமும்
கல்வியும் நயத்தல் அரிது ஞானமும் கல்வியும்
நயத்த காலையும் தானமும் தவமும் தான்
செய்தலரிது தானமும் தவமும் தான் செய்த
காலையும் வானவர் நாடி வழி
பிறந்திடுமே'

அதனை நான் சென்னையில் ஒரு இடத்தில் போட்டபோது இந்த பாடலின் தமிழ் அவர்களுக்கு விளங்கவில்லை. தமிழுக்கு மொழி பெயர்ப்பு கேட்டார்கள். அந்த அளவுக்கு தமிழ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சென்னையில் சிதைக்கப்பட்டுள்ளது. அந்தப் பாடலை இப்போதையமுறையில் பார்ப் போமானால்,

'மானிடராய்ப் பிறத்தல் அரிது, அதனிலும் அரிது, கூன், குருடு, செவிடு, நொண்டி மற்றும் வேறு குறைவுகள் இன்றி பிறத்தல். அதனிலும் அரிது, நல்ல பாடசா லையில் சேர்ந்து படித்து பல்கலைக்கழகம் போய் படித்தல், அதனிலும் அரிது, படித்தவுடன் வேலை கிடைப்பது. அதனிலும் அரிது நல்ல உயரதிகாரியாக அமைந்து வேலையில் முன்னேறி நல்ல சம்பளம் வாங்குதல் அரிது. அதனிலும் அரிது அத்தப் பணத்தை தான தருமங்களுக்கு பயன்படுத்துவது. அப்படி செய்தால் வானவர் வாழ்த்தும் வானுலகம் சென்று அடையலாம்.

இங்கு ஔவையார் சொன்னதுபோல் நல்ல குடும்பத்தில் குறையற்று பிறந்து நன்றாகப் படித்து நல்ல வேலை கிடைத்து நல்ல சம்பளமும் கிடைத்து தான தவம் செய்ய மனமும் இருந்துவிட்டால்... அந்த தான தவம் செய்வதற்குரிய அடித்தளமாக தான் அதற்குரிய வழிவகையாக தான் இந்த சாயி நிறுவனத்தை சுவாமி உருவாக்கியுள்ளார். அப்போது ஔவையார் சொன்ன **எல்லாவற்றிலும் அரிது சாயி நிறுவனத்தில் நாம் எம்மை இணைத்துக் கொண்டமை தான்.** சுவாமி இந்த நிறுவனத்தை அமைத்துக் கொடுத்தது அவருக்காக அல்ல. எமக்காகவே தான். நாம் முதலில் சத்திய சாயி நிறுவனத்தில் சேரும்போது சுவாமிக்காக அவர் மீதுள்ள அன்புக்காக ஏழைகள் கஷ்டப்படுபவர்களுக்கு உதவவேண்டும் என்பதற்காக சேவையில் ஈடுபடுவதாக நினைக் கிறோம். அதனால் சாயியை சந்தோஷப் படுத்துவதாக நினைக்கிறோம். அது அந்நிலையில் சரி. ஆனால் சிறிது அனுபவத்தின் பின் எமக்கு கிடைத்த இந்த வாய்ப்பு எமக்கானது. சேவை செய்வதன்மூலம் நாமே நன்மையடைகிறோம். ஔவையார் கூறிய அரிதினும் அரியது செய்வதற்கான வாய்ப்பு இதுவே என அறிய முடிகிறது.

எனக்கு இந்த அரிய வாய்ப்பை **பாலவிகாஷில் சேருவதன் மூலம் சுவாமி எப்படி கொடுத்தார்** என்பதைப் பார்ப்போம். நான் 1975இல் பாலவிகாஷில் சேர்ந்தேன். அப்போது மிகவும் விளையாட்டுத் தனமாக இருப்போம். எங்கே போனாலும் விளையாட்டுத்தான். பாலவிகாஷ் 4 மணிக்கு ஆரம்பமாவதென்றால் 3 மணிக்கே சென்று விளையாடத் தொடங்கி விடுவோம். அப்படி ஒரு வாலில்லாத வானரங்களாக இருந்தோம். அப்படி இருந்த என்னை இன்று இந்த மதிப்பிற்குரிய அவையிலே நின்று பேச வைத்த பெருமை எனது பாலவிகாஷ் குரு ஜெயஶ்ரீ அவர்களையே சேரும். நான் 10ஆம் வகுப்பு படிக்கும்போதே எனது தந்தை மாரடைப்பால் காலமாகிவிட்டார். எமது வீட்டில் நாம் 5பேர் இருந்தோம். இப்போது முருகனின் அடுத்த கேள்வியைப் பார்ப்போம். **உலகிலேயே கொடியது என்ன?** என ஔவையாரை முருகன் கேட்கிறார். அதற்கு ஔவையார்,

'கொடியது கேட்கின் வரிவடி
வேலோய்,
கொடிது கொடிது வறுமை
கொடிது.
அதனிலும் கொடிது
இளமையில் வறுமை.
அதனிலும் கொடிது
ஆற்றுணாக் கொடுநோய்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதனிலும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனிலும் கொடிது அவர் கையால் இன்புற
உண்பது தானே'

இங்கு ஔவையார் இளமையில் வறுமை மிகக் கொடியது என்று கூறுகிறார். சுவாமியின் அவதார நோக்கங்களைப் பார்க்கும் போது தவறான வழியில் செல்பவர்களை நேர்வழிப்படுத்தல், துன்பப்படுபவர்களுக்கு சேவை செய்தல், தர்மத்தை நிலை நாட்டல், இப்படியாக உள்ளது. உண்மையிலேயே வறுமை என்பது மிகக் கொடியது. அதனாலேதான் பரோபகாரம் இதம் சரீரம். Help ever, Hurt never, மானவசேவையே மாதவசேவை. இப்படி பலவிதங்களில் கூறப்படுவது வறுமையில் வாடுபவர்கள், துன்பப்பட்டோருக்கு உதவவேண்டும் என்பதையே. வறுமையிலும் இளமையில் வறுமை இன்னும் கொடியது. தெருவோரங்கள், ஹோட்டல்களில் சிறு பிள்ளைகள் படிக்கவேண்டிய வயதில் குடும்பவறுமை காரணமாக சிறுவேலைகள் செய்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிலருக்கு ஒருவேளை உணவு கூட கிடைக்காது. நாளை எதை உண்ணப்போகிறோம் என்பதே தெரியாது. அப்படியான வறுமையில் வாடுபவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்காகதான் **'நாராயண சேவை'** என்ன அன்னதானத்தை சாயி பகவான் உருவாக்கினார். அவர் அதற்கு 'ஏழைகளுக்கு உணவிடல்' என்றோ, 'பிச்சைக் காரர்களுக்கு உணவிடல்' என்றோ பெயர் வைக்கவில்லை. அவர்களுக்குள்ளும் நாராயணர் இருக்கிறார். அந்த நாராயணருக்கு சேவை செய்வோம் எனவே குறிப்பிடுகிறார். உண்மையில் கொடியதான இளமையில் வறுமையில் வாடும் இளைஞர்களுக்கு உதவவேண்டும். அதற்கு என் வாழ்க்கையே உதாரணம்.

நான் முன்னரே கூறியது போல் எனது சிறுவயதிலேயே தந்தை இறந்துவிட்டார். அப்போது அவருக்கு வயது 41. எனக்கு இரண்டு தங்கைகள். ஒரு தம்பி வீட்டில் 5 உறுப்பினர்கள். எமது வீட்டில் தினமும் சாப்பாடு நீர்மோர்தான். சோறுவடித்து உப்புபோட்டு. பச்சைமிளகாயும் போட்டு காலை, மதியம், இரவு என்று மூன்றுவேளையும் இதே நீர்மோர்தான். எப்போதாவது ஒருநாள் தெருவில் காய்கறிவிற்கும் பெண்மணி எம்மீது பாவப்பட்டு இரண்டு கீரைக்கட்டுக்களை குறைந்த விலைக்கு தருவார்கள். அதனை எனது அம்மா சமைத்துத் தந்தால் அன்று எங்களுக்கு தீபாவளி மாதிரி சந்தோஷம். அம்மா கீரைக் கறியை தனக்கு வைத்துக்கொள்ளமாட்டார். நான்காகப் பிரித்து எமக்கு கொடுத்துவிட்டு தான் நீர்மோர் அருந்துவார். அப்படி ஒரு அம்மாவின் வைராக்கியத்தைப் பார்த்து வளர்ந்த கொடியதான இளமையில் வறுமையை உணர்ந்து வளர்ந்த இந்த கிருஷ்ணமூர்த்தி இன்று MBA முடித்து ஒரு நிறுவனத்துக்கு முகாமையாளராகி 16 நாடுகளுக்கு சென்று வந்து இந்த அருமையான யாழ் மண்ணில் நிற்கிறேன் என்றால் அதற்கு முழுமையான காரணம் **சுவாமியும் அவரது பாலவிகாஷும் தான்.**

ஒருவேளை எனக்கு பாலவிகாஷும் சாயி குடும்பமும் கிடைத்திருக்கவில்லை என்றால் என்ன நடந்திருக்கு மென நினைத்துப் பாருங்கள். நீங்கள் செய்திகள் மூலம் கேள்விப்பட்டிருக்கலாம், கசாப் என்ற பாகிஸ்தானிய தீவிரவாதியைப் பற்றி. அவனுடைய நிலைமையும் என்னுடைய நிலமையும் ஆரம்பத்தில் ஒன்றுதான். அதாவது இளமையில் வறுமை, உண்மையில் பசி என்ற உணர்வை அடக்க முடியாது. நாம் மனிதனாகப் பிறந்துவிட்டோம். தினமும் உணவு உண்ணத்தான் வேண்டும். ஆனால் எனக்கு அந்நேரம் பாலவிகாஷ் கிடைத்தது. கசாபுக்கு பாலவிகாஷ் கிடைக்க சுவாமியின் அருள் இருந்திருக்கவில்லை. அதனால் அவரது வறுமையை தீவிரவாதிகள் பயன்படுத்திக் கொண்டனர். அவனுக்கு உணவு, உடை போன்றவற்றைக் கொடுத்து தமது வேலையை செய்வதற்காக இந்தியாமீது வெறுப்பை வளர்ந்தனர். ஆனால் எனக்கு பாலவிகாஷில் 'உலகிலுள்ளது ஒரே மதம், அதுவே அன்பெனும் மதம், உலகிலுள்ளது ஒரே இனம். அதுவே மனித இனம், உலகிலுள்ளது ஒரே மொழி, அது இதயமொழி' என்று கூறி அன்பை வளர்த்தார்கள்.

கசாப்புக்கும் எனக்கும் ஆரம்ப சூழ்நிலை ஒன்றுதான்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எனக்கு அன்பை கொடுக்கும்படி சொல்லிக்கொடுத்ததால் கொடுத்ததைவிட ஆயிரம் மடங்கு திருப்பிக் கிடைத்தது. அதனால் எனக்கு உங்கள்முன் நின்று பேசும் பாக்கியம். அவனுக்கு இந்திய மண்ணுக்கு அடியில் படுத்திருக்கும் பாக்கியம். ஆகவே ஏழைக்குழந்தைகள் கசாபாக மாறுவதை தடுக்கவும் கசாபுகள் கிருஷ்ணமூர்த்திகளாக மாற்ற மடைவதை ஊக்குவிக்கவும் எமக்கு கிடைத்த சந்தர்ப்பமே இந்த சத்திய சாயி நிறுவனம்.

மேலும் ஔவையார் சொன்னது போல் வறுமையிலும் கொடியது ஆற்றுணாக் கொடுநோய், அதுவும் எனக்கு ஏற்பட்டது. 2002 மே மாதம் 22 ஆம் திகதி மே மாத சென்னை வெயிலில் வேலை காரணமாக அலைந்து திரிந்து வேலைகளை முடித்துவிட்டு எனது inforsys கொம்பனியின் பொது முகாமை யாளரைப் பார்க்க அவரது அறைக்கு சென்றேன். பொது முகாமையாளர் சுசில் போனியாவின் முன்னால் போய் இருந்து 'May June Target achieved' என்று சொன்னதுதான் தாமதம் கண்கள் மங்கி உலகம் சுற்றி பொருள்களெல்லாம் விஸ்வரூபம் எடுத்ததுபோல் தோன்றி மயங்கி விழுந்துவிட்டேன். உண்மையில் எங்கே வீதியில் சுருண்டு விழாமல் அலுவலகத்தில் மேலதிகாரி முன் மயங்கிவிழ வைத்திருக்கிறார் சுவாமி. சில நிமிடங்களில் முகத்தில் நீர் தெளிக்க மயக்கம் கலைந்தது. எழும்ப முயற்சித்தேன். என்னைச் சுற்றி அலுவலர்கள் நின்றுகொண்டிருந்தனர். மேலதிகாரி மிகவும் பயந்ததுபோல் காணப்பட்டார். என்னால் எழுந்திருக்க முடியவில்லை. வலது கையும், வலது காலும் வேலை செய்யவில்லை. பேசுவதற்கு கஷ்டமாக இருந்தது. உடனே என்னோடு வேலை செய்த அலுவலகரொருவர் காரில் என்னைத் தூக்கிவைத்து மலர் வைத்தியசாலையில் சேர்த்தார்கள். அங்கு ICMU க்கு என்னைக் கொண்டு சென்றனர். அப்போது நான் கண்ணை மூடி எனது நிலைமையை சிந்தித்தேன். நான் திருமணம் செய்து ஒரு மகனும் இருக்கிறான். வீடு வாங்கிய கடன் மற்றும் இன்சூரன்ஸ் மாதாமாதம் கட்டவேண்டும். நான் இப்படி பக்கவாதம் வந்து படுத்துக் கிடந்தால் குடும்பத்தை யார் பார்ப்பார்கள் சுவாமி என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். எனக்கு என்னுடைய கவலை. என்னை ஸ்டெச்சரில் தள்ளிக்கொண்டு சென்ற இரண்டு ஆண் தாதிகளுக்கும் என்னை ICMU இல் கொண்டு சென்று படுக்கவைக்க கட்டில் இல்லையே என்ன செய்வது என்று தங்கள் கவலையைப் பேசிக்கொண்டு வந்தார்கள். இப்படியாக ICMU இல் நான் சேர்க்கப்பட்டேன். அங்க 13 பேர் இருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கொடுமையாள வியாதி. ஒவ்வொருவர் படும் கஷ்டத்தையும் பார்த்தேன். அப்படி படுத்திருக்கும் போது எனது வாழ்க்கையே ஒரு படம் போல என் நினைவில் ஓடியது. சிறுவயதில் நடந்தவை. பாலவிகாஷில் நடந்தவை. நான் மற்றவர்களுக்கு உதவிய நிகழ்வு என பலவகையான நிகழ்வுகள் பின்னோக்கி ஓடின. அவற்றை எனது மனச்சாட்சி கொண்டு மதிப்பிடும்போது பிறருக்கு செய்த உதவிகளுக்கும் சாயி நிலையசேவை மற்றும் ஆன்மீக செயற்பாடுகள் என நான் பிறருக்காக வாழ்ந்த வாழ்க்கை என நான் நினைத்தது உண்மையில் எனது நன்மைக்காக நான் செய்த செயல்களே என என் மனச்சாட்சி கூறியது. அதேபோல் என் மனைவி, குடும்பம், குழந்தை என வாழ்ந்த வாழ்க்கை சுயநலமானது என மனச்சாட்சி கூறியது. உடனே நான் சுவாமியிடம் பிரார்த்தித்தேன். **எனக்கு மீண்டும் ஒரு வாழ்க்கை கிடைத்தால் இந்த நோய் குணமாகினால் என்னால் முடிந்தவரை பிறருக்கு சேவை செய்வேன் அதற்கான பாக்கியத்தை அருளும்படி வேண்டினேன்.** அந்த இரண்டாவது வாழ்க்கையை சுவாமி எனக்கு கொடுத்தார். மூன்று மாதங்களாக மிகவும் கஷ்டப்பட்டேன். கை, கால் வழங்காது. அதற்கிடையில் வைத்தியசாலையில் இருக்கும்போது எனது மூளையை ஸ்கான் பண்ணிப் பார்த்தனர். அப்போது ஒரு பகுதியில் கான்சர் உள்ளதாக வைத்தியர்களுக்கு சந்தேகம் வந்தது. அதனால் மீண்டும் MRI Scan எடுத்தார்கள். Report இனை எடுத்துக்கொண்டு என்னருகில் வந்த டாக்டரின் முகத்தில் பண்டைய நாள்களில் நாடகமேடைகளிலே நாடகத்தின் சூழ்நிலைகளுக்கு (Situation) ஏற்றாற்போல் நிற ஒளிகளை மாற்றுவது போல் முகத்தின் நிறம் மாறிக்கொண்டே இருந்தது. ஏனெனில் அவரது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியத்துக்கும் பயத்துக்கும் ஏற்ப எனது மூளையின் ஒரு சிறிய பகுதிக்கு இரத்தஓட்டம் தடைப்பட்டிருந்தது. அந்த வைத்தியர் மிகவும் 'டென்ஷன்' ஆகி மற்றைய வைத்தியர்கள் எல்லோரையும் எனது அறைக்கு கூப்பிட்டார். அவர்கள் எல்லோரும் வந்து MRI Report ஐப் பார்ப்பதும் என்னைப் பரிசோதிப்பதும் தங்களுக்குள் கதைப்பதுமாக இருந்தார்கள். அவர்களுக்கே என்னைப் பார்க்க அதிசயமாக இருந்தது. ஒரு பகுதி மூளை செயற்படாத ஒருவர் எப்படி இப்படி இருக்கிறார் என்று ஆராய்ந்தனர். என்னை சட்டையின் பொத்தானை கழற்றி மீண்டும் போடும்படி பணித்தனர். நான் அப்படிச் செய்தவுடன் அவர்கள் அதிசயப்பட்டு பார்த்தனர். உண்மையில் நான் சுவாமியினுடைய அற்புதத்தால் ஒரு பகுதி மூளை செயல் இழந்தும் கூட இன்று உங்கள் முன்பேசி சிரித்து சகல வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறேன். உண்மையில் நான் கை, கால் செயற்படாது இருந்த மூன்று மாத அனுபவத்தை வைத்துக்கொண்டு உங்களுக்கு சொல்கிறேன். எமக்கு வயது ஆகஆக எமது வேலை களையே செய்ய முடியாத ஒரு நிலை வரும். ஆகவே அதற்கு முன் கை, கால்கள் நன்றாக இருக்கும்போதே கைதட்டி பஜனை பாடுங்கள், ஆசை தீர சேவை செய்யுங்கள்.

எனது பாலவிகாஷ், இளைஞர் காலங்களில் பஜனை பாடும்போது பக்கவாத்தியம் எது கிடைத்தாலும் முறையான பயிற்சி இல்லாவிடினும் அதனை வாசிப்போம். நன்றாக பாடவராவிட்டாலும் ஒவ்வொரு வரிகளையும் ஒவ்வொரு ஸ்வரங்களிலாயினும் பாடுவோம். நான் பங்குபற்றிய ஹட்டன் இளைஞர் விழாவிலும் 'சிவசம்போ' என்ற பாடலை சுவாமி கொடுத்த வரப்பிரசாதமாக நினைத்து ஒவ்வொரு வரிகளிலும் ஒவ்வொரு ஸ்வரங்களிலும் பாட ஆர்மோனியம் வாசிப்பவர் படாதபாடு பட்டார்.

எனக்கு மூன்று மாதத்தில் பக்கவாதம் சரியாகிய பின் ஒருநாள் சுவாமியினுடைய நேர்காணல் அறையில் சுவாமியை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது மற்றவர்களுக்கு பேசும் வாய்ப்பைக் கொடுத்து நான் பொறுமையாக இருந்தேன். உடனே சுவாமி என்னைப் பேசுப்படி ஹிந்தியில் கூறினார். உடனே நான் சுவாமி நான் தமிழ் என்பது உங்களுக்குத் தெரியும். எனக்கும் இந்த நேர்காணல் அறைக்கு வருவதற்கு முன் பிரச்சினைகள் வரிசையாக இருந்தன. ஆனால் உள்ளே வந்தவுடன் எதைக் கேட்பது என்று தெரியவில்லை என்று கூறினேன். உடனே சுவாமி 'உனக்கு பக்கவாதம் வந்ததல்லவா, அதைப் பற்றிக் கேள்' என்றார். உடனே நானும் அதற்கு என்ன காரணம் என்று கேட்டேன். உடனே சுவாமி நீ உன்னுடைய பிராரப்த கர்மா அதாவது முன்வினைப் பயன் காரணமாக 2002, மே. 22 இலிருந்து பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். அதுவும் இடதுபுறம். ஆனால் உன்னுடைய சஞ்சித கர்மா அதாவது இப்பிறவியில் செய்த செயல்கள் என்னுடைய சாயி நிறுவனத்தில் இணைந்து ஆர்வத்துடன் செய்த சேவை மற்றும் சாதனைகளாலும் என்னை உன்னுடைய தாய்தந்தையாக ஏற்றுக் கொண்டதாலும் நீ என் குழந்தையாகிவிட்டாய். அதனால் நான் உன்னுடைய பிராரப்த கர்மவினையை விலக்கி விட்டேன். மேலும் உனது இடது புறத்தில் வந்திருக்க வேண்டிய பக்கவாதத்தை வலது புறத்திற்கு மாற்றினேன். ஏனெனில் இடதுபுறம் எனில் உனது இதயம் பாதிக்கப்பட்டிருக்கும். மேலும் சுவாமி என்னிடம் 'நீ 3மாதமாக பக்கவாதத்தில் கஷ்டப்பட்டாயே உனக்கு வலியே இருந்திருக்காது. ஏனெனில் உன்னுடைய வலிகள் அனைத்தையும் நானே எடுத்துக்கொண்டேன்' என்றார். நான் இவ்வளவு காலமாக எனது கையும் காலும் பக்கவாதத்தில் மரத்துப்போனதால் உணர்வு இல்லையாகையாலே வலி தெரியவில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அப்போதுதான் உண்மையில் என்ன நடந்திருக்கிறது என்று தெரிந்தது. அத்தோடு சுவாமி எனக்கு 3 வார்த்தைகள் சொன்னார். **'You can Fly, You can Swim, You can Drive'**. அதற்கு நான் எனது அறிவிற்கேற்ப விமானத்தில் பறப்பேன். நீந்துவேன். கார் ஓட்டுவேன் என நினைத்துக்கொண்டேன். அவ்வளவும் நடந்தது. ஆனால் அதற்கு மேலாக எனது வாழ்க்கையே ஒரு Flying colours ஆக மாற்றுவார் என்பதும் வாழ்வெனும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகரத்தினை நீந்திக்கடக்க உதவுவார் என்பதும் என் வாழ்க்கையையும் பிறர் செயல்களையும் வழிநடத்த உதவி செய்வார் என்பதும் பின்னர்தான எனக்குப் புரிந்தது.

உண்மையில் சுவாமியின் தர்ஷன் (பார்த்தல்), ஸ்பர்ஷன் (பாதத்தை தொட்டு வணங்கல்), சம்பாஷன் (கதைத்தல்) இம் மூன்றும் கிடைத்தவர்கள் பாக்கியசாலிகள். சுவாமி கடவுளைப் பற்றி ஒரு உருவக கதை சொல்வார். கடவுளும் ஐஸ்கிரீமும் ஒன்று என்பார். அதாவது கடவுள் ஐஸ்கிறிமைப் போல இனிமையானவர். அவர் ஐஸ்கிரீமைப் போல குளிர்மையான சாந்தமானவர். அவர் ஐஸ்கிறீம் சூட்டில் உருகுவதைப் போல அன்பில் உருகுவார். மேலும் சுவாமி கூறுவார், நீங்கள் தலையில் குளிர்மையான ஒரு Factory வைத்துக்கொள்ளுங்கள். வாயில் இனிமையான வார்த்தைகளை உருவாக்கும் ஒரு Factory வைத்துக் கொள்ளுங்கள். இதயத்தில் அன்பினை உருவாக்கும் ஒரு Factory வைத்துக்கொள்ளுங்கள். அப்போது உங்களுக்கு இலவசமாக ஒரு Factory கிடைக்கும். அதுதான் **'Satistactory'** அடுத்ததாக ஔவையார் தன் பாடலிலே கொடுநோயிலும் கொடுமை **அன்பிலாப் பெண்டிர்** என்று கூறுகிறார். உடனே நாம் பெண்களுக்கு மட்டும்தான் அன்பு இருக்க வேண்டும், ஆண்களுக்கு தேவையில்லை போலிருக்கிறது என்று நினைக்கக் கூடாது. உண்மையில் என்ன வென்றால் கடவுளின் சொருபமே தாய். தாயுள்ளம், தாய்நாடு, தாய்மொழி என்று அதனால் தான் போற்றுகிறார்கள். அன்பு, பாசம், பொறுமை இப்படி எல்ல ாநல்ல குணங்களையும் கொடுத்துத் தான் தாயை இறைவன் படைக்கிறார். ஆனால் கணவன், குழந்தைகள், உறவினர் எல்லோரும் சேர்ந்து அந்தத் தாயை துன்பப்படுத்தி அன்பு இல்லாதவளாக மாற்றி விடுகின்றனர். அப்படி அன்பில்லாதவளாக மாறிய தாய் சமைக்கும் உணவை உண்பது கொடிது என்றே ஔவையார் கூறுகிறார். அதாவது இறைவன் ஒவ்வொரு வீட்டிற்கும் வந்து ஸ்பரிஷனம், சம்பாஷன், தர்ஷன் எல்லாம் கொடுக்க முடியாது என்பதால் தனது பிரதி நிதியாகவே பெண்ணைப் படைத்துள்ளான். அந்தப் பெண்ணின் இயற்கை குணத்தை மாற்றாமல் அவளையும் சந்தோஷப்படுத்தி நீங்களும் சந்தோஷமாக இருங்கள் என்றே ஔவையாரின் பாடலுக்கு விளக்கம் கொள்ள வேண்டும்.

முருகன் அடுத்ததாக ஔவையாரைப் பார்த்து **பெரியது என்ன** என வினவுகிறார். அதற்கு ஔவையார்,

'பெரியது கேட்கும் பெரிதமிழ் வேலோய்,பெரிது
பெரிது புவனம் பெரிது புவனமும்
நான்முகன் படைப்பு நான்முகனும் கரிய மால்
உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடலில் துயின்றோன்
அலைகடலோ குறுமுனியின் கையில்
அடக்கம்
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியின் திருமண புவியோ
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவன் பாகத்தில் ஒடுக்கம்
இறைவனோ தொண்டர் உள்ளத்துள்
ஒடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்வதும் பெரிதே'

பெரியது என்னவென்று பார்த்தால் யானை பெரிது, அதனைவிட நீலத்திமிங்கலம் பெரிது. அதனைவிட கடல் பெரிது, அதனைவிட உலகம் பெரிது அதனைவிட பிரபஞ்சம் பெரிது இவை எல்லாவற்றையும் விட உமாதேவி பெரியவள், அவளோ சிவனில் அடக்கம். சிவனோ பக்தன் உள்ளத்துள் உறைபவர். ஆகவே, தொண்டருடைய பெருமையைப் பாடுதலே பெரிது என்று ஔவையார் கூறுகிறார். ஆகவே அதனை நாம் செய்ய பழகிக்கொள்ளவேண்டும். சுவாமி தனது ஒன்பது ஒழுக்கக் கோட்பாட்டில் மற்றவர்களைப் பற்றி புறங்கூறக்கூடாது என்கிறார். சிலர் எம்மிடம் வந்து ஒரு விடயத்தை சொல்ல ஆரம்பிக்கும் போதே எமக்கு புரியும் இவர் யாரையோ அவதூறு கூறப்போகிறார் என்பது. உடனே மெதுவாக அவரிடமிருந்து விலகிவிட வேண்டும். இளைஞர் மகாநாட்டின்போது ஒருவர் வந்து ராகவேந்தர் சுவாமி ஜீவ சமாதி அடைந்தார், ராமர் நீருக்குள் சமாதியானார், கிருஷ்ணர் அம்புபட்டு சமாதியானார், சாயிபாபா இறுதித் தருணத்தில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சமாதியானாரே அதைப் பற்றி என்ன






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறீர்கள் என என்னைக் கேட்டார். நானோ உடனே, நான் சுவாமியைக் கேட்டுச் சொல்கிறேன் என்று கூறிவிட்டு மெதுவாக நகர்ந்துவிட்டேன். யாராவது இப்படியாக எம்மைக் குழப்புவதற்கு அல்லது புறங்கூறுவதற்கு வந்தால் மெதுவாக அவரைக் குழப்பி விட்டு நாம் அந்த கைங்கரியத்தில் அகப்படாது தப்பிவிடவேண்டும். சுவாமியின் பக்தர்களுடைய நல்ல விடயங்களைப் பார்த்து அதனையே பேசவும் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு தோட்டத்திலிருக்கும் பட்டாம்பூச்சி நல்ல மலர்களைத் தேடித்தேடி ஓடும். ஆனால் அங்குள்ள பன்றியோ தனக்கு தேவையான கழிவுகளையே தேடி ஓடும். அதேபோல் எமது மனம் மற்றவர்களின் நல்ல குணங்கள் அல்லது செயல்களை பார்க்கிறது எனில் அது நல்ல நிலையிலிருப்பதாக நினைத்துக்கொள்ளலாம். அதேநேரம் மற்றவர்களுடைய குறை குற்றங்களே எமது மனதுக்கு தோன்றுகிறது எனில் நாம் மாறவேண்டுமென்று அர்த்தம். நாம் எப்போதுமே மற்றவர்களின் நல்ல குணங்களை எடுத்துச் சொல்லி பாராட்டக் கற்றுக் கொள்ள வேண்டும். நான் இப்படி வெளி நாடுகளுக்கு விஜயம் செய்யும் போது எங்கங்கு பார்த்த தெரிந்து கொண்ட நல்ல விடயங்களை மற்றைய இடங் களில் பேசும்போது சொல்வேன். அந்த தொண்டர்களின் பெருமையை பரப்புரை செய்வேன். தொண்டர் தம் பெருமையை சொல்வதும் பெரிதே என்ற ஔவையார் வாக்குப்படி.

நான் புட்டபர்த்தி பல்கலைக்கழகத்தில் MBA படித்தேன். அங்கு சுவாமி படிப்பு, தங்குமிடம், சாப்பாடு எல்லாமே இலவசமாகத் தந்தார். அப்படிப்பட்ட அன்புள்ள சுவாமிக்கு சென்னையில் சுந்தரம் என்ற அவரது தங்குமிடத்தில் அவர் தங்கியிருந்த அறையில் 'Room Boy' ஆக சேவை செய்யும் பாக்கியம் எனக்கு 1986ஆம் ஆண்டு கிடைத்தது. அப்போது நான் இளைஞர்பிரிவிலிருந்த ஒரு இளைஞன். எனக்கும் இன்னொரு இளைஞருக்கும் அப்போது அந்த பாக்கியம் கிடைத்தது. சுவாமி சுந்தரத்துக்கு வந்து தங்கும்போது நகரசங்கீர்த்தனம் முடிந்தவுடன் தர்ஷனுக்கு வெளியே வருவார். பின் எங்களுடன் சிறிதுநேரம் பேசிவிட்டு பின் மாணவர்களுடன் காலை உணவு அருந்துவார். பின் வெளியே செல்வார். பின் சுந்தரத்தில் நடக்கும் பஜனையில் கலந்துகொள்வார். பின் மதிய உணவு உண்பார். பின் சிறிது ஓய்வு எடுப்பது போல காட்டிக்கொள்வார். தர்ஷனுக்கு செல்வார். இரவு உணவு உண்பார். இதுவே அவரது பொதுவான நடைமுறையாயிருக்கும். அந்நேரங்களில் சுவாமிக்கு தேவையானதை பார்த்துப்பார்த்து செய்ய வேண்டியது எமது கடமை. சுவாமிக்கு முன்னர் சேவை செய்த இளைஞர்கள் மூலம் எமக்கு ஒரு நல்ல தகவலொன்று கிடைத்தது. அதாவது சுவாமிக்கு உணவு பரிமாறும்போது சிறிது மேலதிகமாக போட்டுவைத்தால் அவர் சிறிதளவு உண்டுவிட்டு மீதியை வைப்பார். அந்த மீதி உணவை பின்னர் 'Roomboys' ஆகிய நாம் பகிர்ந்து உண்ணலாம், என்பதுதான அந்த தகவல். இப்படியே அந்த சேவை செய்யக்கூடிய நாள்களில் நாம் சுவாமியினுடைய தட்டிலே மீதியிருந்த உணவை உண்டு மகிழ்ந்தோம். ஒருநாள் உணவிற்காக முருங்கைக்காயில் சாம்பாரும் வேறு கறிகளும் சோறும் இருந்தன. நாம் சுவாமிக்கு பரிமாறும் போது நான் நினைத்தேன் சுவாமியினுடைய தட்டிலே ஐந்து முருங்கைக் காய் துண்டுகளை போட்டால் சுவாமி ஒன்றை உண்டுவிட்டு மிகுதி நான்கையும் பிரசாதமாக எமக்குத் தருவார் என்ற நினைப்பில் அப்படியே போட்டு சுவாமிக்கு பரிமாறினோம். அன்று சுவாமி தனது மாணவர்கள் எல்லோரையும் கூப்பிட்டு தனது தட்டிலிருந்த உணவை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து விட்டார். அந்த ஐந்து முருங்கைக்காய் துண்டுகளை மட்டும்தான் நன்றாக மென்று உண்டு நார்ப்பகுதியை தட்டில்வைத்துவிட்டார். அன்று எங்களுக்கு வேறு பல உணவுவகைகள் இருந்தும் சுவாமியினுடைய சாப்பாட்டுத் தட்டிலிருந்து பிரசாதம் கிடைக்க வில்லையே என்ற வருத்தத்துடன் சமையலறையில் அமர்ந் திருந்தோம். சுவாமி தனது அறைக்கு ஓய்வுக் காகச் சென்றவர் மெதுவாக சமையலறைக் கதவைத் திறந்துகொண்டு எம்முன் வந்து நின்றார். எம்மைப் பார்த்து நீங்கள் இவ்வளவு நாளாக அதிக அதிகமாக உணவு என் தட்டில் போட்டது நீங்கள் உண்பதற்குத் தானே? அது எனக்குத் தெரியும். இன்று நான் உங்களுக்குப் பரிமாறுகிறேன். நீங்கள் எனது குழந்தை களாயிருந்து எனக்கு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு பரிமாறுதல் மற்றும் எல்லா விதமான சேவைகளையும் செய்தீர்கள். உண்மை யில் தாய்தானே குழந்தைகளுக்கு பரிமாற வேண்டும், தட்டை எடுங்கள் நான் பரிமாறு கிறேன். என்று லாவகமாக மென்மையாக அன்புடன் பரிமாறினார். அப்போது குழம்புக்கும் ரசத்துக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா? என்று கேட்டு குழம்புக்கு போடும் மரக்கறிகளை நாம் 'தான்' என்று சொல்வோம். அவ்வார்த்தை எமது 'ஈகோ' (Ego) வையும் குறிக்கும். தான் என்பதை போடும் போது வாழ்க்கையும் குழம்புபோல் குழப்பமாகிவிடும். **தான் என்பது இல்லை என்றால் வாழ்க்கை ரசமாகிவிடும்** என்று அந்த உணவினை வைத்தே ஒரு தத்துவத்தை புரியவைத்தார்.

கிருஷ்ணர் வெண்ணெய் திருடி உண்டார் என்று கதை சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். நான் இது தொடர்பாக T. G. கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து தெரிந்து கொண்டது என்னவென்றால், கிருஷ்ணாவதார காலத்தில் பசுக்கள் எல்லாம் புல்லைத் தின்றோ, வேறு உணவுகளை உண்டோ அல்லது இப்போது செய்வதுபோல் ஊசிபோட்டோ பால் கறக்க வில்லையாம். அவை கிருஷ்ணரின் புல்லாங்குழல் இசை கேட்டே பாலை சொரிந்தனவாம். அப்போது அப் பசுக்கள் கிருஷ்ணனிடம் பாலைக் குடிக்குமாறு அல்லது அதிலிருந்து எடுக்கப்படும் தயிரையோ அல்லது வெண்ணெயையோ சாப்பிடுமாறு பிரார்த்தித்தனவாம். அதனாலேயே கிருஷ்ணன் வெண்ணெயை எடுத்து உண்டார். 'கோ' எனப்படும் பசுவினுடைய பிரார்த்தனையை நிறைவேற்றியதாலேயே 'கோவிந்தன்' என்று அவரைப் போற்றுகிறோம். அத்தோடு கிருஷ்ணர் தான் மட்டும் வெண்ணெயை உண்ணாமல் மற்றைய சிறுவர்களுக்கும் கொடுக்கிறார். அதன்மூலம் அவர் தெரிவிக்க விரும்புவது என்ன வென்றால் கிருஷ்ணர் என்ற பரமாத்மா மற்றைய ஜீவாத்மாக்களுக்குள்ளேயும் இருக்கிறார். ஆகையால் அந்த பசுக்களின் பிரார்த்தனையை நிறைவேற்ற எல்லா ஜீவாத் மாக்களுள்ளும் உள்ள அந்த பரமாத்மாவாகிய கிருஷ்ணர் உண்ண வேண்டும் என்பதாகும்.

இதேபோல நான் எங்கெங்கோ உள்ள பக்தர்களெல்லாம் தமது உணவை சுவாமிக்கு சமர்ப்பிக்கும்போது அவை சுவாமியினுடைய உணவுத் தட்டுக்கு வருகின்றன. அவற்றை அந்த பரமாத்மா சிறிதளவு உண்டுவிட்டு மிகுதியை பிரசாதமாக எங்களுக்கு தருகிறார். அன்று கிருஷ்ணர் தனது நண்பர்களுக்கு கொடுத்ததைப் போல சுவாமி சில சமயம் எம்மை சோதிப்பார். உதாரணமாக யாராவது ஒருவருக்கு சுவாமிமேல் நம்பிக்கை குறைவாக இருந்தால் சில விடயங்களை அவருக்கு முன்னால் வேண்டுமென்றே செய்துகாட்டுவார். அவரை அழைத்து உணவு மேசையில் வைத்துக் கொண்டு அளவுக்கதிகமான உணவை தனது தட்டில் போட்டுக்கொள்வார். அதனைப் பார்த்த அந்த நபர் சுவாமி கடவுள் அவதாரமென்றால் இப்படி அளவுக்கதிகமாக உண்பாரா என்று நினைத்து குழப்பமடைந்து நிறுவனத்தை விட்டு விலகிவிடுவார். அப்படி அவர் நிறுவனத்திலிருந்து விலகுகிறார் என்றால் அவரது நல்ல கர்மவினைகள் முடிவடைந்து பழைய தீய கர்மவினை பிராரப்த கர்மா செயல்பட ஆரம்பிக்கிறது என்று பொருள். சிலர் என்னிடம் ஒரு கேள்வியை கேட்டுள்ளனர். அதாவது சாயி நிறுவனத்தில் சேர்ந்துதான் சாயியை வணங்கவேண்டுமா? வெளியிலிருந்து தனியாக சுவாமியின் போதனைகளை பின்பற்ற முடியாதா என்பது அவர்களது கேள்வி. தனியாக சுவாமியின் போதனைகளை பின்பற்றமுடியும் என்பது உண்மையே. ஆனால் அப்படி தனிப்பட்ட சாதனையே போதுமெனில் சுவாமி இந்த சத்திய சாயி சேவா நிறுவனத்தை ஆரம்பித்திருக்க மாட்டார். உண்மையில் சுவாமி இந் நிறுவனத்தை ஆரம்பித்தது எமக்காகத்தான். அதாவது அவர் ஔவையார் கூறியதுபோல தானமும் தவமும் செய்ய எம் எல்லோருக்கும் ஒரு வாய்ப்பை கொடுத்துள்ளார். உருவகமாக சொல்ல வேண்டு மென்றால் எமக்கு வங்கிக் கணக்கை ஆரம்பித்து பணத்தையும் போட்டு ATM அட்டையையும் கொடுத்து 'Password' இனையும் கொடுத்து ATM இயந்திரத்துக்கு முன்னால் எம்மைக் கொண்டுசென்று நிறுத்தியுள்ளார். நாம் 'Password' இனைப் போட்டு பணத்தை எடுக்கவேண்டியதுதான். ஆனால் நாம் அதனைக் கூட செய்யவில்லை என்றால் அவர் என்ன செய்வது? உண்மையில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயி நிறுவனத்திலிருந்த சிலர் ஏதோ சிறு காரணங்களுக்காக நிறுவனத்திலிருந்து விலகி விடுகிறார்கள். அப்படியானவர்கள் தமது சஞ்சித வினையால் சுவாமியை கெட்டியாக பிடிக்க முடியாததால் பிராரப்த கர்மவினைச் சூழலுக்குள் அகப்பட்டு விடுகின்றனர். ஆனால் உண்மையில் அவர்களின் ஆழ் மனதிலே நிறுவனத்தினை விட்டுவிட்டதற்கான ஒரு வருத்தம் இருக்கும். ஆனால் வறட்டு கௌரவத்தால் மீண்டும் வர முடியாமல் தவிப்பார்கள். நாம் ஒருநாளும் சுவாமி கொடுத்த வாய்ப்பான சாயி நிறுவனத்தை தவற விட்டு விடக்கூடாது. உண்மையில் இன்றைய காலகட்டத்தில் சமுதாயம் சீர்கெட்டுப் போய் விட்டது. நல்லதுக்கு அங்கீகாரம் இல்லை. அதனால் சமுதாயத்தில் ஒரு நல்ல சுத்தமாக புது இரத்தம் பாய்ச்சும் செயற்பாடுதான் இந்த சாயி நிறுவனம். இந் நிறுவனம் இல்லையென்றால் இன்று நிறுவனத்தில் பாலவிகாஷ் கற்கும் குழந்தை களாகட்டும் சேவை செய்யும் இளை ஞர்களாகட்டும் வேறு எங்கு செல்வர்? சமுதாயத்தின் குப்பை க்குள் அகப்பட்டு சின்னாபின்ன மாகி விடக்கூடுமல்லவா? ஆகவே நாம் இந்நிறுவனத்தின் அவசியத்தை உணர வேண்டும்.

உண்மையில் சுவாமி ஒரு அழகான நிர்வாகி. அவரின் நிர்வாகத்திறனை தற்போதைய நிர்வாக தலைமைத் துவத்தில் இருப்பவர்கள் பின்பற்ற வேண்டும். அவர் மிக அழகாக அன்பாக ஆளும் அன்பாளர். அவர் கைக் கொள்ளும் அன்பு என்ற நிர்வாகதிறன் சிறப்பானது. அவர் சிலசமயம் தாயாக மாறி எமக்கு சேவை செய்வார். எனக்கு உணவு பரிமாறியதைப் போல. எப்படி உணவு பரிமாற வேண்டும் என்பதற்கு அவரே உதாரணம்.

ஔவையாரின் அடுத்த பதிலைப் பார்ப்போம். **உலகிலே இனியது என்ன?** என்று முருகன் கேட்க அதற்கு ஔவையார்,


இனிது இனிது ஏகாந்தம்<br>இனிது<br>அதனிலும் இனிது ஆதியைத்<br>தொழுதல்<br>அதனிலும் இனிது அறிவினர்<br>சேர்தல்<br>அதனிலும் இனிது<br>அறிவுள்ளோரை கனவிலும்<br>நனவிலும் காண்பது தானே,

இனியது என்னவென்றால் இனிப்புகள் இனியவை. பழங்கள் இனிமையானவை. ஆனால் ஆதியைத் தொழுதல் என்பதை சிறுவயதிலிருந்தே இறைவனை வணங்கல் என்று நாம் பொருள் கொள்வோமானால் அதற்காகத் தான் பாலவிகாஷ் உருவாக்கப் பட்டுள்ளது. ஆகவே இளமையிலேயே பாலவிகாஷில் சேர்வது இனிது. அதனிலும் இனிது அறிவினர் சேர்தல். அதற்காகத்தான் சத்தங்கம் உள்ளது. சாயி நிலையத்திற்கு வெறுமையாக (Empty) வரும் எங்களை முழுமையாக Meaningful, Peaceful, Useful ஆக மாற்றுபவர்கள். எங்கள் வாழ்க்கையை செதுக்குபவர்கள். தெய்வத்தை நோக்கி போக வைப்பவர்கள். நல்லவர்களாக மாற உதவி செய்பவர்கள் எல்லோரையும் சாயி நிலையத் துக்கு வந்து தான் நான் சந்தித்தேன். ஆகவே அந்த வாய்ப்பைத் தந்த சாயி **நிறுவனமே இனிது.** எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணும் எமது சேலத்து சாயி அன்பர்களையும் இந்தியாவிலிருந்து வந்த எனக்கு நான் கேட்காமலே தேவைகளை நிறைவேற்றும் இலங்கை சாயி அன்பர்களை யும் சாயிநிறுவனத்தில் மட்டும் தான் பார்க்க முடியும்.

முருகனின் அடுத்தகேள்விக்குரிய ஔவையாரின் பதிலைப் பார்ப்போம். **எது புதியது?** என்று முருகன் கேட்க அதற்கு ஔவையார்,

என்றும் புதியது, பாடல் என்றும் புதியது பொருள் நிறைந்த பாடல் என்றும் புதியது முருகா உனைப் பாடும் பொருள் நிறைந்த பாடல் என்றும் புதியது'

புதியது என்னவென்றால் பழைய பேனாவை மீள் நிரப்பாமல் (Refill) புதிய பேனா வாங்குதலும் பழைய வீட்டை புதுப்பிக்காமல் அதை இடித்து புதிய வீடுகட்டும் இக் காலத்தில் இவையெல்லாம் புதியவைதான். ஆனால் என்றும் புதியவை என்னவெனில் பொருள்நிறைந்த பாடல்கள். பழைய சினிமா பாடல்கள் சில நல்ல பொருள் பொதிந்த வையாக உள்ளன. உதாரணமாக, மனிதன் என்பவன் தெய்வ மாகலாம், வாரி வாரி வழங்கும் போது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளலாகலாம், வாழை போல தன்னைத் தந்து தியாகி ஆகலாம் உறுதியோடு மெழுகைப் போல ஒளியை வீசலாம்' என்கிறது ஒரு பழைய பாடல். ஆனால் இப்போதைய பாடல்கள் பொருளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தற்போதைய ஒரு பாடல் 'அரியகல்லு, தெருக்கல்லு, குத்துவிட்டா கலக்கல்லு' இதற்குள்நான் ஒரு அரிய கருத்தைக் கண்டுபிடித்தேன். நாம் பெரிய குடும்பத்தில் பெரிய செல்வாக்குடன் அரிய கல்லு போல பிறக்காமல் ஒரு கஷ்டப்பட்ட குடும்பத்தில் வறுமையாக தெருக்கல்லு போல பிறந்தாலும் பாலவிகாஷ் குரு கல்லை உளியால் குத்திக் குத்தி செதுக்குவதைப்போல எமது வாழ்க்கையைச் செதுக்கினால் எமது வாழ்க்கையே கலக்கல் ஆகிவிடும். இப்படியான அரிய கருத்துக்களை நாம்தான் கண்டறிய வேண்டியிருக்கிறது. அடுத்ததாக **உனைப்பாடும் பொருள்நிறைந்த பாடல் புதியது** என்கிறார். அதுதான் சாயி **நிறுவனத்தில் பஜனை,** இறை புகழ்பாடும் பாடல்களை நாம் எல்லா நிகழ்வுகளிலும் இங்கு பாடுகிறோம். அவையே எப்போதும் புதியவை. மேலும் ஔவையார் பாடுகிறார்,

'அருள் நிறைந்த புலவர் நெஞ்சில் அமுதம் தமிழ் கொடுத்த பொருள் நிறைந்த பாடல் என்றும் பதியது. முருகன் என்ற பெயரில் வந்த அழகே என்றும் புதியது

முறுவல் காட்டு குமரன் கொண்ட இளமை என்றும் புதியது உன்னைப் பெற்ற அன்னையற்கு உனது லீலை புதியது.'


உனது தந்தை இறைவனுக்கோ வேலும் மயிலும் புதியது திங்களுக்கும் ஞாயிறுக்கும் கந்தன் மேனி புதியது


சேர்ந்தவர்க்கு வழங்கும் கந்தன் கருணை புதிய அறிவில் அரியது அருளில் பெரியது. அள்ளி அள்ளி உண்ண உண்ண உனது தமிழ் இனியது முதலில் முடிவது முடிவில் முதலது மூன்று காலம் உணர்ந்த பேர்க்கு ஆறுமுகம் புதியது'

இந்த இரண்டுமணி நேரமாக சுவாமியின் அருளால் முருகனும் ஔவையாரும் கதைத்த இந்த படப்பாடல் தொகுப்பை முன்னிறுத்தி ஒரு நிகழ்வை செய்ய முடிந்தது.

மேலும் இங்கு ஒரு விடயத்தை குறிப்பிடவேண்டும். கடந்தமாதம் எமது வீட்டில் எனக்கு, மனைவி, மகன், மாமா, மாமி எல்லோருக்கும் ஒரு தொற்று தடிமன் வந்தது. அப்போது எனது மாமாவும் மாமியும் தனது பிள்ளையான எனது மனைவிக்கு கரிசனையாக உணவு மருந்தெல்லாம் கொடுத்தார்கள். உடனே எனக்குள்ளே ஒரு நெருடல் எனக்கும் அம்மா, அப்பா இருந்திருந்தால் என்னையும் கரிசனையாக கவனித்திருப்பார்களே என்று நினைத்தேன். அதற்கு பதிலாகத்தான் சுவாமி என்னை இலங்கைக்கு அனுப்பி இளைஞர் மாநாட்டில் கலந்துகொள்ளவைத்து அங்கு 300 சகோதர சகோதரிகளைத் தந்து இங்கு யாழ்ப்பாணத்தில் அருமையான விருந்தோம்பலையும் அன்பையும் பகிரவைத்து 'ஏன் நீ கவலைப்படுகிறாய். உனக்குத்தான் இவ்வளவு சகோதர, சகோதரிகள், பெரியவர்கள் எல்லோரும் இருக்கிறார்களே' என காட்டியுள்ளார். உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

ஜெய் சாயிராம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆசிரியவாண்மையில்"சத்யசாயிமனிதமேம்பாட்டுக்கல்வியை தகுதிநிலைப்படுத்தலின் முக்கியத்துவம்

ஆசிரியவாண்மை என்பது கல்வியில் பாடத்திட்டத்தினை கற்பிக்கும் வாண்மையின் தகுதி நிலையைக் குறிப்பது. அதன் மூலம் மாணவரை வாழ்கைப் போராட்டத்தில் நின்று நிலைக்கச் செய்யும் உன்னதமான தொழில் வாண்மையாக இது விளங்கு கிறது.


இன்று பாடசாலைகளிலுள்ள கல்வி முறைமை மாணவரை மையப்படுத்தியது. சத்ய சாயி கல்வி முறைமை சனாதன குருகுலக் கல்வி முறைசார்ந்த 'ஆசிரியவாண்மை'யை மையப்படுத்தியது.

பொதுவாகவேஆசிரியத்துவம் இயல் பூக்கமாகவே அறிவு ஒழுக்கம், தெய்வீகம், மொழி, கலாச்சாரம், சமூகம் ஆகியவற்றோடு பின்னிப் பிணைந்தது. இதனாலேயே மாதா,பிதா, குரு,தெய்வம் என குரு தெய்வத்தின் முன்னால் வைக்கப் படுகின்றார். 'ஆச்சார்ய தேவோபவ' என வேதங்கள் போற்றுகின்றன.

இவ்வாசிரியவாண்மையின் புனிதத்துவம் ஊதியம் சார்ந்து அமைவ தில்லை. மாட்சிமை கொண்ட மாணவரை உருவாக்கிய மனநிறைவே அவர்களுக்குக் கிடைக்கும் உயர் ஊதியம். இதுவே ஆசிரியத் துவத்தை ஆரோக்கியமாக மேலும் கட்டி யெழுப்புவது. காலத்தின் தேவைகளுக் கேற்ப இது நவீனமடைந்து வருகின்றது. இதில் ஆசிரியத்துவம், கற்றலை நெறிப்படுத்துபவர், நம்பிக்கையாளர், மதிப்பீட்டாளர், அறக்காவலர், நியாயஸ்தர், உளவியலாளர், நண்பர், தொண்டர், சமூகவளவாளர் என 60 க்கு மேற்பட்ட பாத்திரங்களில் அவரது ஒழுக்க விழுமியங்கள் 'யுனஸ்கோ' நிறுவனத்தினால் இனங் காணப்பட்டுள்ளன.

இவ்வாறு உலகரீதியில் கல்வியின் ஆற்றலில் பண்பு விருத்தியை, மனித நேயத்தை சீர்செய்வதில் கல்வி யியலாளர் கள், உளவியலாளர்கள், ஆன்மீக வியலாளர்கள், உயர் கல்வி நிறுவனங்கள் பல்வேறு சிந்தனைகள், சீர்திருத்தங்கள், செயற்றிட்டங்களை காலத்துக்குக்காலம் முன்வைத்து, ஆசிரியவாண்மையை தகுந்த அனுசரணை யாளராக்கி, மாணவரிடையே கல்வியில் பண்பியல் விழுமியங்களை வெளிக் கொணர்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்ட போதிலும், இப்பண்பியல் மலர்ச்சியடைவினை ஏற்படுத்துவதில் இவை வெறும் பொறி முறைகளாக எதிர்பார்த்த வெற்றியை அளிப்பதில் கேள்விக் குறியாகவே உள்ளது.

இன்று நாம் பல்வேறு நெருக் கடிகளின் உச்சத்தில் வாழ்கின்றோம். குடித் தொகைப் பெருக்கமும், நகராக்க வளர்ச்சிகளும், தேவை அதிகரிப்புக்களும், இதனால் தனி மனிதனிலிருந்து உலகலாவிய நிறைவின்மை களும், சுயநலமான தீவிர போட்டிகளும் அதிகரித்து விட்டன. தொழிநுட்ப வளர்ச்சி யிலும், கைத்தொழில் மயமாக்கல்களிலும், நவீன உற்பத்தி, நுகர்ச்சிப் பாங்குகளிலும் அறிவுத்திறன் அதீத வளர்ச்சி பெற்றாலும், இவை யெல்லாம் பகவான் பாபா குறிப்பிடும் "உலகசுகக் கோட்பாட்டிலும்", பண ஆதாயத் திலும், மட்டுமே மையம் கொள்கின்றன. இதற் கேற்ப இன்றைய கல்வி முறைகளும், ஆசிரியத்துவமும், மனித நேயத்தில் நின்றும், உள்ஆத்மாவை நோக்கிய வாழ்வியல் செயற் பாடுகளில் இருந்தும் விலகிப் போனது. இவை மனிதனை பேராசை, கருமித்தனம், அதி தீவிர அகங்காரம், தீவிர ஆசை, பொறாமை என்னும் தீய உணர்வுகளை 'சாதுர்யம்' என்னும் கௌரவஉடையில் மறைத்து அவனை உலா வர வைக்கின்றன. குறிப்பாக இளம் தலை முறையி னரிடையே புகைத்தல், போதைப் பொருள் பாவனைகள், குற்றச்செயல்கள், வன்முறைகள், உயர் விழுமியங்களை உணராது வாழுதல் முதலாய ஒழுக்க மின்மைகளை அதிகரித்து ள்ளன. இதனாலேயே பகவான் பாபா மனிதநேயம் குன்றிய இன்றைய கல்வி முறையானது "உலகைத் தற் கொலையை நோக்கி பயணிக்க வைக்கின்றது" என்பார். இயற்கை வளங்களின் அருந்தல்களும் பஞ்ச பூதங்களின் சமநிலை குலைதலும் சூழல் மாசாக்கங்களும் குறிப்பாக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மன மாசாக் கங்களினால் தனிமனிதனில் இருந்து உலகலாவிய ரீதியாக தீவிர போட்டி களையும், அங்கலாய்ப்பு களையும், உட் பகைகளையும், பனிப்போர்களையும், போர் களையும், அமைதியின்மைகளையும் அதிகரிக்க இக்கற்பித்தல் கொள்கைகளும், கற்பித்தல் வாண்மைகளும் காரணமாகின.

இவ்வாறு அறிவுத்திறன் மனித நேயத்தை விட்டு விலகி பயனிக்கின்ற இக்கால கட்டத்தில் தான் பகவான்ஸ்ரீ சத்ய சாயி பாபா, சிறந்த ஆன்மீக வியலாளராக, கல்வியாளராக, சேவை யாளராக 'My life is my message' என வாழ்ந்து காட்டி பின் 'Your life is my message' என எம்மை தகுதி நிலைப்படுத்தலில் அன்பின் விரிவை அடித்தளமாகக் கொண்டு மனித மேம்பாட்டுக் கல்வியூட்டலிலும் அவற்றைக் கற்பிக்கும் ஆசிரிய வாண்மை வழங்குதலிலும் ஒரு அவதாரத்தின் கல்வியூட்டலாக இவை இன்று மிகமுக்கியத்துவம் பெறுகின்றன.

1968ல் சாயிநிலையங்களில் பாலவிஹாஸ் கல்வித்திட்டமாக (Direct method) ஆரம்பிக்கப் பட்டு கற்பிக்கும் குரு மார்களுக்கான கற்பித்தல் வாண்மை வழிப் படுத்தப்பட்டு 1985ல் பாடசாலைகளில் S.S.E.H.V முறைசாராக் கல்வியாக (Non formal education) பாடவிதானங்களோடு ஒருங்கிணைக்கப்பட்டதாக விரிவாக்கம் செய்யப்பட்டு இன்று இவை முறைசார் கல்வியாக (Formal education) S.S.E.H.V சர்வதேச நிறுவனத்தின் கீழ் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பாடசாலைகள் என விரிவாக்கம் பெற்றுள்ளன.

இவை அனைத்தின் அம்சமாக 2001 இல் பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவினால் முன் வைக்கப்பட்டது தான் 'Educare', விழுக்கல்வித் திட்டம். அறிவியலான தற்கால விஞ்ஞானத் தையும், பண்டைய வழிமுறை வந்த சனாதன மெஞ்ஞானத்தையும் அவற்றினிடையே முரண்பாடின்றி இணைத்து, படைப்புக்களில் தனித்துவமான மனிதனுள் உள்ளுறையும் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகிய உயர்விழுமியங்களை வெளிக் கொணர்ந்து வாழவைப்பதே விழுக்கல்வி.

இக் கல்வியைப் பெறவைப்பதில் சிறுவர்களுக்கான 6 முதல் 15 வரையான வயதெல்லை மிகமுக்கியத்துவம் பெறுகின்றது. அறிவாற்றல், மனிதஆளுமைகள் உயர் விழுமியங்களை 80% மும் பெருக்கிக் கொள்ளும் பிள்ளைப் பருவம் இது என்பதுகல்வியியல் விஞ்ஞானஆய்வுகள் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளன. நல்லதோ, கெட்டதோ வேரூன்றும் பருவம் இது. இதில் பிள்ளையிடத்து அறிவாற்ற லையும், விவேகத்தையும் நல்லதன் சுழற்சியில் வேகப்படுத்துதலே சுவாமியின் இக் கல்வித் திட்டம். இதில் ஆசிரிய வாண்மையை தகுதி நிலைப்படுத்தல் மிக முக்கியத்துவம் பெறுகின்றது இத்தகுதி நிலைப் படுத்தலுக்கு அடிப்படையானது அன்பினூடாக கற்பித்தலாகும்.

அன்புடன் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் சத்தியம்
அன்புடன் செய்யும் ஒவ்வொரு செயலும் தர்மம்
அன்புடன் கூடியஅனுபவமேசாந்தி
அன்புடன் கூடியபுரிதலேஅஹிம்சை

இவ்வாறு அறிவுத்திறன், விவேகத்துடன் இம்மேதகு பண்புகள் சேரும் போது அவை எண்ணம், சொல், செயலில் ஒருமையுடனும், தூய்மையுடனும் மௌனமாக பரிமாறப்படும் போது பேராசை போதும் என்ற நிறை மனமாக மாறும்,
கோபம் சகிப்புத் தன்மையாக மாறும்,
கருமித்தன்மை ஈகையாக மாறும்,
மோகம் சம நோக்காகமாறும்,
அதிதீவிரஅகங்காரம் பணிவாகமாறும்,
பொறாமைபெருந்தன்மையாகமாறும்.

இதற்கு கல்வியானது தலையில் இருந்து தலைக்கு(Headto Head) வெறுமனே அறிவுத்திறனை பரிமாற்றம் செய்யாமல் (ஆத்ம) இதயத்திற்கு அனுப்பப் பட்டு, நல்ல எண்ணங் களால் சுத்திகரிக்கப்பட்டே, செயலாக கைகளு க்கு வரவேண்டும் என்பார் பாபா.

இவ்வாறுகல்வி+மேம்பாட்டுக் கல்வி= முழுமையானமகிழ்வு (Education+Educare=Complate Happiness) இவை இரண்டும் முறையே வலது இடது கால்கள். ஒன்று முடமானால் சீரான பயணிப்பு இல்லை. எனவே இவை சமூக வளர்ச்சியில் ஒன்றிணைந்து பரிணாமம் பெற,







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை மூலவளமாகக் கொண்டு நுண்மதி சார்ந்த தொழிற்பாடாக, மனித நேயத்தில் வேர்விட வைப்பதே சுவாமியின் இக் கல்வித் திட்டம். மாணவர்களின் ஒழுக்க நெறிசார் ஆளுமையை கல்விப் புலன்களோடு வளர்த் தெடுப்பதில் அவர் கற்பிக்கும் ஆசிரியவாண்மை உன்னதமானது.

படைப்பில் பிரபஞ்சத்தில் செறிந்த ஐந்து வளங்கள், அவ் ஐம்பூதங்களின் சமநிலை, இவற்றைமனிதன் தன் ஐம்புலன்கள், ஐம்பொறிகளால் அனுபவிக்கும் திறன், ஐந்து கோசங்களினால், தன் ஆத்மாவை பிரித்துணர்ந்து அதைத் தனிமைப்படுத்தி அதனோடு ஐக்கியப்படும், தன்னைத் தன்னால் அறியும், அஹம் நோக்கிப் பயணிக்கும் ஆற்றல்,எண்ணம், சொல்,செயல், உணர்ச்சி அன்பு புரிந்து கொள்ளல் என்னும் ஐந்து ஆளமைத் திறன்கள், கல்வியைத் தெய்வீகப்படுத்தி அவற்றில் வாழவைக்கின்றன.

இதற்கு அவர் தரும் 5 Dகள்,பயிற்சிப் பட்டறை அவசியமாகின்றது. தெய்வத்திற்கு சமர்ப்பணமாக (Dedication) கர்மபலத் தியாகமாக, கடமைபுரிபவராக இருத்தல்(Duty), இதன் மூலம் அகங்காரம் இன்றி செயற்பட்டு, தெய்வபக்தியில் வாழுதல் (Devotion), இதன் மூலம் கட்டுப்பாடான ஒழுக்கத்தில் (Discipline) நிலைநிற்றல், பகுத் தறியும் திறனைவளர்த்து (Discrimination) அவற்றை தளம்பாத மன உறுதியோடு கடைப் பிடித்தல்(Determination) என்பன அவசியமாகின்றன.

அப்போதுகல்வியின் குறிக்கோள்களான அறிவு, திறமை, சமநிலை, மிருதுத்தன்மை, சமூகப் பொறுப்பு பற்றிய விழிப்புணர்வு ஆகிய ஐந்தும் முறையே மனித ஆற்றல்களான புத்திக் கூர்மை, செயல், உந்துதல் உணர்ச்சி, அன்பு, புரிந்து கொள்வது என்னும் ஐந்துமாக, உள்ளுணர்வுகளாக (Intuition) வளர்க் கப்பட்டு அவரில் குறிப்பிடத்தக்க உயர் மாற்றத்தை (Transformation) ஏற்படுத்து கின்றன. அப்போது எண்ணம், புத்திகூர்மை, சத்தியம் சார்ந்த தாகவும், அத்திறன் செயலில் தர்மம் சார்ந்ததாகவும், சமநிலை அதாவது உந்துதல் உணர்ச்சி சாந்தி சார்ந்ததாகவும், மிருதுத் தன்மை அன்பின் விரிவாக பிரேமை சார்ந்ததாகவும், சமூக பொறுப்புணர்ச்சி பற்றி புரிந்து கொள்ளும் விழிப்புணர்வு அகிம்சை சார்ந்த தாகவும் சுவாமியின் இக்கல்வித் திட்டத்தின் குறிக்கோள்களை இவ்வாறு அடைவதில், ஆசிரியரின் கற்பித்தல் வாண்மையும் இதன்மூலம் பிள்ளைகளிடத்தில் இவற்றை அடைவிக்கும் திறனும் முக்கியத்துவம் பெறுகின்றன.




ஜெய்சாயிராம்

ஸ்ரீ. செ. தங்கராசா.

கோண்டாவில் சத்திய சாயி நிலையம்


## தேசிய சேவைத் திட்டம்




**சத்திய சாயி முதியோர் இல்லம் - மீகொட - கொழும்பு**

**இது 32 கி.மீ கொழும்பிலிருந்து அமைந்துள்ளது. ஆரம்பத்தில் 20 பெண்களும் 20 ஆண்களும் பராமரிப்பதென திட்டமிடப்பட்டு கட்டிடத்திற்கான பூமி பூஜை 28.05.2015 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த முதியோர் இல்ல கட்டிடம் 2017.04.30 திகதியன்று இலங்கை அரசின் சபாநாயகர் கௌரவ கரு ஜெயசூரியா அவர்களால் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இச் சேவைப்பணியிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 112687014, 0094 777316935
E mail - info@ssiosrilanka.org
website: www.ssiosrilanka.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டினான் பரமன் கண்டேன் பரமனின் குன்றை



2018.04.21 ஆம் திகதி சனிக்கிழமை சுவாமி என் வாழ்வில் ஒரு மறக்க முடியாத சம்பவத்தை நிகழ்த்தினார். 1940 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி சுவாமி வீட்டை விட்டு வெளியேறி தான் ஒரு அவதாரம் என்பதை உலகுக்கு வெளிப்படுத்தினார் என்பது சாயி பக்தர்களுக்கு தெரிந்த விடயமாகும். அவர் அன்றைய தினம் கல்லொன்றில் இருந்து "மானஸ பஜரே குரு சரணம்" என்ற பஜனைப் பாடலை முதன் முதலில் பாடினார். அவர் இருந்த கல் எங்கு உள்ளது. அது தற்போதும் இருக்கின்றதா என்ற சிந்தனை எனது மனதில் ஒருபொழுதும் எழவில்லை. இம் முறை நான் புட்டபர்த்தியில் இருந்த போது 2018.04.12 வியாழக்கிழமை மாலை North Indian canteen க்கு முன்பாக உள்ள புத்தக விற்பனை நிலையத்துக்கு சென்றிருந்தேன். அங்கு "His Story Written by Himself" என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம் "அவரது சரிதம் அவர் சொல்லியபடியே" என்ற நூலை வாங்கி வாசித்து வந்தேன். அதில் ஒரு இடத்தில் தான் இருந்த கல்லு இப்போதும் உரவக் கொண்டாவில் இருப்பதாகவும் அதற்கு சாயி அன்பர் ஒருவர் கோயில் அமைத்துள்ள தாகவும் கூறியிருந்தார். அதை வாசித்ததில் இருந்து அதை தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் பேராசையாக உருவெடுத்தது. ஆனால் உரவக்கொண்டா எங்கு உள்ளது? அங்கு எப்படி செல்வது என்ற விபரம் எதுவும் தெரியவில்லை.

பிரசாந்தி நிலையத்தில் உள்ள தொலைபேசி நிலையத்தில் நீண்ட நாள் பழகிய ஒரு சாயி அன்பரிடம் விசாரித்தபோது அங்கு சென்று வருவதற்கு சுமார் ஏழு மணி நேரம் எடுக்கும் என்றும் உரவக்கொண்டாவுக்கு நேரடியாக புட்டபர்த்தியில் இருந்து டீரள சேவை இல்லை என்றும் வுயஒை ஒன்றில் செல்வதே நல்லது என்றும் ஆலோசனை கூறினார்.வுயஒை ஒழுங்கு செய்யும் நிறுவனம் ஒன்றில் விசாரித்த போது இந்தியக்காசில் ரூபா 3800/= முடியும் என்றும் கூறினார். என்னால் அவ்வளவு தொகையை கொடுக்கக்கூடிய வசதி இருக்க வில்லை. அதனால் உரவக் கொண்டாவுக்கு செல்வது சரிவராது என்று இருந்து விட்டேன். இருந்தாலும் எனது மனதில் சுவாமி இருந்த அந்தகல்லை எப்படியாவது தரிசிக்க வேண்டும் என்ற ஆசை இருந்துகொண்டே இருந்தது. இதனால் புட்டபர்த்தியில் உள்ள பஸ் நிலையத்தில் விசாரித்தபோது உரவக் கொண்டாவுக்கு நேரடி பஸ் இல்லை என்றும் அனந்தப்பூர் என்ற இடத்துக்கு சென்று அங்கிருந்து வேறு ஒரு பஸ் மூலம் செல்லலாம் என்று கூறினார்கள். அனந்தபூருக்கு செல்வதற்கு 1 மணி நேரம் எடுக்கும் என்றும் அங்கிருந்து உரவக் கொண்டா செல்ல இரண்டு மணி நேரம் எடுக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். இது சிரமமான பயணம் என்றும் மொழிப்பிரச்சினை வேறு இருப்பதால் பயணத்தை மேற்கொள்ள மனம் தயங்கியது. இருந்தும் சுவாமியின் சங்கற்பமாக இருக்கவேண்டும். நான் மீண்டும் 2018.04.21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு புட்டபர்த்தி பஸ் நிலையத்துக்குச் சென்று







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்த அனந்தபூர் செல்வதற்க்கான பஸ் எத்தனை மணிக்கு இருக்கு என்று விசாரித்தேன். ஒவ்வொரு மணி நேரத்துக்கும் பஸ் உள்ளதாக கூறினார்கள். உடனே எனது இருப்பிடத்துக்கு சென்று பாஸ்போட் காசு அகியவற்றை எடுத்துக்கொண்டு பஸ் நிலையத்துக்கு வந்த போது அனந்தபூர் செல்லும் விரைவு பஸ் தயாராக இருந்தது. அதில் எறிக்கொண்டேன். பஸ் 8.45 க்கு புறப்பட்டது. அனந்தபூரை அடையும் போது பகல் 10.45 அனந்தபூரில் இறங்கி உரவக்கொண்டாவுக்கான பஸ்சை விசாரித்த போது "பலாறிஸ்" செல்லும் பஸ்ஸில் போகலாம் என்று கூறினார்கள்.

"பலாறிஸ்" செல்லும் விரைவு பஸ் எனக்காகவே காத்துக்கொண்டு இருப்பது போன்றும் நான் ஏறிக்கொண்டதும் பஸ் புறப்பட்டு விட்டது. உரவக்கொண்டாவை அடையும் போது பகல் 12.45 ஆகிவிட்டது. இனித்தான் சுவாமி இருந்த கல்லு எங்கு உள்ளது என்று தேடிப்பிடிக்கவேண்டும். ஆங்கிலம் பேசக்கூடியவர்களிடம் விசாரிப்பதே நல்லது என்று உரவக்கொண்டா பஸ் நிலைய அலுவலகத்தில் உள்ள ஒருவரிடம் கேட்டேன். அவர் தனக்கு ஆங்கிலம் தெரியா தென்றும் ஆங்கிலம் தெரிந்த இன்னொருவரைக் காட்டினார். நான் அவரிடம் சாயிபாபா அமர்ந்த கல் உள்ள கோவில் எங்கே உள்ளது? எப்படி போவது என்று கேட்டேன். இதில் உள்ள இன்னோர் விடயம் என்ன வென்றால் சில வேளை அவர்கள் சீரடி பாபாவின் கோவிலைக் காட்டி விடுவார்களோ என்று யோசித்தேன். எனவே நான் தெளிவாக புட்டபத்தி சத்திய சாயி பாபாவின் கோவில் என்று கூறினேன். உடனே அவர் அது அன்மையில் உள்ளது என்றும் எனக்கு ஒரு ஓட்டோவை ஒழுங்கு செய்து கொடுக்குமாறும் நான் முதலில் விசாரித்தவரிடம் கூறினார். உடனே அவர் என்னுடன் வந்து ஓட்டோ ஒன்றைப் போவதற்கும் பின் திரும்பி அதே ஓட்டோவில் வருவதற்கும் ஒழுங்கு செய்து தந்தார். அதற்கான கட்டணம் இந்திய ரூபா 50/= மட்டுமே. ஓட்டோவில் கோவிலுக்கு போனேன். அப்போழுது நேரம் பி.ப 12.58 மணி பொதுவாக இந்தியாவில் கோவில்கள் ஒரு மணியளவில்




பூட்டி விடுவார்கள். பசுவைத் தேடிய கன்று போல் கோவிலுக்குச் பறந்து சென்றேன்.

அங்கு மண்டபம் திறந்து இருந்தது. அதன் நடுவில் சுவாமி இருந்த கல்லும் அதன் மேல் இளம் வயது பாபாவினதும் சீரடிபாபாவினதும் மாபிளாலான சிலைகளும் அதற்குப் பின்புறமாக சுவாமியின் பெரிய படமும் காணப்பட்டன. அங்கு நின்ற வயதான பெண்மணி ஒருவர் என்னை அன்புடன் வரவேற்று அதுதான் பாபா சிறு வயதில் இருந்த கல்லு என்றும் அதில் இருந்துதான் "மானச பஜரே குரு சரணம்" என்ற பாடலைப் பாடினார் என்றும் கூறினார்.நான் அதைத் தொட்டுக் கும்பிட்டு தலைவைத்து வணங்கி என் ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டேன். அவவின் அனுமதியுடன் படமும் எடுத்துக் கொண்டேன். அப் பெண்மணி எனக்கு விபூதி, மலர்கள், மாம்பழம் ஆகியவற்றைத் தந்து என்னை உபசரித்தார். பின்னர் அக் கோவிலுடன் கட்டப்பட்டுள்ள பஜனை மண்டபத்துக்கு என்னை அழைத்து சென்றார். அங்கு சீரடி பாபாவின் படம், சுவாமியின் படம், சிம்மாசனம் மற்றும் சுவமியின் புனித அங்கி ஆகியவற்றைத் தரிசித்தேன். அம் மண்டபம் 2003 நவம்பர் 23 ஆம் திகதி சுவாமியால் திறக்கப்பட்டதாக பொறிக்கப்பட்டிருந்தது. அப்பெண் மணிக்கும் சுவமிக்கும் மனமார நன்றி கூறி விடைபெற்று திரும்பினேன். உரவக் கொண்டாவில் உதவி செய்த இருவருக்கும் நன்றி கூறி வெளியே வந்தபோது ரூபா 10 டீருளு Stand இல் கண்டு எடுத்தேன் அதை சுவாமி தந்த பரிசாக இப்போதும் வைத்திருக்கிறேன். உரவக் கொண்டாவில் இருந்து அனந்தபூருக்கு எக்ஸ்பிரஸ் பஸ் ஒன்று புறப்படத்தயாராக நின்றது. அனந்தபூரை அடையும் போது பி.ப 3 மணி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனந்தபூரில் இறங்கியபோது புட்டபர்த்தி எக்ஸ்பிரஸ் பஸ் புறப்படத்தயாராக நின்றது. புட்டபர்த்திக்கு வரும்போது பி.ப 4.58 . பிரசாந்தி நிலைய கணேசர் கோவிலின் வாசலில் வரும் போது 5 மணிக்கு வேதத்தில் கணேசருக்கான மந்திரம் "குல்வந்த" மண்டபத்தில் சொல்லத் தொடங்கினார்கள். அன்று புட்பர்த்தியில் இருந்து புறப்பட்டு திரும்பிவரும் வரை எதுவும் அருந்தவில்லை ஆனால் பயணம் களைப்பின்றி மிக மகிழ்ச்சியாக அமைந்தது. இவை அனைத்தும் சுவாமியின் ஏற்பாடே அன்றி வேறு ஒன்றும் கூறுவதற்கில்லை. எனக்கு இப் பயணத்திற்கு ஏற்பட்ட செலவு ரூபா 310/= மட்டுமே. சாயி அன்பர்கள் புட்டபர்த்திக்கு செல்ல நேர்ந்தால் சுவாமியின் குன்று கோவிலைத் தரிசிக்க தவற வேண்டாம் எனஅன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இதில் உள்ளது உரவக் கொண்டாவில் உள்ள குன்றுக் கோவிலின் படமாகும். இக்கோவில் ஆஞ்சநேயலுவின் காணியில் அமைந்துள்ளது.





முக்கிய விடயங்கள்.

1. சுவாமியால் எழுதப்பட்ட புத்தகத்தை வாங்க வைத்தது.
2. அதை முழுவதுமாக வாசிக்கவைத்தது.
3. அதில் தான் இருந்த கல் இப்பவும் உரவக் கொண்டாவில் இருப்பதை தெரியப் படுத்தியது.
4. பயணத்தை எதுவித தடங்கலும் இன்றி சகல இடங்கலிலும் பஸ் ஏற்பாடு செய்தது.
5. குன்றுக் கோவில் திறந்திருந்தது.
6. தரிசனத்துடன் புகைப்படமும் எடுக்க அனுமதி தந்தது.
7. ரூபா 10/= உரவ கொண்டாவில் தனது ஞாபகர்த்தமாக தந்தது.

இவை அனைத்தும் என் சுவாமியின் ஏற்பாடே அன்றி வேறு எதுவாக இருக்கமுடியும்.

ஜெய் சாயிராம்.

க.கனகரத்தினம்.
யாழ் மத்திய சமித்தி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கஸ்தூரிக்கு சுவாமி அனுப்பிய புதுவருட பிரார்த்தனைப் பாடல்

2012ஆம் ஆண்டு, றேடியோ சாய் குழுவினர் தங்களது சுவடிக்கூடத்தை (Archives) ஆராய்ந்தபொழுது 1960ஆம் ஆண்டு பேராசிரியர் கஸ்தூரிக்கு சுவாமி அனுப்பிய புதுவருட வாழ்த்துப் பிரார்த்தனை (பாடல்) கையில் கிடைத்தது. அக்காலத்தில் பேராசிரியர் புட்டபர்த்தியில் வசித்தார் என்றாலும் அவரை வியப்படையவைக்க வேண்டுமென்பதற்காக சுவாமி ஒரு பக்தனை புக்கபட்டினம் அனுப்பித் தபாலில் போடவைத்தார். பேராசிரியர் அன்று எவ்வளவு ஆனந்தம் அடைந்திருப்பார்.

சுவாமி அனுப்பிய வாழ்த்துப் பிரார்த்தனை :

உங்களிலும் மேலாக என் மீது கருணை காட்டி
கிருபைபொழிய வேறோருவருமில்லை என்பதில்
எனக்கு அசையாத நம்பிக்கை.
சொல்லுங்கள் ! இதற்காகத்தானே
நான் உங்கள் காலடியில் இருக்கிறேன்.
நான் வேண்டிய பொழுதும் பிரார்த்தித்தபொழுதும்
விரைந்து எனக்கு அருளுவீர்கள் என்பதில்
எனக்கு அசையாத நம்பிக்கை.
சொல்லுங்கள் ! இதற்காகத்தானே
நான் உங்களை நினைத்து உரக்க அழுகின்றேன்.
நீங்கள் என்னுடனேயே இருந்து
ஒவ்வொரு அடி எடுக்கும் பொழுது
வழிகாட்டுகிறீர்கள் என்பதில்
எனக்கு அசையாத நம்பிக்கை.
சொல்லுங்கள் ! இதற்காகத்தானே
நான் இரவும் பகலும்
உங்களுடையவனாயிருக்கிறேன்.
எதைக்கேட்டாலும் இல்லை என்று சொல்ல
மாட்டீர்கள் என்பதில்
எனக்கு அசையாத நம்பிக்கை.
சொல்லுங்கள் இதற்காகத்தானே
நான் உங்கள் கடைப்பார்வைக்காக
ஏங்குகின்றேன்.
எனக்காக என்னவெல்லாம் தர
உத்தேசித்துள்ளீர்கள்?
வரம் தருவதற்கு ஏன் இவ்வளவு தாமதம்?
என்னை எவ்வளவு காலம் காத்திருக்க
வைத்தாலும் நான் விலகமாட்டேன்.
உங்களின் கருணைக் கண்கள்
என்னை நோக்கும் வரை
அசையாது நிற்பேன்.

**சுவாமியின் பின்குறிப்பு :**

கஸ்தூரி, புது வருடத்தை நான் தந்த பிரார்த்தனையுடன் தொடங்கு, வரங்களும் ஆசீர்வாதமும் ஏராளமாகக் கிடைக்கும். நீண்ட ஆயுளும் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், நண்பர்கள் ஆகியன சேரும். பக்தி, ஞானம் மூலம் ஆனந்தத்தை அனுபவிப்பாயாக. ஆயுள் முழுவதும், எல்லாமேயான சர்வேஸ்வரப் பெருமானுக்கே சேவை செய்ய ஆசீர்வாதிக்கின்றேன். வாழ்நாள் முழுவதும் தாராளமான சாந்தியிலும் ஆனந்தத்திலும் வாழ்வாயாக. பாபா.

**ஆங்கிலத்தில் எழுதிய மூலப் பிரதி :**

I firmly believe there is none kinder than you
to shower Grace on me
Tell me. is this not the reason why
I am at your lotus feet?
I firmly believe you will respond quick
When I do pray and plead
Tell me. is this not the reason why
I am crying aloud for you?
I firmly believe You are ever beside me
to guide my steps aright
Tell me, is this not the reason why
I am yours thro' day and night?
I firmly Believe You can never say 'no'
Whatever I ask from You
Tell me. is this not the reason why
I long for a glance from You?
What have you designed for me this time?
Why this dire delay to offer boons?
However long you make me wait and wail
I will not leave, I'll be standing still
until Your loving eyes do turn on me.

இதில் கூறியவாறே பகவான் எங்கள் எல்லோருக்கும் அருள் புரிகின்றார். அவர் எங்கள் இதயங்களில் வாழ்ந்தாலும் எங்களுக்கு பரவச ஆனந்தத்தை அளிப்பதற்காக மனித உருவமெடுத்து எங்களுடன் வாழ்ந்து வழிகாட்டியுள்ளார். பகவானுடன் வாழ்வதே வித்தியா. பகவானை இறுகப் பற்றி முக்தி அடைவோமாக.


ஜெய் சாயிராம்
நன்றி றேடியோ சாயி நிறுவனம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பதிவு - 1


# பிரசாந்தி வரலாற்றுப் பதிவுகள்

## குடை பிடிக்கும் பிள்ளையார்

பிரசாந்தி நிலையத்திலுள்ள ஒவ்வொரு படைப்புக்குப் பின்னாலும் அதிசய அற்புத நிகழ்வுகள் உள்ளன. இதைத் தொடர்ச்சியாக மக்களுக்கு வெளிப்படுத்தும் முயற்சியில் ரேடியோ சாய் குழு செயற்படுகிறது. இதில் முதலாவதாக (Prasanthi Chronicle Episode 01) குடைபிடித்து உலாவ ஆயத்தமாக நிற்கின்ற கணேசப்பெருமானைப் பற்றிய வரலாறு இடம்பெறுகின்றது.

இதன் தொடக்கம் 40 ஆண்டுகளுக்கு முன்பேயானது. 1970 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவிலிருந்து மிஜெல் (Michel & Richard) றிச்சாட் என ஒரு ஜோடி பிரசாந்தி நிலையத்தில் வந்து தங்கினார்கள். சுவாமி அவர்களின் திருமணத்தை நடத்தி அவர்களை W6, A26, A27 என்ற விடுதி அறைகளில் தங்கவைத்தார்.
ஒரு நாள் மிஜெல் பெண்மணி அறைக்கு வெளியே வந்து பார்த்தபொழுது சுற்றிவரப் பாவிக்க முடியாத இரும்புக் கம்பிகள், தகடுகள் போடப்பட்டிருந்தன. அங்கே ஒரு பெண்மணி தாங்கமுடியாத துயரத்தில் அழுது கொண்டிருப் பதைக் கண்டார். அப்படியான நிலையில் உள்ளவர்களுக்குப் பகவானுடன் தொடர்பு கொள்ளச் சரியான ஒரு சூழலை உருவாக்க வேண்டுமென்று எண்ணினார். அப்போது அவர்கள் சுவாமியிடம் தங்களது துயரத்தை சமர்ப்பித்து ஆறுதல் அடையலாம் என்று எண்ணி சுவாமிக்குக் கடிதம் எழுதினார்கள். சுவாமியும் ஆசீர்வதித்து கடிதத்தை வாங்கிக் கொண்டார்.

அடுத்தநாள் அந்த நிலத்தைத் துப்புரவு செய்யத் தொடங்கினார்கள். அடுத்தநாள் இன்னொரு ஜோடி இவர்களுடன் சேர்ந்து பங்களூர் சென்று ஒரு தோட்டம் அமைப் பதற்கான உபகரணங்களும் மரக்கன்றுகளும் பூக்கன்றுகளும் வாங்கி வந்தார்கள். நடுவிலே ஒரு குளத்தைச் சரிக்கட்டினார்கள்.





அதிலிருந்து நீர்வெளியேறி உடனே வற்றிவிடுகிறது. சுவாமியிடம் பிரார்த்திக்க யாரோ ஒருவர் வந்து தான் கட்டட வேலைக்காரன் (Mason) என்று சொல்லி உதவி செய்யமுன்வந்தார். குளத்தின் குறையும் தீர்க்கப்பட்டது. சில நாள்களில் பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒருவர் வந்து உதவி செய்ய முன்வந்தார். அவர் தனக்கு கல்லினால் படியடக்கு தளமேடு செய்வதில் திறமை உண்டு என்றும் உதவ முன்வந்தார். அவர் கற்களைப் பொறுக்கி மிகவும் அழகாகப் பரப்பி அடுக்கிவைத்தார். அவர் கற்களைக் கொண்டு செல்லும் பொழுது தனது இருதயத்தைச் சுவாமியிடம் கொண்டு செல்வதாக உணர்ந்தார் என்று கூறியுள்ளார். இது இராம பிரானுக்கு வானரங்கள் கல்லினால் எவ்வாறு இராமநாமத்துடன் பாலம் அமைத்தார்கள் என்பது நினைவுக்கு வருகிறது. நிலம் மேலும் துப்புரவு செய்வதற்காக சுவாமியின் பாடசாலை மாணவர்கள் உதவ முன்வந்தார்கள். மிக விரைவாக அழகான தோட்டமாக மாறிவிட்டது. முதலில் சாந்தமான இயேசுபிரான் ஆட்டுக்குட்டியுடன் நிற்கும் சிலை அமைக்கப்பட்டது. எப்படியான கணேசா சிலை வைக்கவேண்டுமென்று பல சிலைகளைப் பார்த்தார்கள். இருக்கும் சிலை, படுக்கும் சிலை, நடக்கும் சிலை எனப் பல சிலைகளைப் பார்த்தபின்பு குடைபிடித்து மற்றக்கையில் கமண்டலத்துடன் மிக மகிழ்வுடன் உலாவிச் சுற்றிவர ஆயத்தமாகி நிற்கின்ற சிலையே கவர்ந்தது. இப்போதுள்ள சிலை உருவாகியதன் பின்னணி இதுவேயாகும். மக்கள் தமது துயரங்களைப் பாதத்தில் வைத்து மனச் சாந்தியுடன் செல்வதைப் பார்க்கலாம். இந்த யானையளவு அன்பு கொண்டவரிடம் நாம் சென்று வணங்கிச் சாந்தி அடைவோமாக. பிராசாந்தி நிலையம் சென்றால் குடைப் பிள்ளையாரைத் தரிசித்து அருள்பெறலாம்.

ஜெய் சாயிராம்
நன்றி : ரேடியோ சாயி குழு
26.11.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பதிவு - 2
## பிரசாந்தி வரலாற்றுப் பதிவுகள்

# தபோவனம்

**இரண்டாவது நிகழ்வாக தபோவனம் முன் வைக்கப் பட்டது (Meditation tree). இதன் பின்னணி என்ன?**

சுவாமி 1950 ஆம் ஆண்டுகளில் சித்திராவதி நதிக்குச் செல்வது வழக்கம். பக்தர்கள் சூழ ஆற்று மணலிலிருந்து பல தின்பண்டங்கள், சிறு உருவச் சிலைகள் எடுத்து பக்தர்களுக்குக் கொடுப்பது வழக்கம்.

**<u>1959ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்</u>**

நதிக்கரையில், பக்தர்களுக்கு புத்த பெருமான் ஆலமரத்தின் கீழ் தவம் செய்து ஞான நிலையடைந் ததைக் குறிப்பிட்டார். மகான்கள் மரத்தடி அல்லது குகையிலே தவம் செய்வார்கள். இதைப் பற்றிக் கூறிக் கொண்டு மணலைக்குவித்தார். குவித்த மணலின் மேற்பரப்பை தட்டையாக்கி தனது விரலினால் ஏதோ வெல்லாம் வரைந்தார். பின்பு மணல் குவியலுக்குள் கையைவிட்டு ஒரு பிரகாசமான நீள்சதுர 10" X 15" அளவிலான செப்புத் தகட்டை எடுத்தார். அதில் வரையப்பட்ட சின்னங்களும் எழுத்துக்களும் பக்தர் களுக்கு விளங்கவில்லை. இதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பின்வருமாறு விளக்கினார். வலுவூட்டப்பட்ட தகடுகள்மரத்தின் அடியில் வைத்தால் அவ்விடத்தில் ஏற்படும் அதிர்வலைகள் தியானம் செய்ய உதவும். புலன்களும் மனமும் மிகவும் விரைவில் அடங்கிவிடும். 1959ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி சுவாமி தான் சிருஷ்டித்த தன்னால் வலுவூட்டப்பட்ட செப்புத் தகட்டை அந்த மரத்தடியில் வைத்து மூடினார்.




அவர் அப்போது "இவ்விடத்திற்குப் பலயோகிகள் வந்து தவம் செய்வார்கள். இவர்கள் பல இடங்களிலிருந்து வருவார்கள்" என்று கூறினார். அவர் சொன்னபடி பல பக்தர்கள் இம் மரத்தடிக்கு வந்து தியானம் செய்கிறார்கள்.

பக்தர்களில் எவ்வாறான தாக்கத்தை உண்டு பண்ணுகிறது என்பதை அறிய அடிக்கடி பிரசாந்தி நிலையத்திற்கு வரும் 16 வயது தென் ஆபிரிக்க பெண் பிள்ளையைக் கேட்டதும் அவர் "நான் இந்தத் தபோவனத்தில் வந்து தியானிப்பதற்காக திரும்பத் திரும்ப வருவேன்" என்று கூறினார்.

பிரசாந்தி நிலையத்திற்கு வரும் போது இந்தத் தியான மரத்தின் கீழ் தியானம் செய்யவேண்டும். அகத்தை நோக்கிப் பயணித்து ஞானம் அடையலாம். அன்பர் பிஷூபுருஷ்டி பின்வரும் பாடலைப் பாடி முடித்தார்.

வட்டபத்ர சயனே சாயி நாராயண
நீல மேக ஷியாம கிருஸ்ண கோபால
கிருஸ்ணா
மானுஷ வேடதாரி சாயி நாராயணா புட்டபர்த்தி
நாராயணா சாயி நாராயணா.

ஜெய் சாயிராம்

24.10.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# The Story of The Guindy

## பதிவு - 3
# பிரசாந்தி வரலாற்றுப் பதிவுகள்

### சென்னையில் கிண்டி (Guindy) என்னும் இடத்திலுள்ள சீரடி சாயி பாபா ஆலயத்தின் வரலாறு

மூன்றாவது நிகழ்வாக சென்னையில் கிண்டி (**Guindy**) என்னும் இடத்திலுள்ள ஷீரடி சாயி பாபா ஆலயத்தின் வரலாறு வெளியிட்டுள்ளார்கள்.

கிண்டி ஆலயத்தின் தனித்துவம் என்னவென்றால் ஷீரடி சாயியும் சத்திய சாயி பாபாவும் இணைந்த இடமாகும். மூன்று விசேடங்கள் கொண்டது.

1. ஷீரடி சாயி பாபாவின் சிலை முதன்முதலாக வைக்கப்பட்ட இடமாகும். இது பெப்ரவரி மாதம் 1949 இல் நிகழ்ந்தது. ஷீரடியிலேயே அவரது உருவச்சிலை ஐந்து வருடங்களுக்குப் பின்னரேயே (1954) பிரதிஷ்டை செய்யப்பட்டது.
2. 32அடி உயரமான ஸ்தூபி பெப்ரவரி மாதம் 1973 இல் கட்டப்பட்டது. பிரசாந்தி நிலையத்தில் இரண்டு வருடங்களுக்குப் பின்னரே 1975 இல் கட்டப்பட்டது.
3. இதைத் தனது முதலாவது ஆன்மீக ஆலயம் என்று சுவாமி பிரகடனப் படுத்தினார்.

இவ் வரலாற்றை ஷீரடி சாயி பாபாவின் நூறாவது மகா சமாதியடைந்த ஆண்டில் (1918 2018) நாம் வெளியிடுவதும் ஒரு சிறப்பு அம்சமாகும். இந்த ஆலயத்தில் விநாயகர், நவக்கிரகங்கள், சர்வமத ஸ்தூபி, நாகசாயி, ஷீரடி சாயி பாபா எல்லாம் அமைந்துள்ளன.

**1943 ஆம் ஆண்டு தசரா விழாக் காலத்தின் போது,** கிண்டி ஆலய நிலத்தின் உரிமையாளரான லோகநாத முதலியாருக்கு கடுமையான வருத்தம் ஏற் பட்டது. அவருக்கு பைத்தியம் பிடித்து எழும்ப முடியாதவராய் இருந்தார். உறவினர் அன்றே இறந்துவிடுவாரோ என்று பயப்பட்டனர். இரண்டாவது நாள் இரவு சுவாமி கனவில் தோன்றி, துளசி நீரும் விபூதியும் கொடுத்து ஆசீர்வதித்துச் சென்றார். முதலியாரின் தேக நிலை அற்புதமாக சுகமாகத் தொடங்கியது. தனக்கு கனவில் சிவப்பு அங்கி அணிந்தவர் வந்து ஆசீர்வதித்தது யாரென அறிய முடியவில்லையென்றார். அடுத்தநாள் காலை 11.30 மணிக்கு சுவாமி முதலியாரின் வீட்டிற்குள் பிரவேசித்தார். முதலியார் மிகவும் ஆனந்தத்துடன் இவர் கடவுள், இவர்தான் இரவு வந்து என்னைச் சுகப்படுத்தியவர் என்று சொல்லி வணங்கினார். சுவாமி "நான்தான் நேற்று கனவில் வந்தேன். இனிமேல் ஒரு வருத்தமும் வராது. (காலை இழுத்து) எழும்பு" என்று சொன்னார். முதலியார் எழுந்து உட்கார்ந்தார். சுவாமி மனைவியைக் கூப்பிட்டு யாரோ சூனியம் செய்துள்ளார்கள். குறிக்கப்பட்ட இடத்தை தோண்டி அதிலுள்ள ஆட்டுடன் கோழியின் சிதைந்த உடலை அகற்றிவிட்டு இந்த விபூதியை அதில் போட்டுவிடு. இனி ஒரு சூனியக் காரனாலும் துன்பம் செய்ய முடியாது என்று சொன்னார். செய்து முடிந்தபின் பிரசாந்தி நிலையத்திற்கு வரச்சொன்னார். பிரசாந்தி நிலையத்தில் சுவாமியை வணங்கி, 'சுவாமி உங்களுக்கு சென்னையில் ஒரு ஆலயம் கட்ட விரும்புகிறேன்' என்று சொன்னார். 'இந்த உடம்புக்கு ஆலயம் தேவையில்லை. எனது முன்னைய அவதாரத்திற்கு ஆலயம் அமைக்கலாம்' என்று சொல்லி, வேலையை ஆரம்பிக்கச் சொன்னார். ஆனால் அந்தக் காலத்தில் ஷீரடி பாபாவின் சிலை ஒரு இடமும் இருக்க வில்லை. சுவாமி 10 **ஆம் திகதி ஜூலை மாதம்** 1946**ஆம் ஆண்டு** கோவில் கட்ட அடிக்கல் நாட்டினார். அப்போது சுவாமிக்கு 20 வயது தானிருந்தது. அவர் இக் கோவில்தான் தனது முதல் மந்திர் என்று அன்று பிரகடனம் செய்தார். முதலியார் பிரசாந்தி நிலையம் சென்றபொழுது அவருக்கு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிமண்ணில் செய்த ஷீரடி சாயி பாபாவின் சிலையைக் கொடுத்து அனுப்பினார். அவர் கிண்டிக்கு வந்து அடுத்தநாள் ஒரு சிற்பி அவரின் வீட்டிற்கு வந்து 'புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் கோவில் வேலை இருக்குது போய்ச் செய்' என்று தனக்கு முஸ்லிம் மகான் கட்டளையிட்டுள்ளதாகச் சொன்னார். கோவில் வேலை தொடங்கியது. கணேசர் சிலையை முடித்து ஷீரடி சாயி சிலையைச் செதுக்கினார்.

**பெப்ரவரி 3ஆம் திகதி 1949ஆம் ஆண்டு** சுவாமி இச் சிலைகளைப் பிரதிஷ்டை செய்ய வந்தார். முதலில் கணேசப் பெருமானின் சிலையைப் பிரதிஷ்டை செய்தார். பின்பு பவுணில் செய்யப்பட்ட துமி இதழ்களுடன் நவரத்தினங்களும் சிருஷ்டித்து ஷீரடி சிலையின் கீழே போட்டுப் பிரதிஷ்டை செய்தார். பின்பு படிகளால் இறங்கிவந்து 'நான் இப்போது சிலைக்கு பிராண பிரதிஷ்டை செய்யப் போகிறேன்' என்று சொன்னார். அடியார்கள் கை கூப்பிய வண்ணம் வணங்கிநின்றார்கள். அந்தச் சிலை புவி ஈர்ப்புக்கு மாறாக மேலே எழும்பி சில நிமிடங்கள் நின்று கீழே இறங்கியது. என்ன அற்புதம்! இதன்பின்பு ஒரு மாதமாக காலையும் மாலையும் இக்கோவிலுக்கு சுவாமி தரிசித்தார். பின்பு ஒவ்வொரு வருடமும் 8 வருடங்களாக தரிசித்தார்.

1984ஆம் ஆண்டு சுதர்சன சக்கரம் சிருஷ்டித்து சிலையின் அடியில் வைத்தார். இது உள் எதிரிகளையும் புற எதிரிகளையும் அழித்துவிடும் என்று சொன்னார். இந்தச் சந்தர்ப்பத்தில் லோகநாத் முதலியாரின் மகள் சுவாமிக்குப் பாத பூஜை செய்யவேண்டுமென்று வேண்டி சந்தனம். பூசிய பட்டுச் சீலையை விரித்தார். சுவாமி தேக நிலையை விட்டுச் சென்று சில விநாடிகளின் பின்பு ' ஏன் இந்த அவதாரத்தின் சுவடு, நான் முன்னைய அவதாரத்தின் பாதச் சுவட்டைப் பதிக்கிறேன்.' என்று சொல்லிப் பதித்தார். இத் துணி மூலஸ்தானத்தில் இன்றும் உள்ளது.

**சர்வதர்ம ஸ்தூபியின் கதை** : பெப்ரவரி 3ஆம் திகதி 1973ஆம் ஆண்டு. முதலியாரின் மகள் பிரசாந்தி நிலையம் சென்று ஆலயத்தின் வெள்ளிவிழாவை விமரிசையாக கொண்டாட வணங்கி ஆசீர்வாதம் பெற்று எழும்பொழுது ஒரு காட்சி கண்டார். அது ஸ்தூபியைக் காட்டியது. ஒன்றை கிண்டியில் கட்ட ஆசைப்படுவதாகச் சொல்ல பகவானும் ஆசீர்வதித்து எங்கே கட்டவேண்டும் என்ற நிலத்தையும் காட்டினார். சில நாள்களில் சேதுராமன் என்பவர் பல என்ஜினியர்களுடன் கிண்டிக்கு வந்து ஸ்தூபி கட்ட சுவாமி அனுப்பியதாகக் கூறினார். வேலை தொடங்கியது. 32 அடி உயரமான ஸ்தூபம் 15 நாள்களில் பகவானின் சங்கல்ப்பத்தால் கட்டி முடிந்தது. தூணின் நுனியில் தாமரைப் பூவும் அதன் நடுவில் சுடரும் இருந்தது. சுடர் ஞானத்தைக் குறிக்கிறது. தூண் அடியில் நாலு பக்கமும் முறையே விநாயகப் பெருமானும் (இறைசக்தி), முருகப்பெருமானும் (ஆன்மீகப் பலம்), தெட்சணாமூர்த்தியும் (சாந்தி), வேணுகோபாலும் (லீலா புரியும் பிரேமை) கட்டப்பட்டன. ஆக அடித்தளத்தில் எல்லா மதங்களின் கூற்றுகளும் பொழிக்கப்பட்டன. இது சர்வமத ஒற்றுமையைக் குறிக்கிறது. இதுவே முதல் ஸ்தூபி. பிரசாந்தி நிலையத்தில் 23.11.1975இல் கட்டப்பட்டது. பல ஸ்தூபிகள் பல இடங்களில் கட்டப்படுமென்று சுவாமி கூறியிருந்தார்.

ஷீரடி சாயி சிலை பிரதிஷ்டை செய்த நாள்களில் அந்த வளவில் பெரிய புற்று வளரத் தொடங்கியது. முதலியார் அதை உடைக்க முற்பட்டார். அங்கே உள்ள புகையிரத நிலைய மாஸ்டர் முதலியாரிடம் வந்து முதல்நாள் இரவு ஷீரடி சாயி பாபா கனவில் வந்து புற்றை உடைக்க வேண்டாம் என்றும் அதன்மேல் மாடி கட்டிவிடும்படியும் தான் அங்கே ஷீரடி நாக சாயியாக இருப்பேன் என்று சொன்னதைச் சொன்னார். இன்று அங்கே நாக சாயி சிற்றாலயமும் உண்டு.

1962 இல் முதலியார் ஒரு அறக் கட்டளையை உருவாக்கி தனது மகளைப் பொறுப்பாக விட்டார். அவ் வருடம் சனீஸ்வரன் சிலை ஒன்றைச் சரிக்கட்டி சுவாமியிடம் ஆசீர் வாதம் பெற ஆயத்தமான போது உடலை நீத்தார். சுவாமி மகள் லீலாம்மாவிடம் மற்றைய எட்டு கிரகங்களையும் செய்வித்து வைக்கச் சொன்னார். 25 ஆம் திகதி ஜனவரி மாதம் 1985ஆம் ஆண்டு சுவாமி ஆலயத்திற்கு வந்து எல்லாக் கிரகங்களையும் பிரதிஷ்டை செய்தார். ஒன்பது நவரத்தினக் கற்கள் சிருஷ்டித்து சூரிய சிலைக்கு அடியில் வைத்தார். இப்படியான மிகவும் மகத்தான முக்கியம் வாய்ந்த சக்திவாய்ந்த ஆலயத்தை சகலரும் தரிசிக்க வேண்டும்.

ஜெய் சாயிராம்

நன்றி : ரேடியோசாய் குழு

21.11.2018






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அன்புடைமை

அன்பினில் நின்றே இறைவனை என்றும்
அகத்தினில் கொள்வது நன்று
துன்பமும் தூரம் விலகியே ஓடத்
துலங்கிடும் இலக்கணம் அன்பாம்
அன்பையும் பிறர்க்கே ஈவதும் ஒன்றே
அன்பினின் எல்லையே அன்றோ
தன்னிலை அடைய நாட்டினர் முறையாய்
நாடுவதும் அன்பெனும் ஊற்றே
உலகினில் ஏற்றத் தாழ்வினைப் போக்கி
உறவினை வளர்ப்பதும் அன்பே
பலவகை உயிர்கள் பாரினில் ஒன்றாய்ப்
பற்றினை வளர்ப்பதும் அன்பே
நிலவெனக் குளிர்ச்சி மனதினில் தந்தே
நெகிழ்வுற வைப்பதும் அன்பே
நலமுடன் சுற்றம் நட்புடன் கூடி
நன்மைகள் புரிவதும் அன்பே
அன்பினைப் பூட்டி அடைந்திட இயலா(து)
ஆற்றலை உடையதை எண்ணி
நன்னெறி கொண்டு நன்மைகள் கண்டு
நானிலம் போற்றிடும் வென்றே
பன்னெடுங்காலம் பகையினைப் போக்க
பயன்படும் அன்பினைப் பற்றித்
தன்னலம் இன்றிக் கடமையைச் செய்தே
தாயுளம் கொண்டிட வாழ்வோம்.
தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும்
தகுதியைத் தருவதே அன்பாம்
மனத்திடை என்றும் அமைதியைத் தந்தே
மண்ணிடை நிலைப்பதும் அழகாம்
கனவினை நனவாய்க் காண்பவர் காண்க
எண்ணெனத் திகழ்வதும் அன்பாம்
அனைவரும் இணைந்தே ஒருமுகமாகி
அணைப்பிணைத் தருவதும் அன்பே
மனிதனை உலகில் மனிதராய் மாற்றி
வளத்தினைத் தருவதும் அன்பே
தனி உளம் கொண்டே காலமும் போற்றும்
கண்மணி போன்றதே அன்பு
நனி மிகும் ஆசை நன்மையைத் தாரா
நல்லறம் தந்திடும் அன்பே
மனிதரும் எண்ணி மனமகிழ் உறவை
மனத்திடைப் பதித்திடுவாயே.

உலகினில் உயர்ந்த ஈடிலாச் சான்றோர்
ஊன்றிய நல்விதை அன்பே
உலகமும் வியக்கச் சாதனை செய்தோர்
உளத்தினில் விளைந்ததும் அன்பே
உலகமாம் முகத்தின் கண்ணென இருந்தே
ஒளியினைத் தருவதும் அன்பே
அலையெனப் பொங்கும் மனதிடை அமைதி
அருள்வதும் அன்பெனும் ஊற்றே
வள்ளுவர் சொன்ன வழியினில் நின்றே
மாண்புறும் அன்பினைக் கொள்வோம்
வள்ளலார் கண்ட அருள்நெறி பற்றி
வாழ்க்கையின் உண்மையை அறிந்திடுவோம்
வள்ளலாய்த் திகழ்ந்தே மதிப்பினில் உயர்ந்த
வாழ்க்கையின் தத்துவம் கண்டே
உள்ளமாய்க் கொண்டே உலகினில் அன்பை
உயிரென உணர்த்திடச் செய்வோம்
புத்தரும், காந்தி, ஏசுவும் தோன்றிப்
போதனை செய்தனர் அன்பை
நித்தமும் மாந்தர் நிம்மதி காண
நெறியினில் நின்றனர் உண்மை
வித்தகர் போலவே வென்றிடும் வழியால்
விரைவினில் பெற்றனர் நன்மை
சத்திய வழியில் தன்மனம் சென்றே
சரித்திரம் படைத்தனர் அன்றோ
அன்பெனும் ஆற்றல் அகத்தினால் ஏற்றி
அகந்தையின் தீவிரம் விரட்டி
இன்னலைப் புரியும் தீவிர வாதி
இழி செயல் கண்டு நாம் தடுப்போம்
அன்பெனும் அறத்தைத் துடுப்பெனக் கொண்டே
அனுதினம் தீமையை மாய்த்தே
வன் செயல் எனும் மடமை போர் விழ
வலிமையாய் அன்பினைச் சேர்ப்போம்.

செல்வி யதுசாயினி
சத்திய சாயி பாடசாலை,
மானிப்பாய்.

பரிசளிப்பு விழாவில சமர்ப்பித்தது
06.07.2018






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய மணத்தம்பதிகளை 16உம் பெற்று வாழ்க எனக் கூறுவோம். அவையாவை?

1. கலையாத கல்வியும், குறையாத வயதும், ஓர் கபடு வராத நட்பும், குன்றாத வளமையும், குன்றாத இளமையும், கழுபிணி இல்லாத உடலும், சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும், தவறாத சந்தானமும், தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும், தடைகள் வராத கொடையும், தொலையாத நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் வராத வாழ்வும் துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டுக் கண்டாய்...

அபிராமிப் பதிகம்
அபிராமி பட்டர்

2. துதி, வாணி, வீரம், விசயம், சந்தானம், துணிவு, தனம், அதிதானியம், சஷபாக்கியம், போகம், அறிவு, அழகு, புதிதாம் பெருமை, அறம், குலம், நோயின்மை, பூண்வயது 16 பேறும் தருவாய் மதுரை பராபரனே.

காளமேகப் புலவர்

1. கலையாத கல்வியும், குறையாத வயதும், ஓர் கபடு வராத நட்பும், குன்றாத வளமையும், குன்றாத இளமையும், கழுபிணி இல்லாத உடலும், சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும், தவறாத சந்தானமும், தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும், தடைகள் வராத கொடையும், தொலையாத நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் வராத வாழ்வும் துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டுக் கண்டாய்...

அபிராமிப் பதிகம்
அபிராமி பட்டர் .

2. துதி, வாணி, வீரம், விசயம், சந்தானம், துணிவு, தனம், அதிதானியம், சஷபாக்கியம், போகம், அறிவு, அழகு, புதிதாம் பெருமை, அறம், குலம், நோயின்மை, பூண்வயது 16 பேறும் தருவாய் மதுரை பராபரனே.


காளமேகப் புலவர்

Fame, Education, Courage, Success, Progeny, Bravery, Wealth, Grain, Food fortune, Enjoyment, Knowledge, Beauty, Honors, Charity, Lineage, Healthy Long life

(நாம் புது மணத் தம்பதிகளை 16உம் பெற்று வாழ்க என்று வாழ்த்துவோம். அந்தப் பதினாறும் எவை என்று அநேகமாகத் தெரியாது. அபிராமிப் பட்டர், காளமேகப் புலவர், மேலும் 16 இந்து சம்பிரதாயச் சடங்குகள் எல்லாம் இதில் அடங்கும்)

16 செல்வங்கள் - இந்துமதக் கிரியைகள்

1. கர்ப்ப தானம் -சுபநேரத்தில் செய்ய வேண்டும். குழந்தை வேண்டுமென்ற பிரார்த்தனை.
2. பும்சவனம் - 3/12 கர்ப்பம் - தெய்வீகமான குழந்தை கிடைக்கவேண்டுமென்றும், பாதுகாப்பாக வளர வேண்டுமென்றும்
3. சீமந்தம் - 7/12 மாதத்தில் சுகப் பிரசவத் திற்காகச் செய்யப்படுவது.
4. ஜனதகரணம் - குழந்தை பிறந்தநேரம், திகதி குறிக்கப்பட்டு, 72 மணித்தியாலங்களிற்குப் பின்பு ஜாதகக் குறிப்பு எழுதப்படுகிறது.
5. நாமகரணம் - பிறந்து மூன்று மாதத்திற்குப் பின்பு நாமம் வைத்தல் (பெயரிடல்)
6. நின்கிரமம் - நிதாமனை நாலாவது மாதத்தில் குழந்தையை வெளியே கொண்டுவருவது
7. அன்னபிரஸ்தம் - 8 மாதங்களுக்குப் பிறகு சோறு தீர்த்துதல்
8. சுரண வேதம் - காது குத்துதல், தலை மயிர் வழித்தல் சூடகரணம் - (1 - 5 வயது வரை)
9. வித்தியாரம்பம் - எழுத்தறிவித்தல்
10. உபநயனம் - பூணூல் அணிவித்தல், கல்வி கற்க ஆரம்பித்தல்.
11. வேதாரம்பம் - வேதக்கல்வி பயிலுதல்
12. சமவர்த்தனம் - வெளிநாடு போய்வந்தால் தலைமயிர் வழித்தல்
13. கேசாந்தம் - தாடி வழித்தல் - குருகுலக் கல்வி முடிவில்
14. திருமணம் - கிருகஸ்த நிலையடைதல்
15. அந்திய தூபி உடலுக்கு
16. ஆத்ம சாந்தி ஆத்மாவிற்கு.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr. நரேந்திரநாத் ரெட்டி அவர்கள் ரேடியோசாய் குழுவிற்கு அளித்த செவ்வியிலிருந்து (June 2007) சில குறிப்புகள் :**



அமெரிக்காவில் வைத்திய நிபுணராகப் பணி புரிபவர். சத்திய சாயி சர்வதேச மருத்துவக் குழுவின் தலைவருமாவார். 5 வயதில் (1950) சுவாமியின் தரிசனம் கிடைத்தது என்றாலும் 1970ஆம் ஆண்டில்தான் சுவாமியின் பக்தரானார். 1984ஆம் ஆண்டு நேர்காணல் கிடைத்தது. அப்போது சுவாமியிடம் 'நான் சிறு வயதிலிருந்து ஷீரடி சாயி பகவானைக் கும்பிட்டு வருகிறேன். சுவாமியை 1950 இலேயே தரிசித்தேன். என்றாலும் ஏன் இவ்வளவு காலம் தாழ்த்தி என்னை நேர் காணலுக்கு அழைத்துள்ளீர்கள்?' என்று கேட்டதற்கு சுவாமி, **'பிள்ளாய், எதற்கும் சரியான நேரம் வரவேண்டும். இப்போதுதான் சரியான நேரம் வந்துள்ளது'** என்று பதில ளித்தார். மேலும் 'ஒரு பழம் மரத்திலிருந்து பழுத்த பின்புதானே இனிப்பாயிருக்கும்' என்றும் சொன்னார்.

பின்பு அடிக்கடி நேர்காணல்கள் கிடைத்தன. பிரசாந்தி நிலையத்தை விட்டுப் போக முன்பு சுவாமியின் அனுமதி பெற்றுத்தான் போவேன். ஒருமுறை அனுமதி கேட்டபொழுது **'வருவதும் போவதும் வருவதும் போவதும்'** என்று சொன்னார். எனக்கு இப்போதுதான் இதன் உண்மையான கருத்து தெரிந்தது. அதாவது பிறக்கிறதும் இறக்கிறதும் என்பதையே குறிப்பிட்டிருந்தார்.

அவர் எனது மகளின் விவாகத்தை பிருந்தாவனத்தில் நடத்திவைத்தார். வியாதி களிலிருந்து காப்பாற்றியுள்ளார். விபத்து களிலிருந்து காப்பாற்றியுள்ளார். அமெரிக் காவில் எனது தந்தையார் தொடர்ச்சியாக வலி வந்து மிகவும் மோசமான நிலையிலிருந்தார். தாயார் சுவாமி அறையில் கால்களை இறுகப் பிடித்து காப்பாற்றும்படி பிரார்த் தித்தார். தந்தையார் சுகமடைந்தார். இதன் பின்பு பிரசாந்தி நிலையத் திற்கு சென்றபோது நேர் காணலில் எனது தாயார் எப்படிக் கெட்டியாகக் கால் களைப் பிடித்து வணங்கினார் என்று சொன்னார். இது சுவாமி எங்கும் உள்ளவர், எல்லாம் அறிபவர். கூப்பிட்டதும் வந்து உதவி செய்வார் என்பதைக் குறிக்கின்றது.

1985ஆம் ஆண்டு அமெரிக்காவில் கார் விபத்தில் அகப்பட்டு தெய்வாதீனமாக காயமின்றி தப்பினேன். பின்பு பிரசாந்தி நிலையத் தில் நேர்காணலின்போது **'நீ என்னை மறந்தாலும் நான் உன்னைக் காப்பாற்றினேன்'** என்று சொன்னார். விபத்து நடந்தபோது நான் சுவாமி யை நினைக்கவில்லை. இந்தத் தெய்வம் நாம் மறந்தாலும் எம்மை காப்பாற்றுவார். ஒருமுறை, வாழ்வே ஒரு கனவு என்றால் சுவாமியும் கனவா? என்று கேட்டேன். 'நான் விழிப்பு நிலை, கனவுநிலை, கனவற்ற தூக்க நிலை, துரிய நிலை ஆகிய நான்கு நிலை களிலும் உள்ளேன்' என்று பட்டென்று பதில ளித்தார். இதனால், தானே குணம், ரூபங்கள் எல்லாவற்றிற்கும் அப்பாலுள்ள பிரம்மன் என்பதை சொல்லித் தந்தார். தொடர்ந்து மிகவும் பணிவுடன் 'சுவாமி தங்களுக்கு சேவை புரிய விரும்புகிறேன். ஷீரடி சாயி பாபாவைப் பற்றி அளித்த அருளுரையை தெலுங்கு மொழியி லிருந்து ஆங்கில மொழிக்கு மொழி பெயர்க்க விரும்புகிறேன்' என்று சொன்னேன்.

சுவாமி உடனே **'எல்லாவற்றிலும் மேலான சேவை, நான் யார்? என்று அறிவதே யாகும்'** என்று பதிலளித்தார். மேலும் 'எனது வாசனை கள் இதை உணர விடுவதாயில்லை. மிகவும் கடினமான பாதை' என்று சொன்னேன். சுவாமி **'எவ்வளவு காலம், எவ்வளவு இருட்டாக இருக்கும் குகைக் குள்ளே விளக்கை ஏற்றினால் இருள் உடனே அகன்றுவிடும்'** என்று பதிலளித்தார்.




சுவாமி 'நான் ஷீரடி சாயி பகவானுக்குப் பூவைத்த பின்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியின் படத்திற்குப் பூ வைக்கிறேன்.' என்று சொன்னேன். சுவாமி 'எல்லா உருவங்களும் நானே. ஆகையால் நீ செய்வதில் பிழையில்லை. உண்மையில் நீ உன் தலையில் பூவைப் போடலாம். நீயும் தெய்வம் தானே!' என்று பாடம் படிப்பித்தார். இதை நிரூபித்தது போல ஒருமுறை சுவாமி யுடன் காரில் பயணம் செய்தேன். வழி நீட்டில் அன்பர்கள் காரை நோக்கிப் பூக்களை எறிந்தார்கள். ஒரு வெளிநாட்டுப் பெண் மிகவும் பலவீனமாகக் காணப்பட்டார். அவர் பூவை எறிந்த பொழுது பூ அவரின் தலைமேலே விழுந்ததைச் சுவாமி காட்டி, 'சுவாமிக்கு பூப் போட வேண்டுமென்று போட அவரின் தலை யிலேயே விழுந்தது. அவர் செய்தது சரி. அவரும் தெய்வம்தானே' என்று விளக்கினார்.

எனது முதல் நேர்காணலில் ஒரு புத்தகத்தை நீட்டி சுவாமியின் கையெழுத்தைப் போடுமாறு கேட்டேன். அப்போது மின்சாரம் தடைப்பட்டு இருட்டாயிருந்தது. சுவாமி எனது கண்களை உற்று நோக்கி, 'எனக்கு இரவிலும் ஒரு எறும்பு தொலைவில் ஊர்ந்தாலும் தெரியும். இளம் வயதிலே நீங்கள் எல்லாம் கண்ணாடி போடுகிறீர்கள். கண்ணாடியில்லாமல் எனது பார்வை நன்றாக இருக்கிறது' என்று சொன்னார். நான் அப்போது சுவாமி நீங்கள் தெய்வம். அதனால் தான் பார்வை குறையவில்லை என்று சொன்னேன். இதற்கு சுவாமி 'என்னுடைய நன்மைக்காக எனது சக்தியைப் பாவிப் பதில்லை. கட்டுப்பாடு, புலனடக்கத்துடனும் வாழ்வதாலும் சாத்வீக உணவு உண்பதாலும் எனது உடல் நலத்தைப் பேணுகின்றேன். நீயும் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தால் உடல் நலம் மேன்மை யோங்கும்.' என்று சொன்னார். அப்போது என் தந்தையார் சுவாமி பஞ்ச பூதங்களிலிருந்து சக்தியெடுப்பார் என்று சொல்ல, சுவாமி பஞ்ச பூதங்கள் எனது சக்தி யில்தான் இயங்குகின்றன என்று திருத்தினார்.

ஒருமுறை பிருந்தா வனத்தில் சுவாமி என்னையும் திரு. V.K. நரசிம்மன் (முன்னாள் சனாதன சாரதி ஆசிரியர்) அவர்களையும் அழைத்து அத்வைத தத்துவம் பற்றி விளக்கினார். நாங்கள் பகலில் பார்ப்பதெல்லாம் பகற்கனவு. இரவில் தெரிவதெல்லாம் இரவுக் கனவு. எல்லாமே கனவு என்று சொன்னார். நரசிம்மன் அவர்கள் ராமானுஜத்தின்



விஷிஷ்டத் வைதத்தில் தான் நம்பிக்கை கொண்டவர். எல்லாம் ஒரேமாதிரியாக இருந்தால் ஆனந்தம் எங்கே? பலநிறம், பூக்கள்தானே எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது என்று எனக்கு சொன்னார். அடுத்தநாள் எங்களைக் கூப்பிட்டபோது இந்த கருத்து வித்தி யாசத்தை தெளிவாக்கும்படி அவரிடம் கேட்டோம். சுவாமி, 'நான் சொல்வது சத்தியம். எல்லாவற்றிலும் இருப்பதே சத்தியம். ஏனைய தெல்லாம் மாயை. நரசிம்மன் சொன்னது அவரின் நம்பிக்கை. அது சத்தியமல்ல' என்று பதிலளித்தார்.

இன்னொரு தடவை சுவாமியிடம் நான் தொடர்ச்சியாக சுவாமியின் சேவையி லிருக்க விரும்புகிறேன், அடுத்த அவதாரத்திலும் சுவாமிக்கு சேவை செய்ய அருள வேண்டும் என்று கேட்டேன். சுவாமி, 'இது சரியல்ல. இப் பிறப்பையே கடைசியாக்குவதையே இலக்காகக் கொண்டிருக்க வேண்டும்' என்றார். இம் மாதிரியான அன்பு எப்பொழுதும் நீடித்திருக்க வேண்டுமென்றேன். சுவாமி, 'ஏன் சந்தேகப்படவேண்டும். சுவாமி பெரிய காந்தம். எப்போதும் இரும்பைக் கவரும். இரும்பு துருப்பிடித்தால் காந்தம் இழுக்காது. ஆகவே தூய்மையாக இருந்தால் உறவும் நீடிக்கும்' என்று சொன்னார். இறைவனின் கிருபை எல்லா விதிகளையும் மாற்ற வல்லது என்று சொல்லி முடித்தார். பெரிய முனிவர் களான வசிஷ்டர், விஸ்வாமித்திரர், ஜமதாக்னி மாயையில் வீழ்ந்துள் ளார்கள். ஆகவே எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று சொன்னார்.




ஜெய் சாயிராம்

நன்றி : ரேடியோ சாய் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழுக்கலந்துரையாடல்கள்



பயிற்சிப்பட்டறைகள்



பயிற்சிப்பட்டறைகள்



[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலவாக்கல சாயி நிலையம் - தென் மாகாணம்



முகப்புப் பகுதி



பிரார்த்தனை மண்டபம்





COLOURS Nallur, 0212229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org